வெளியீடு 17-07-2006

Issued 17-07-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 29, 2006—தொகுதி 3 — எண் 1

Monday, the 29th May 2006 —Volume 3 — No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

13/11/2006

## 29–5–2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v - x |
| Governor and Council of Ministers | xi - xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii - xix |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi - xxxii |
| **1. இரங்கல் தீர்மானம்—** | |
| இந்தோனேசியாவில் நில நடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் | 1 - 2 |
| **2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | 2 - 3 |
| (அ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006 | 2 - 3 |
| (ஆ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006 | 3 |
| **3. உரிமை மீறல் பிரச்சினை—** | |
| முன்னாள் முதலமைச்சர் மீது | 4 - 5 |

பக்கங்கள்

4. தகவல் கோரல்—

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் நீக்கிவைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல் — 5-12, 21-22

திரு. மு. கண்ணப்பன் — 5-6, 7-8

திரு. வை. சிவபுண்ணியம் — 6, 22

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் — 6

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 7

திரு. ஜி.கே. மணி — 8

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 8-9, 10-11, 22

*திரு. கு. செல்வம் — 9, 11-12, 21

திரு. சி. கோவிந்தசாமி — 10

*திரு. கி. ஆறுமுகம் — 12

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி — 11, 12-21, 22-44, 46-123

*திரு. கி. ஆறுமுகம் — 12-21

திரு. ட்டி. இராமசந்திரன் — 22-27

*திரு. விஜயகாந்த் — 28-32

திரு. பா. வேல்துரை — 32-41

திரு. எச். அப்துல் பாசித் — 41-44





பக்கங்கள்

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

திரு. வை. சிவபுண்ணியம் — 46-72

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் — 64-65, 110-123

*திரு. சி. கோவிந்தசாமி — 73-89

*திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன் — 90-97

*திரு. கு. செல்வம் — 98-103

*திரு. பா. செந்தமிழ்செல்வன் — 104-110

6. அரசினர் தீர்மானம்—

நீக்கிவைக்கப்பெற்ற அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை வரவு-செலவுக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள வகை செய்தல் — 45

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 45

7. உரிமை மீறல் பிரச்சினையை எடுத்துக்கொள்வது குறித்து— — 46

திரு. சி. ஞானசேகரன் — 46

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 123

D
V2,11,3,106
P06,3,1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227073
சென்னை-600 008
நூலகம்

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. **முதலமைச்சர்** | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**<br>பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மொலாசஸ், சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி—தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள் |
| 2. **நிதி அமைச்சர்** | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**<br>நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள் |
| 3. **மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**<br>மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் |

4. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. **கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

7. **பொதுப் பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்

8. **உயர் கல்வித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

9. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

10 **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்

11. **வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

12. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

13. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

14. **உணவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. **வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

16. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

17. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



18. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

19. **கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித்தொழில்

20. **பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

21. **வணிக வரித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:**

வணிக வரிகள்

22. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

23. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனம் மற்றும் சின்கோனா

24. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை ஆலடி அருணா:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

26. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

27. **ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

28. **மீன்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

29. **பால் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

30. **கதர் வாரியத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports.

2. **Minister for Finance** : **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections.

3. **Minister for Electricity and Rural Industries** : **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries.

4. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Union, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

5. **Minister for Co-operation** : **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics.

6. **Minister for Agriculture** : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** : **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Higher Education** : **The Hon. Dr. K. Ponmudy:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen.

9. **Minister for Transport** : **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act.

10. **Minister for Backward Classes** : **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act.



11. **Minister for Revenue and Law** : **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies.

12. **Minister for Tourism** : **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation.

13. **Minister for Information and Publicity** : **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority.

14. **Minister for Food** : **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control.

15. **Minister for Housing and Slum Clearance** : **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste Land Development.

16. **Minister for Health** : **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare.

| | | |
|---|---|---|
| 17. Minister for Labour | : | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment. |
| 18. Minister for Hindu Religious and Charitable Endowments | : | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments. |
| 19. Minister for Handlooms and Textiles | : | **The Hon. Thiru N. K. K. P. Raaja:** Handlooms and Textiles. |
| 20. Minister for School Education | : | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology. |
| 21. Minister for Commercial Taxes | : | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes. |
| 22. Minister for Environment | : | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs. |
| 23. Minister for Forests | : | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona. |



| | | |
|---|---|---|
| 24. Minister for Highways | : | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports. |
| 25. Minister for Social Welfare | : | **The Hon. Dr. (Tmt.) Poongothai Aladi Aruna:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal. Welfare of the Disabled, Orphanages and Correctional Administration. Integrated Child Development and Beggar Home. |
| 26. Minister for Animal Husbandry | : | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry. |
| 27. Minister for Adi Dravidar Welfare | : | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare. Hill Tribes and Bonded Labour. |
| 28. Minister for Fisheries | : | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation. |
| 29. Minister for Dairy Development | : | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development. |
| 30. Minister for Khadi | : | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board. Bhoodan and Gramdhan. |

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வி.பி. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல் முருகன்

செல்வி க. பாலபாரதி

திரு வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

# 26-5-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவா

திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. உவ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. .. குழு அலுவலர்

திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. கோவிந்தரா[illegible], எம்.ஏ., பி.எல்., பி.எட். .. துணைச் செயலாளர்

திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி சி. நிர்மலா, பி.காம். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கோ. தேவராசன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., பி.ஜி.எல். .. பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. நா. வீராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. .. தலைமை நிருபர்

திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. .. சார்புச் செயலாளர்

திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கோ. சுப்புராம், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. அ. நவாப் ஜான், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. கதிரேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்

திரு. து. சீனிவாசன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. ம. பன்னீர் செல்வம் .. தலைமை நிருபர்

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு மு. | .. ராதாபுரம் |
| 4. | அமாமூர்த்தி, திரு டி. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு | .. திருச்சிராப்பள்ளி— |
| 14. | ஆவுடையப்பன், திரு இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு | .. அண்ணா நகர் |
| 17. | இராமகிருஷ்ணன், திரு நா. | .. கம்பம் |

18. இராமசந்திரன், திரு. ட்டி. .. தளி
19. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
20. இராமசாமி, திரு. டி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
21. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்
22. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
23. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
24. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
25. இராஜசேகரன், திரு. எஸ். .. ஆலங்குடி
26. இராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்
37. உதயம்சண்முகம், திரு. .. அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)



40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி
51. கலியவாதன், திரு. வி.அ.த. .. முகையூர்
52. கலிலூர் ரஹமான், திரு. ம.அ. .. ஆவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரிதேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி

| | | |
|---|---|---|
| 60. | குணசேகரன், திரு. சு. | .. சிவகங்கை |
| 61. | குணசேகரன், திரு. ம. | .. மானாமதுரை (செ.வ.) |
| 62. | குத்தாலம் க. அன்பழகன், திரு. | .. குத்தாலம் |
| 63. | குமரகுரு, திரு. இரா. | .. திருநாவலூர் |
| 64. | குருசாமி, திரு. செ. | .. அந்தியூர் (செ.வ.) |
| 65. | கோபாலன், திரு. பி. | .. உதகமண்டலம் |
| 66. | கோபிநாத், திரு. கே. | .. ஓசூர் |
| 67. | கோவிந்தசாமி, திரு. சி. | .. திருப்பூர் |
| 68. | கோவை தங்கம், திரு. | .. வால்பாறை (செ.வ.) |
| 69. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 70. | சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 71. | சண்முகம், திரு. எஸ்.வி. | .. மதுரை மேற்கு |
| 72. | சண்முகம், திரு. சி.வி. | .. திண்டிவனம் |
| 73. | சண்முகவேலு, திரு. சி. | .. உடுமலைப்பேட்டை |
| 74. | சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. | .. வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 75. | சந்திரகாசி, திரு. மா. | .. வரகூர் (செ.வ.) |
| 76. | சந்திரா, திருமதி. மு. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 77. | சாமி, திரு. ஆர். | .. மேலூர் |
| 78. | சாமி, திரு. கே.பி.பி. | .. திருவொற்றியூர் |
| 79. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 80. | சிவசங்கர், திரு. எஸ்.எஸ். | .. ஆண்டிமடம் |
| 81. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 82. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 83. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 84. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருவள்ளூர் |
| 85. | சின்னசாமி, திரு. அ. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 86. | சின்னசாமி, திரு. ஆர். | .. சிங்காநல்லூர் |
| 87. | சின்னசாமி, திரு. சி. | .. மருங்காபுரி |
| 88. | சின்னதுரை, திரு. கு. | .. தலைவாசல் (செ.வ.) |
| 89. | சின்னப்பன், திரு. பொ. | .. விளாத்திகுளம் |
| 90. | சின்னராஜ், திரு. ஓ.கே. | .. மேட்டுப்பாளையம் |
| 91. | சீனிவாசன், திரு. கு. | .. பூங்கா நகர் |
| 92. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 93. | சுந்தரம், திரு. எம்.ஆர். | .. ஆத்தூர் |
| 94. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 95. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 96. | சுப்பிரமணியம், திரு. ஓ. | .. பவானிசாகர் |
| 97. | சுப்பிரமணியம், திரு. ந. | .. குளத்தூர் (செ.வ.) |
| 98. | சுப்புராம், திரு. ராம. | .. திருமயம் |
| 99. | சுரேஷ் ராசன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 100. | சூரியகுமார், திரு. என்.கே.ஆர். | .. நாட்றாம்பள்ளி |

| | | | |
|---|---|---|---|
| 101. | செங்குட்டுவன், திரு. டி. | .. | கிருஷ்ணகிரி |
| 102. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | .. | கோபிசெட்டிப்பாளையம் |
| 103. | செந்தமிழன், திரு. ஞா. | .. | சைதாப்பேட்டை |
| 104. | செந்தமிழ்செல்வன், திரு. பா. | .. | மேல்மலையனூர் |
| 105. | செந்தில் பாலாஜி, திரு. வி. | .. | கரூர் |
| 106. | செல்வம், திரு. கு. | .. | மங்களூர் (செ.வ.) |
| 107. | செல்வராஜ், திரு. து. | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 108. | செல்வராஜ், திரு. ந. | .. | முசிறி |
| 109. | செல்வி இராமஜெயம், திருமதி | .. | புவனகிரி |
| 110. | சேகரன், திரு. கே.என். | .. | திருவெறும்பூர் |
| 111. | சேகர், திரு. எஸ்.வி. | .. | மயிலாப்பூர் |
| 112. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 113. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. | குன்னூர் (செ.வ.) |
| 114. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. | லால்குடி |
| 115. | ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 116. | ஞானதாஸ், திரு. ஆர். | .. | சிவகாசி |
| 117. | டில்லி பாபு, திரு. ப. | .. | அரூர் (செ.வ.) |
| 118. | தங்கமணி, திரு. பி. | .. | திருச்செங்கோடு |
| 119. | தங்கம் தென்னரசு, திரு. | .. | அருப்புக்கோட்டை |
| 120. | தங்கவேலன், திரு. சுப. | .. | கடலாடி |
| 121. | தண்டபாணி, திரு. மா. | .. | வேடசந்தூர் |



| | | | |
|---|---|---|---|
| 122. | தமிழரசி, திருமதி ஆ. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 123. | தமிழரசு, திரு. அ. | .. | ஓமலூர் |
| 124. | தமிழ்செல்வன், திரு. சி. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 125. | தம்பிதுரை, டாக்டர் மு. | .. | பர்கூர் |
| 126. | தர்மலிங்கம், திரு. எல்.பி. | .. | சத்தியமங்கலம் |
| 127. | தாமோதரன், திரு. செ. | .. | கிணத்துக்கடவு |
| 128. | தியோடர் ரெஜினால்ட், திரு. த. | .. | பத்மநாபபுரம் |
| 129. | திருநாவுக்கரசு, திரு. கே. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 130. | துரைக்கண்ணு, திரு. இரா. | .. | பாபநாசம் |
| 131. | துரை சந்திரசேகரன், திரு. | .. | திருவையாறு |
| 132. | துரைசாமி, திரு. வி.பி. | .. | சங்கரி (செ.வ.) |
| 133. | துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 134. | துரைராஜ், திரு. சி. | .. | சேடப்பட்டி |
| 135. | தேன்மொழி, திருமதி எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 136. | நன்மாறன், திரு. என். | .. | மதுரை கிழக்கு |
| 137. | நெடுஞ்செழியன், திரு. க. | .. | கபிலர்மலை |
| 138. | நெடுஞ்செழியன், திரு. ரெ. | .. | புதுக்கோட்டை |
| 139. | நேரு, திரு. கா.நா. | .. | திருச்சிராப்பள்ளி—2 |
| 140. | பதர் சையீத், திருமதி | .. | திருவல்லிக்கேணி |
| 141. | பத்மாவதி, திருமதி. பி. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 142. | பாஞ்ஜோதி, திரு. மு. | .. | ஸ்ரீரங்கம் |
| 143. | பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |

144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
147. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
148. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
149. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை ஆலடி அருணா, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி



5. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
6. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
7. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
8. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
9. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
0. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
1. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
2. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
3. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
4. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
5. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
6. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)
7. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
8. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
9. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
0. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
1. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
2. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
3. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
4. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
5. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
6. மோகன், திரு. பெ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

| | | | |
|---|---|---|---|
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம் | .. | பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. | வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. | பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. டி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | .. | சேலம்–1 |
| 193. | ராணி, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 194. | ராணி வெங்கடேசன், திருமதி | .. | சாத்தான்குளம் |
| 195. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | .. | கோவில்பட்டி |
| 196. | ராமசந்திரன், திரு. கா. | .. | கூடலூர் |
| 197. | ராமநாதன், திரு. கே.வீ. | .. | பவானி |
| 198. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | .. | இளையான்குடி |
| 199. | ராஜகுமார், திரு. எஸ். | .. | மயிலாடுதுறை |
| 200. | ராஜன், திரு. அ. | .. | நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்.கே.கே.பி. | .. | ஈரோடு |
| 202. | ராஜேந்திரன், திரு. ஏ. | .. | வீரபாண்டி |
| 203. | லட்சுமணன், திரு. ச. | .. | போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | .. | குடியாத்தம் |
| 205. | லீமா ரோஸ், திருமதி ரா. | .. | திருவட்டாறு |
| 206. | வசந்த குமார், திரு. எச். | .. | நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | .. | விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |



| | | | |
|---|---|---|---|
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | .. | காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | .. | விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | .. | கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | .. | போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. | செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. | பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | சேலம்–2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | .. | தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | .. | பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 222. | வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. | கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. | விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | .. | குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. | வந்தவாசி (செ.வ.) |

| | | |
|---|---|---|
| *231.* | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| *232.* | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| *233.* | ஹசன் அலி, திரு. கு. | .. இராமநாதபுரம் |
| *234.* | *(வெற்றிடம்)* | .. மதுரை மத்தி |
| *235.* | *(வெற்றிடம்)* | .. நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 15, விய — திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 மே 29, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில், காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

நீதி நெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளர்தான் மக்களுக்குத் தலைவர் எனப் போற்றப்படுவார்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கல் தீர்மானம்

### இந்தோனேசியாவில் நில நடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *27–5–2006* அன்று இந்தோனேசியா நாட்டில் நிலநடுக்கத்தின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து இரங்கல் தீர்மானம்:

"*27–5–2006* சனிக்கிழமையன்று, இந்தோனேசியா நாட்டிலுள்ள ஜாவா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாகப் பெருமளவில் உயிரிழப்பும், பெருத்த சேதமும் ஏற்பட்டுள்ள துயரச் செய்தியை அறிந்து, இப்பேரவை அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறது. கொடிய இந்த இயற்கைப் பேரிடரால், இன்னுயிரை இழந்துவிட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் குடும்பத்ினருக்கும், இடிபாடுகளில் சிக்கிப் படுகாயமுற்று, எல்லையில்லாத் துன்பங்களுக்கு ஆளாகியிருப்போருக்கும், பெரும்

சதத்திற்கு ஆளாகியுள்ள இந்தோனேசியா நாட்டு மக்களுக்கும் )ப்பேரவை தனது ஆழ்ந்த அதிர்ச்சியையும், இரங்கலையும், ,னுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்வகையில் மாண்புமிகு றுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் ,மைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு ணித் துளிகள் அமைதிகாத்ததன்மூலம் இரங்கல் தீர்மானம் றைவேற்றப்பெற்றது.)*

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் .றிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் டை (நீக்கச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் றை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்க..) ட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க ண்டும்"

னக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் ட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு .ப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 9–35*

## 3. உரிமை மீறல் பிரச்சினை

### முன்னாள் முதலமைச்சர் மீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள். தாங்கள் கொடுத்துள்ள உரிமை மீறல் பிரச்சினைமீது தங்கள் கருத்துகளைக் கூறலாம்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26–5–2006 ஆம் நாள் பேரவையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி, பேரவைக்கு வராத சட்டமன்ற உறுப்பினர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஒரு பேட்டி அளித்திருக்கிறார்கள். 26 ஆம் தேதி இந்தச் சட்டமன்றத்திலே நடந்த சம்பவங்கள் அனைத்தையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், அ.தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள், வேண்டுமென்றே அவருடைய பேச்சைத் தடுத்தது மட்டுமல்லாமல், கலவரத்தை உண்டாக்கி, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைத் தாக்கி, mike–ஐ உடைத்து, கலவரம் செய்ததோடு மட்டுமல்லாமல், நீங்கள், அ.தி.மு.க. உறுப்பினர்களை வெளியேற்றியதற்குப் பிறகு, சேகர்பாபு என்ற சட்டமன்ற உறுப்பினர், ஒரு முறை வெளியே சென்று, மறுபடியும் இந்த அவைக்கு வேகமாக வந்து, முதலமைச்சருக்கு முன்னாலே நின்று தாக்குவதற்கு முற்பட்ட நிகழ்ச்சியும், அதை மாண்புமிகு அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்களும் தடுத்த நிகழ்ச்சியும், அவையிலே இருக்கக்கூடியவர்களும், பத்திரிகையாளர்களும் நேரடியாகப் பார்த்து, அது, 'தினமணி' பத்திரிகையிலேயும் விவரமாக வெளிவந்திருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலையில், பேரவைக்கு வராத உறுப்பினர் ஜெயலலிதா அவர்கள், ஒரு பேட்டி கொடுத்து, அந்தப் பேட்டி, 'நமது எம்.ஜி.ஆர்.' என்ற அவர்களுடைய பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகையிலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், காங்கிரஸ் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்று உண்மைக்கு மாறான, இந்தச் சபையிலே நடக்காத ஒரு சம்பவத்தைப்பற்றி அவர்கள் பேட்டியாகக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், ஜெயா T.V.–யிலேயும் அடிக்கடி அதைக் காட்டிக்



கொண்டேயிருந்தார்கள். இது இந்த அவையினுடைய உரிமை மீறிய பிரச்சினையாகும். எனவே, இந்தப் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, தீர விசாரித்து உரிய தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226–ன்கீழ், இப்பிரச்சினை குறித்து விசாரித்து, ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, அவை உரிமைக் குழுவுக்கு அனுப்புகிறேன்.

## 4. தகவல் கோரல்

### அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் நீக்கிவைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல்

**திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 26 ஆம் தேதியன்று பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கே தங்களுடைய ஆணைக்கு இணங்கி, சபையில் இருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய, அந்தச் சம்பவம் பற்றிய முடிவினை அலுவல் ஆய்வுக் குழு மேற்கொள்ளும் என்று தாங்கள் அறிவித்திருந்தீர்கள். சபை முடிவதற்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. அந்த முடிவு பற்றி தெரியவில்லை, அதோடு, 121 (1) வது விதியின்கீழ் அன்றைக்குத் தாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருந்தீர்கள். அந்த விதியில் "ஒரு உறுப்பினர் பேரவைத் தலைவரின் அதிகாரத்தைப் புறக்கணித்தோ அல்லது பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்றுப் பயன்படுத்தி, வேண்டுமென்றே பேரவையின் அலுவலை நடைபெறாது இடைமறித்தாலோ, பேரவைத் தலைவர் தேவை என்று கருதினால், அந்த உறுப்பினரின் பெயரிட்டுக் குறிப்பிடலாம்.

அவ்வாறு பேரவைத் தலைவரால் ஒரு உறுப்பினர் பெயரிட்டுக் குறிப்பிடப் பெற்றால், அந்த உறுப்பினர் பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சியுள்ள நாட்களுக்கு மிகாமல் நீக்கி வைக்கப்படலாம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒரு உறுப்பினர் என்று குறிப்பிட்டிருக்கிறதே தவிர, ஒட்டுமொத்தமாக எல்லா உறுப்பினர்களையும் அந்த விதிமுறையின்கீழ் தாங்கள் வெளியேற்றியிருப்பது சரியானதாகுமா என்பதையும் சிந்திக்க வேண்டும். இரண்டாவது, இதைப்பற்றிய

முடிவையும் உடனடியாக அறிவித்தால், இரண்டு நாட்களிலே சபை முடிவதாக இருக்கின்றது; அந்த உறுப்பினர்கள் இந்தச் சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய கண்ணப்பன் அவர்கள், ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். இதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசப்பட்டது. சம்பந்தப்பட்டிருக்கிற அந்த உறுப்பினர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று, தாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவினுடைய தீர்வாகத் தீர்ப்பளித்தீர்கள். இந்த அவையிலே. அதை ஏற்றுக்கொள்வதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய கண்ணப்பன் அவர்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள்; அதன்மீது அவர்கள் தெளிவான அந்தக் கருத்தைச் சொன்னால், நாம் அதன்மீது பேசுவதற்கோ அல்லது நாங்கள் புரிந்துகொள்வதற்கோ வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, ஒரு விதியை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விதிக்கு உட்பட்டு, ஒரு நபர் என்று இருக்க வேண்டுமென்று அவர் கருதுகின்றார். அப்படி அந்த விதியிலே, பல நபர்கள் அந்தக் காரியங்களிலே ஈடுபட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி பலர் அந்தமாதிரியான சம்பவங்களில் ஈடுபட்டால், அதற்குரிய தண்டனையைப் பேரவைத் தலைவர் அவர்கள் வழங்குவதற்கு அதிகாரம் இருப்பதாக நான் கருதுகிறேன். ஆகவே, இதன்மீது உரிய முறையிலே அவர் கருத்தைச் சொன்னால், அதன்மீது நாங்கள் புரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-10

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** விதி எண் 117 மிகத் தெளிவாக இருக்கிறது: "The Speaker shall have all powers necessary for the purposes of enforcing the rules and preventing disorder." 117-வது விதி, பேரவைத் தலைவருக்கு எல்லா அதிகாரங்களையும் கொடுத்திருக்கிறது. இந்த அவையிலே ஒழுங்கீனத்தைக் கட்டுப்படுத்துவதற்கோ, உறுப்பினர்களை முறையாகச் செயல்படுத்துவதற்கோ விதி எண் 117, பேரவைத் தலைவருக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறது. எனவே விதி 117-ன்கீழ்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அன்று நடந்த சம்பவத்தின்மீது மாண்புமிகு அவையினுடைய முன்னவர் அவர்கள், ஒரு தீர்மானமே கொண்டுவந்து, அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எனவே, இந்த அவையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு, ஓர் உறுப்பினர் செய்தாரா அல்லது எல்லோரும் சேர்ந்து செய்தார்களா என்ற கேள்விக்கே இடமில்லை. எனவே, தாங்கள் கொடுத்த தீர்ப்பைப் பற்றி, கேள்வி கேட்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 26-5-2006 (குறுக்கீடு) உறுப்பினர், உட்காருங்கள். 26-5-2006 ஆம் நாளன்று ஏற்கெனவே ஒரு தீர்மானம், அவையினால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன்மீது பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு அதிகாரம் இல்லை. ஆகவே, இந்த அவையினுடைய தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது என்று முடிவு செய்து, அடுத்த subject-க்குப் போகலாம்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம். (குறுக்கீடு) உறுப்பினர், சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவைப் பற்றி, இன்று முடிவு சொல்வதாகத் தாங்கள் சொல்லியிருந்தீர்கள். அதைப்பற்றிச் சொல்லவும் இல்லை. இன்றைய தினம்...(குறுக்கீடு) இறுதியாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இல்லை. (குறுக்கீடு) அதாவது (குறுக்கீடு) அதாவது அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை அவையில் அறிவிக்கும்போது நீங்கள் இல்லை என்று தெரிகிறது. அதுதான் விஷயம்.

**திரு. மு. கண்ணப்பன்:** வருத்தம் தெரிவித்தால், சபைக்குள்ளே வந்து கலந்துகொள்ளலாம் என்று தாங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். ஒட்டுமொத்தமாக, 60 பேரையும் இந்தச் சபையிலே வருத்தம் தெரிவிக்கச் சொல்வது, அவ்வளவு சரியான காரியமாக எனக்குத் தெரியவில்லை. இரண்டாவது, இது ஜனநாயகத்தினுடைய குரல்வளையை நெரிக்கின்ற

செயலாக இருக்கின்ற காரணத்தால், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்த அவையிலேயிருந்து வெளிநடப்புச் செய்கிறது.

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ம.தி.மு.க உறுப்பினர் மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். விதியிலேயும் இடம் இருக்கிறது; மரபிலேயும் நடைமுறையில் இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். கடந்த காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நேரத்தில், அடாவடித்தனமாக, மரபுக்கு, சட்டத்திற்கு மீறி எதையும் அவர்கள் செய்யாத காலங்களில், அ.தி.மு.க., ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில், அவர்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்றினார்கள். இன்னும், நீதிமன்றத்திற்கு எல்லாம் செல்லக்கூடிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அதெல்லாம் மரபிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இப்போது இருக்கிற அரசு, பேரவைத் தலைவர் அவர்கள், அப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபடாமல், ஜனநாயக ரீதியாக தண்டனை வழங்கியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, இங்கே எடுத்த முடிவு சரியானது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ கடுமையான ஒரு தீர்ப்பளித்து, அ.இ.அ.தி.மு.க. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றிவிட்டதாக, இது ஜனநாயக விரோதச் செயல் என்று திரு. கண்ணப்பன் அவர்கள் இங்கே குறிப்பிட்டு, வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இதுபோன்று அல்ல; இதைவிடக் கடுமையான, ஜனநாயகம் ஏற்றுக்கொள்ளாத, ஜனநாயக மரபுக்கு ஒத்துவருமா என்ற கேள்விக்கு விடை பகர முடியாத, பல நிகழ்ச்சிகள் தீர்ப்புகளாக இந்த அவையிலே நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அளிக்கப்பட்டிருக்கின்றன.



முற்பகல் 9–45

குறிப்பாக, மொழிப் போராட்டத்திற்காக வெளியிலே நடத்தப்பட்ட ஒரு கிளர்ச்சிக்காக நம்முடைய இன்றைய அவை முன்னவர், நிதியமைச்சர் பேராசிரியர் அன்பழகனார் உட்பட 9 பேர், இந்த அவையிலேயிருந்து பதவி பறிக்கப்பட்டு எம்.எல்.ஏ.-க்களாகக்கூட இருக்கக்கூடாது என்று அனுப்பப்பட்ட வரலாறு எல்லாம், இந்த அவைக்கு உரிய வரலாறு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) பரிதி இளம்வழுதி அவர்கள், ஏதோ ஒரு தவறு செய்து விட்டார் — செய்தாரோ இல்லையோ அது வேறு விஷயம் — என்று குற்றம் சாட்டப்பட்டு, அன்று இரவே கைது செய்யப்பட்டு, இந்த அவையிலே நடந்த செய்திக்காக அவர், சிறையிலே அடைக்கப்பட்டு, பிறகு ஜாமீனிலே வெளிவர வேண்டிய சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது. பத்திரிகையிலே எழுதியதற்காக உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டு 'முரசொலி' ஆசிரியர் செல்வத்திற்காகவே தனியாக ஒரு சிறப்புக் கூண்டு தயாரிக்கப்பட்டு, அந்தக் கூண்டிலே செல்வத்தை நிறுத்தி, அழகுபார்த்த அநியாயங்கள் எல்லாம் இந்த அவையிலே நடந்தவைகள். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் மீறிய செயல்கள் அல்ல, இன்றைக்கு நடைபெற்று இருக்கிற செயல் என்பதை சிறுத்தைகளுக்கும் சொல்லிக்கொள்கின்றேன்; வெளியேறிய நண்பர் கண்ணப்பன் அவர்களுக்கும் சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாங்கள் சுட்டிக்காட்டியபடி, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைக் கூட்டத் தொடர் முழுக்க வெளியேற்ற வேண்டாம்; அவர்களுக்கு இந்தத் தண்டனை பெரிய தண்டனை என்று நாங்கள் குறிப்பிட்டு இருந்தோம். அதை மேற்கோள் காட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், விடுதலைச் சிறுத்தைகளின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று சொன்னார். மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், யார் தவறு செய்தார்களோ அவர்களைச் சுட்டிக்காட்டினாலும்கூட பரவாயில்லை. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 60 நபர்களுமா அவை மீறலில் ஈடுபட்டார்கள்? இதுவரை எந்த இடத்திலும் அவர்களின் பெயரைக் குறிப்பிடவில்லை. யார் தவறு செய்தார்களோ அவர்களின்மீது புகார் கொடுத்திருப்பதாக ஆய்வுக் குழுவிலே நீங்கள் சொன்னீர்கள். ஆனால் அனைவரையும் இந்தக் கூட்டத் தொடரிலே அனுமதிப்பதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது, ஜனநாயகக் குரல்வளையை நெரிப்பதாகும். ஆகவே, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், அவர்கள்மீதான தண்டனையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இன்னொருமுறை கூறுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27 ஆம் தேதி அன்று தங்கள் தலைமையில் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் கண்ணப்பன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவர் அவர்களும், அதிலே பங்கேற்றிருக்கிறார்கள். அன்றைக்கு, 'அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் இன்று மாலை 5 மணிக்குள் வருத்தம் தெரிவித்தால், அவர்கள் அடுத்த நாள் சபையில் பங்கேற்கலாம்' என்று நீங்கள் இறுதியாக தெரிவித்த கருத்தை ம.தி.மு.க. உறுப்பினர்களோ, விடுதலைச் சிறுத்தைகள் உறுப்பினர்களோ எந்த இடத்திலும் ஆட்சேபிக்கவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, அங்கே ஏற்றுக்கொண்டுவிட்டு, இப்போது வெளியேயிருந்து யாரோ ஒருவருடைய நிர்பந்தத்திற்காக இன்று இந்த அவையில் தெரிவிப்பது பொருத்தமானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் சார்பாக எழுப்பப்பட்டுள்ள அந்தக் கோரிக்கையை ஆய்வதிலே எந்தத் தவறும் இல்லை. ஆனாலும், நடைபெற்ற சம்பவங்களுக்கு வருந்துகிறோம் என்கின்ற ஒரு பொதுவான, பண்பார்ந்த, வார்த்தையைக்கூட சொல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை; முடியாது என்று பத்திரிகைகளிலேகூட அறிக்கை விடுகிறார்கள்; கூட்டங்களிலே பேசுகிறார்கள் என்றால், இது இந்த அவைக்கு, உரிய மதிப்பைத் தருவதாக ஆகாது. எனினும், விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாக இப்பொழுது வைக்கப்பட்ட அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், நான் தங்களைக் கேட்டுக்கொள்வது, உத்தாவிடுகின்ற இடத்திலே இல்லை, இருக்கமாட்டேன்; அவைத் தலைவருடைய மதிப்பு என்ன, மரியாதை என்ன, பொறுப்பு என்ன, உரிமை என்ன என்பதை உணர்ந்த காரணத்தால், கேட்டுக் கொள்கிறேன்: *(மேசையைத் தட்டும் ஒலி)* கூட்டத் தொடர் என்பது இப்பொழுது பார்த்தால், கவர்னர் உரை மாத்திரமல்ல; பட்ஜெட் படிக்கப்பட்டு அந்த விவாதம் நடைபெற்று, அதற்குப் பதில் சொல்கிற வரையிலே உள்ள தொடர்தான் கூட்டத் தொடர் ஆகும். இருந்தாலும், தாங்கள் விடுதலைச் சிறுத்தைகளுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று, கூட்டத் தொடர் என்புது கவர்னர் உரைக்குப்



பதில் சொல்லி முடிகிற வரையில்தான் கூட்டத் தொடர் என்று வைத்துக் கொண்டு, பிறகு பட்ஜெட் தொடரிலே அவர்களை எல்லாம் அனுமதிக்கக்கூடிய ஒரு கருணை உள்ளத்தைத் தாங்கள் காட்ட வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொண்டு, இந்த அளவில் என்னுடைய ஆலோசனையை நிறைவு செய்கிறேன்.

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்தக் கூட்டத் தொடர் முடிய, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆற்றுகின்ற கூட்டத் தொடர் முடிய, இந்த அவையில் நிறைவேற்றப்பட இருக்கின்ற அந்தத் தீர்மானம் செயல்படும். அதற்கு முன்பாக அவர்கள் வருத்தம் தெரிவித்தால், அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் – தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் கி. ஆறுமுகம் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் கி. ஆறுமுகம் அவர்கள் 27–5–2006 அன்று ஏற்கெனவே 12 நிமிடம் பேசி இருக்கிறீர்கள். இனி... *(குறுக்கீடு)*

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் நீக்கிவைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல் – தொடர்ச்சி

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் விடுதலைச் சிறுத்தைகளின் கோரிக்கையைப் பற்றி எடுத்துச்சொல்லி உங்களிடம் அதைப் பரிசீலிக்கும்படி சொல்லி இருந்தார். பட்ஜெட் கூட்டத் தொடர் வரை வேண்டாம் என்றும், இன்னும் இரண்டு நாட்கள் மட்டும் போதும் என்றும் சொல்லி இருக்கிறார்; ஆக, இன்னொரு முறை நீங்கள் மறுபரிசீலனை செய்து, அந்த இரண்டு நாட்களையும் தவிர்த்து, நாளை முதலாவது அவர்களை

அவையில் அனுமதிக்க வேண்டும். இதை விடுதலைச் சிறுத்தைகளின் கோரிக்கையாக ஏற்க வேண்டும். விடுதலைச் சிறுத்தைகளின் கோரிக்கையைப் பரிசீலனை செய்யும்படி சொன்ன முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளிலே, எதிர்க்கட்சியாக இருந்த எங்களுக்கு பேசுவதற்கே வாய்ப்பு மறுக்கப்பட்டும், இதுபோன்று எதிர்க்கட்சிகள் எதையாவது பேசினால், அதிலும் குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் ஏதாவது ஒரு சிறிய பிரச்சினையை வலுவாகப் பேசினாலே வெளியேற்றுகிற கட்டத்திலே, பலமுறை எங்களுடைய கட்சித் தலைவரும், நம்முடைய எதிர்க்கட்சியிலே இருந்த தலைவர்கள் பலமுறை வாதாடினாலும், இந்தத் தொடர் முழுவதும் அவையிலே அவர்கள் வரக்கூடாது என்ற உத்தரவை மறுபரிசீலனை செய்து, இன்றைக்கு ஒரு நாளோ அல்லது இரண்டு நாட்களோ மட்டும் அவர்கள் அவைக்கு வராமல், எஞ்சிய நாட்களிலே வர அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தாலும்கூட, அன்றைய முதல்வர் ஏற்றுக்கொண்டதாக சரித்திரமே இல்லை. ஆனால், நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பெரிய மனதோடு இன்னும் இரண்டு நாட்கள் மட்டும் அவர்கள் மன்னிப்புக் கோரவில்லை என்று சொன்னால், வரத் தேவையில்லை; அதற்குப் பிறகு, நமது நிதிநிலை அறிக்கையிலே விவாதிப்பதற்கு அனுமதிக்கலாம் என்று பெருந்தன்மையோடு சொல்லி இருப்பதற்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் – தொடர்ச்சி

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள், மேதகு ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டிய பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தோழனாக, நண்பனாக இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொழிற்சாலைகளுக்கும், வீடுகளுக்கும் மின்சார வாரியத்தின் மூலம் மனு செய்த உடனேயே, மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதுபோன்றே, விவசாய நலன் கருதி, விவசாயிகள் மனு செய்த உடனேயே மின்சார இணைப்பு வழங்கப்படும்



என்ற அறிவிப்பை நமது அரசு அறிவித்து, விவசாயிகளின் நண்பன் நமது அரசு என்பதை உணர்த்தும்வகையில், முதல்வர் கலைஞர் அவர்கள், அதனை அறிவிக்குமாறு இந்த அவையின்மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வட மாவட்டங்களாக இருக்கிற காஞ்சிபுரம் மாவட்டம், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், திருவள்ளூர் மாவட்டங்களின் ஜீவாதாரமாக இருக்கிறது, பாலாற்றிலேயுள்ள குடிநீர். விவசாயத்திற்கும் ஜீவாதாரமாக இருக்கிற பாலாற்றின் குறுக்கே, ஆந்திர அரசால், குப்பத்திலே கட்டப்படவிருக்கிற அணையை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, அந்த அணையைக் கட்டினால், மழைக் காலங்களில் மட்டுமே தண்ணீர் வருகின்ற பாலாற்றில், தண்ணீரே வாராத நிலை ஏற்படும். ஏறக்குறைய, ஏழெட்டு ஆண்டுகளில் இதுவரை தண்ணீரே வரவில்லை. இந்த ஆண்டுதான் ஓரளவிற்குத் தண்ணீர் வந்தது. இந்த அணையைக் கட்டினால் தண்ணீரே வராது. எங்களுடைய நிறுவனத் தலைவர் அய்யா அவர்கள் சொல்லியதுபோல, இந்த வட மாவட்டங்கள் பாலைவனமாக மாறுகிற அபாயம் இருக்கிறது. எனவே, பாலாற்றின் குறுக்கே, குப்பத்திலே கட்டுகிற அணையை தடுத்து நிறுத்த பெருமுயற்சி எடுப்போம் என்று சொல்லியிருப்பதை, மிகக் கண்டிப்போடு செயல்படுத்தவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9–55*

அதேபோன்று, நம்முடைய ஆளுநர் உரையிலே, தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை புதியதாக உருவாக்குவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் சென்னை, கோவை, மதுரை போன்ற பெருநகரங்களில் மட்டும் அல்லாமல், தமிழகத்தில் இருக்கிற 30 மாவட்டங்களில் உள்ள தலைநகரங்களிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை ஏற்படுத்தி, அந்த மாவட்டங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், அந்தப் பகுதியிலே படித்திருக்கிற இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கிற வகையிலும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கனிவான வேண்டுகோளாக, இங்கே

அமர்ந்திருக்கிற அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் எல்லாம் வெற்றி பெற்று தொகுதி மக்களைச் சந்திக்கிறபோது, அந்த மக்கள், தொகுதியில் உள்ள அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏராளமான மனுக்களை எங்களிடம் தருகிறார்கள். 'நீங்கள் எங்களுக்கு சாலை வசதி செய்து கொடுங்கள்; சிமெண்ட் சாலை போடுங்கள்; புதியதாக பள்ளிக் கட்டடம் கட்டித் தாருங்கள்; புதியதாக உழவர் கூடம் கட்டித் தாருங்கள்; பொதுக் கழிப்பிடம் கட்டித் தாருங்கள்; நியாயவிலைக் கடைக் கட்டடம் கட்டித் தாருங்கள்; புதியதாக மின் விளக்குக் கம்பங்களை அமைத்துக் கொடுங்கள்' எனப் பல்வேறு கோரிக்கைகளை வைக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்களே, தங்களுடைய பிறந்த நாளிலே இனிப்பான செய்தியாகவும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் நல்ல ஒரு இணக்கத்தை ஏற்படுத்தும்வகையிலும், இங்கே நீங்கள் ஒரு அறிவிப்பை வெளியிடவேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தங்கள் வயது இப்போது 84–ஐ எட்டுகிற இந்த வேளையிலே, உங்கள் ஒவ்வொரு வயதிற்கும் இரண்டு இலட்சம் ரூபாய் என்று கணக்கிட்டு, 1 கோடியே 68 இலட்ச ரூபாயை, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியாக வழங்கவேண்டுமென்று இங்கே அமர்ந்திருக்கிற அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, (குறுக்கீடு) 83 முடிந்து, 84–க்கு அடியெடுத்து வைக்கிறீர்கள். (குறுக்கீடு) அண்ணே, ஏற்கெனவே 1 கோடி ரூபாய் இருக்கிறது.

அதேபோன்று, அரசு விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் இப்போது மிகவும் வேதனைக்குள்ளாகிறார்கள். அதிர்விலே அந்தப் பேருந்துகளிலே செல்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. பயணிகள் அதிர்வின்றிப் பயணம் செய்ய, அனைத்து விரைவுப் பேருந்துகளையும் கூடுதல் வசதிகளுடன்கூடிய மிதவைப் பேருந்துகளாக மாற்றுவதற்காக நம்முடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என் எதிரில் இருக்கிற மாண்புமிகு அண்ணன் பொன்முடி அவர்கள், போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, மாநகரப் பேருந்துகளின் எல்லையை 10 கி.மீ. நீட்டிக்க இருக்கிறோம்



என்று ஏற்கெனவே கடந்த தி.மு.க. ஆட்சியிலே அறிவித்தார்கள். அதை நிறைவேற்றவில்லை. இந்த ஆட்சியிலே நிறைவேற்றினால், சென்னைப் பெருநகரத்தினுடைய போக்குவரத்து மற்றும் மக்கள் நெரிசலைக் குறைக்கவும், சுற்றியிருக்கிற காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களினுடைய வளர்ச்சிக்கும், அந்தப் பகுதியிலே அது மிகவும் சரியான ஒரு திட்டமாக இருக்கும் என்றும், இந்த ஆண்டே அந்த மாநகரப் போக்குவரத்தினுடைய எல்லையை 10 கி.மீ. நீட்டித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மினி பஸ்களை இப்போது இயக்குவோம் என்று நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. அதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம். அதே சமயத்திலே, தமிழகத்திலேயிருக்கிற அத்தனை கிராமங்களுக்கும் இயக்குகிறவகையிலே அந்த மினி பஸ் போக்குவரத்து இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று; பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரைக் கொண்டிருக்கிற கட்சி — அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நீங்கள் கொண்டு வந்தீர்கள் — கடந்த ஆட்சி அந்தத் திட்டத்தை அடியோடு இரத்து செய்துவிட்டு, ஒரு ஏமாற்றுத் திட்டமாக புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒன்றை ஏற்படுத்தியது. அதில் ஒன்றும் இல்லை; இப்போது இருக்கிற நம்முடைய மாண்புமிகு சிறு தொழில் துறை அமைச்சர் அவர்கள் நினைத்தாலே, ஒரே கையெழுத்திலே ஆயிரம் பேர்களைச் சிறு முதலாளிகளாக உருவாக்கமுடியும் இன்றைக்கு. ஆனால், அவர்கள் அப்போது ஒன்றும் செய்யவில்லை.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தாங்கள் எடுத்துவிட்டோம் என்பதற்காகவே, எதிர்க்கட்சிகள் ஏதாவது குறை சொல்வார்கள் என்பதற்காகவே, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை உருவாக்குகிறோம் என்று சொல்லி, விவசாயிகள் உற்பத்தி செய்கிற அந்தத் தொழிலைத் தொடங்குபவர்களுக்கு, ஒரு ஒன்றியத்திற்கு ஒரேயொரு தொழிலைத்தான் தொடங்க வேண்டும் என்ற சாதாரண ஒரு நிலையை உருவாக்கி, அதற்கு அவர்கள் மூடுவிழா செய்துவிட்டார்கள். அதற்காக நான் இரண்டு முறை சட்டமன்றத்திலே பேசியிருக்கிறேன். "நீங்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறீர்களே, உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆண்டு முடிய 14 சிறு தொழில்கள் மட்டுமே அனுமதித்திருக்கிறீர்கள், தமிழ்நாட்டிலே; இதனால்

அண்ணா பெயருக்கு மிகப் பெரிய களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்; புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தையே நீங்கள் கொச்சைப்படுத்துகிறீர்கள்" என்று பேசினேன். ஆகவே, இப்போது இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மீண்டும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தால், ஒவ்வொரு தொகுதியிலும், ஒவ்வோராண்டும், அந்தக் கிராம ஊராட்சிக்குத் தேவையான சாலை வசதிகள், அங்கே தேவையான பள்ளிக் கட்டடங்கள், அங்கே தேவையான குடிநீர் வசதி, அதுபோல அங்கே தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அப்படிப் பார்த்தால், 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், 234 கிராமங்களில் (குறுக்கீடு) ஒன்றியத்திற்கு ஒன்று கொடுத்தாலும், இன்றைக்கு 374 ஒன்றியங்களிலே, ஒரு வருடத்திற்கு 374 கிராமங்கள் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்துகொள்ளமுடியும். அப்படிப் பார்த்தால், ஐந்து ஆண்டுகளிலே ஏறக்குறைய 1,900 ஊராட்சிகளை, பூரண அனைத்து அடிப்படை வசதிகளைச் செய்த கிராமங்களாக மாற்றுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, முதலமைச்சர் அவர்களே, கடந்த ஆட்சியிலே நீக்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மீண்டும் நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–00*

அதேபோன்று, அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்களில் படிக்க, ஏராளமான மாணவ, மாணவியர் இப்போது மனு செய்கின்றனர். அவர்கள் படிப்பதற்கு இடம் கிடைப்பதில்லை. உதாரணத்திற்கு, செங்கற்பட்டில் இருக்கிற தொழிற் பயிற்சி நிலையத்திலே பல்வேறு பாடப் பிரிவுகள் இருந்தாலும்கூட, அங்கே படிப்பதற்குச் சேர்க்கப்படுகிற மாணவர்களுக்கான இடங்களின் எண்ணிக்கை 30–லிருந்து 35–தான் இருக்கிறது. அது போதவில்லை. ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் 200–லிருந்து 300 பேர் மனு செய்கிறார்கள். இதே நிலைதான் தமிழகம் முழுவதும். எனவே, கூடுதலாக இடங்களை ஒவ்வொரு பாடப் பிரிவிலும் அமைக்க வேண்டுமென்றும், அதேசமயத்திலே வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்திற்கு ஏற்ப, புதிய பாடப் பிரிவுகளையும், அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலே ஏற்படுத்திக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான புரட்சிகரமான திட்டம்; பசுமைப் புரட்சியை ஏற்படுத்திடும்வகையிலே, சென்னை, மதுரை, கோவை, திருச்சி,





சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளிலும், பெரிய நகரங்களிலே வசிக்கும் மக்கள் நலன் கருதி, நகரங்களிலே பசுமைப் புரட்சியை ஏற்படுத்திட ஏதுவாக, காலியாக உள்ள அரசு இடங்களிலும், தனியார் இடங்களிலும் இடங்கள் இருந்தால், வீடுகளின் முன்புறமும், புறக்கடைகளிலும் புதிய மரங்களை நடுவதற்கு நமது அரசு ஊக்கம் அளித்து, நகர்ப் பகுதிகளில் ஒரு பசுமைப் புரட்சி ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னை நகரிலே இருக்கிற போக்குவரத்து நெரிசல் உங்களுக்குத் தெரியும். நான்கூட தினமும், செங்கற்பட்டிலேயுள்ள திருக்கச்சூரிலிருந்து வருகிறேன். செங்கற்பட்டு பகுதியிலிருந்து வருவதற்கு இரண்டு மணி நேரம் ஆகிறது. தாம்பரத்தைக் கடப்பதற்கே ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, இங்கே வருவதற்கு ஆகிறது. அதேபோன்று, திருவொற்றியூர் பகுதியிலிருந்து பாரிமுனை வருவதற்கும், பூந்தமல்லியிலிருந்து பாரிமுனை வருவதற்கும் ஏறக்குறைய ஒன்றிலிருந்து ஒன்றரை மணி நேரம் ஆகிறது. இவற்றிற்கெல்லாம் நிரந்தரமாகத் தீர்வு காணவேண்டுமென்று சொன்னால், புதிய, புதிய வாகனங்களினால் நெரிசல் ஏற்படுவதைக் குறைக்கவேண்டுமென்று சொன்னால், தாம்பரத்திலிருந்தும், பூந்தமல்லியிலிருந்தும், திருவொற்றியூரிலிருந்தும் நம்முடைய பாரிமுனைக்கு அடுக்குமாடி மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசாங்கம் இப்போது ஒன்று செய்து இருக்கிறது. ஏற்கெனவே, கடந்த ஆட்சியிலே மோனோ இரயில் திட்டம் கொண்டு வந்தது. அதற்குப் பதிலாக கல்கத்தா, டெல்லி போன்ற நகரங்களில் இருப்பதைப் போன்று நாங்கள் இப்போது மெட்ரோ இரயில் விடப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு ஏதுவாக இப்போது சொல்கிற இந்த மாடி திட்டத்திலே — எப்படி ஆந்திர மாநிலத்திலே கோதாவரி கரையிலே அமைந்திருக்கிறதோ — கீழே Train-கள் செல்லும், மேலே வாகனங்கள் செல்கிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று இந்தத் திட்டத்தையும் இணைத்தால், வாகன நெரிசலையும் குறைக்க முடியும்; மெட்ரோ இரயிலும் செல்ல முடியும். ஒரே சமயத்திலே இரண்டு திட்டங்களைக் கொண்டுவர வாய்ப்பு இருக்கிறது. எனவே, முதல்வர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று சுற்றுலா வளர்ச்சியிலே–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலேதான் எங்களுக்கு வாய்ப்புத் தரவில்லை. இப்போது நீங்கள் கொடுங்களேன்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சுற்றுலாத் துறை, அந்நியச் செலாவணியை ஈட்டுகிற ஒரு நல்ல துறையாக இருந்துகொண்டு இருக்கிறது. இந்தத் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, நல்ல அறிவிப்பை ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதற்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே இருக்கிற, பல்லவன் கலைநகராம் மாமல்லபுரத்திற்கும். அதேபோன்று அதையொட்டி இருக்கின்ற பாண்டிச்சேரிக்கும் பக்கிங்காம் கால்வாயிலே சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கான படகுச் சவாரியை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மத்திய ஆட்சி மொழியாகத் தமிழ் மொழியை ஆக்குவோம் என்றும், அதற்கான முயற்சி எடுப்போம் என்றும் அறிவிப்பை நாம் வெளியிட்டிருக்கிறோம்; அதை உடனடியாகச் செய்வதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் வழியிலே பயிலுகின்ற மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும், இளைஞர்களுக்கும், வேலைவாய்ப்பிலே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற அறிவிப்பையும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

அதேபோன்று, தூண்டில்வளைவு; இப்போது உங்களுக்குத் தெரியும், சுனாமி போன்ற பல்வேறு இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது, கடல் பக்கத்திலே வாழும் மக்களுக்கும் அங்கே இருக்கிற மீனவத் தோழர்களுக்கும் மிகப் பெரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு ஒரு வாயிலாகவும், அதேபோன்று பருவ மழை பொழிகின்றபோது, அவர்கள் இயக்குகின்ற அந்தப் படகுகள், மிக இலாவகமாக கடலுக்குச் செல்வதற்கு வாய்ப்பாக இருப்பதற்கும் தூண்டில் வளைவு அமைத்தால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க முடியும் என்கின்ற நிலைமை உள்ளதால், தூண்டில்வளைவை நம்முடைய





கடற்கரையோரப் பகுதிகளிலே மீனவர்கள் வசிக்கின்ற அந்தக் கிராமப் பகுதிகளிலே, அமைத்துக்கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே பல்வேறு பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, பழமைவாய்ந்த செங்கற்பட்டு ராஜேஸ்வரி வேதாச்சலம் கலைக் கல்லூரியிலே இதுவரையிலே பட்ட மேற்படிப்பு இல்லை. அங்கு M.A., M.Sc., M.Com. பட்டப் பிரிவுகளைத் துவக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து கடந்த ஐந்தாண்டுகளாக சட்டமன்றத்திலே ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் நான் பேசிய பேச்சு, செங்கற்பட்டு நீஞ்சல்மடுவு அணை; களத்தூரான் கால்வாய்த் திட்டம், கிடப்பிலே கிடக்கின்றது. 1980-லே அந்த நீஞ்சல்மடுவு அணை உடைந்தது. அப்போது அதன் திட்ட மதிப்பீட்டை 40 இலட்ச ரூபாயில் தயாரித்தார்கள். இன்றைக்கு அதன் திட்ட மதிப்பீடு ஒன்றரைக் கோடி ரூபாயை எட்டிவிட்டது. அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர, இதுவரையிலே அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால், அது ஏறக்குறைய 40 கிராம விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக அமையும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, மாமல்லபுரம் சிற்பக் கலைக் கல்லூரியிலே பட்டயப் படிப்பு இருந்தது. எட்டாம் வகுப்பு படித்த மாணவர்கள்கூட, அங்கே கற்சிற்பமும், உலோகச் சிற்பமும், மரச் சிற்பமும் அல்லது பல்வேறு துறைகளிலும் படிக்க நல்ல வாய்ப்பைப் பெற்று, கலை ஆர்வத்தைக் கொண்டு, மேலுக்கு வர முடிந்தது. இப்போது அதை நீக்கியிருக்கிறார்கள். மீண்டும் அந்தப் பட்டயப் படிப்பைப் படிக்க, அங்கே அதைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கல்பாக்கம் அணு மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்தவர்களின் வாரிசுகளுக்கு வேலை அங்கே மறுக்கப்படுகிறது. படித்தவர்களுக்கும், நிலம் கொடுத்தவர்களின் பிள்ளைகளுக்கும், அங்கே வேலைவாய்ப்பை அளிப்பதற்கான முயற்சிகளை நம்முடைய தமிழக அரசாங்கம், எப்படியாவது அணு மின்னாற்றல் துறையிடம் பேசி, வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று திருக்கழுக்குன்றம் வட்டம் என்பது, வெறும் விவசாயத்தையும், மீன்பிடித் தொழிலையும், நெசவுத் தொழிலையும் நம்பியிருக்கிற ஒரு வட்டம். அந்தத் திருக்கழுக்குன்றம் வட்டத்திற்கு

சிறுதொழில் தொடங்க ஒரு புதிய தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். பாலாற்றின் குறுக்கே பழவேலி, வல்லிபுரம், இரும்புலிச்சேரி ஆகிய இடங்களிலே சிற்றணைகளைக் கட்டி, விவசாயத்திற்கும், குடிநீர்ப் பிரச்சினை தீர்ப்பதற்குமான வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, கடந்த ஆட்சியிலே சொல்லி சொல்லி மாண்டுவிட்டது. செங்கற்பட்டுக்கும் திருப்போரூருக்கும் இடையே ஒருவழிச் சாலை இருக்கிறது; அதை இருவழிச் சாலையாக ஆக்குங்கள் என்று சொல்லியிருந்தோம். அது இன்னும் கிடப்பிலே கிடக்கிறது. எனவே செங்கற்பட்டுக்கும் திருப்போரூக்கும் இடையே அதனை இருவழிச் சாலையாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பிரசித்தி பெற்ற கோயில், கன்னியம்மன் கோயில், மணப்பாக்கத்திலே இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு, திருக்கழுக்குன்றம் பகுதியிலேயிருந்து வரவேண்டுமென்றால் ஒத்திவாக்கத்திலிருந்து மணப்பாக்கம் வரை இருக்கின்ற அந்த மூன்று கிலோ மீட்டர் சாலை, குண்டும் குழியுமாக போக்குவாத்துக்கு இலாயக்கு இல்லாத சாலையாக இருக்கிறது. அந்தச் சாலையை மறுபுனரமைப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே, நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். குறிப்பாக ஒப்பந்த முறையிலே உள்ள தொகுப்பூதிய ஆசிரியர்களுக்குத் தொகுப்பூதிய ஒப்பந்த முறையை நீக்கி, காலமுறை ஊதியம் மற்றும் அனைத்து அரசுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் நியமனம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலே ஒன்றை மட்டும் பரிசீலிக்க வேண்டும். மாணவர்கள் விகிதாச்சார அடிப்படையிலே, ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சியிலே பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படாமல் இருக்கிற அத்தனை திட்டங்களையும் உடனடியாகச் செயலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இங்கே இஸ்லாமியர்களுக்கும் கிறித்துவர்களுக்கும் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீட்டை அறிவிப்போம் என்று அறிவித்திருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி மனதாரப் பாராட்டுகிறது.

இறுதியாக ஒன்று என்னவென்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்திலே அதிகமாக சிறுபான்மை சமூகம் வாழ்கின்ற கிறித்துவர்கள் ஒரு நல்ல வேலையைச் செய்திருக்கிறார்கள். அங்கே





மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்த அண்ணா தி.மு.க. அரசாங்கத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலே, மூன்று தொகுதிகளிலுமே deposit–ஐயே இழக்கச் செய்திருக்கிறார்கள். அது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், சிறுபான்மைக்கு எதிரான அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்திலே நடைபெற்றது. அதற்குச் சவுக்கடி கொடுப்பதற்காகவே, ஆண்டு கொண்டிருந்த அண்ணா தி.மு.க.–விற்கு மூன்று இடங்களிலே நாங்கள் deposit–ஐ இழக்கச் செய்வோம் என்று சொல்லி, அங்கே அச்சாரம் செய்திருக்கிறார்கள். அது எதைக் குறிக்கிறது என்றால், சிறுபான்மை மக்களாக இருக்கிற கிறித்துவர்களுக்கும், இஸ்லாமிய சகோதரர்களுக்கும் கடந்தகால ஆட்சியிலே இழைக்கப்பட்ட கொடுமைக்குச் சரியான சவுக்கடியைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி, நம்முடைய ஆளுநர் உரையிலே நல்ல திட்டங்களைக் கொடுத்திருக்கிற உங்களுக்கு, உளமார வாழ்த்துக்களைத் தெரிவித்து என்னை வெற்றிபெறச் செய்ய அயராது பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய மற்றும் செங்கற்பட்டு தொகுதியில் உள்ள அனைத்து நிர்வாகிகளுக்கும், என்னை இரண்டாவது முறையாக செங்கற்பட்டு சட்டமன்ற உறுப்பினராக அரியணையில் அமர்த்திய எங்கள் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி கூறி எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் உங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமசந்திரன் அவர்கள். (குறுக்கீடு)*

## 4. தகவல் கோரல்–தொடர்ச்சி

## அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் நீக்கிவைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல்–தொடர்ச்சி

**திரு. கு. செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக்கொண்டும், மோசமான முன்னுதாரணங்களையே இங்கு கூறி வருகிறீர்கள். கலைஞர் வழிவந்த நீங்கள், நல்ல முன்னுதாரணத்தை அவையிலே காட்ட வேண்டும். நீங்கள் இது விஷயமாக அவர்களை அனுமதிக்கிறீர்களா, இல்லையா என்று இதுவரை கூறவில்லை. ஆகவே, இன்று நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

[2006 மே 29

*(விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சிறுத்தை ஒருமுறைதான் பாய வேண்டும். இரண்டாவது முறையும் பாய்ந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமசந்திரன் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியபடி, சிறுத்தை ஒருமுறைதான் பாய வேண்டும், இரண்டாவது முறை பாய்ந்திருக்கிறது. சிறுத்தை இப்பொழுது பதுங்கிப் பதுங்கிப் பாய்கிறது! (சிரிப்பு)

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் – தொடர்ச்சி

**திரு. ட்டி. இராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதின்மூன்றாவது சட்டப் பேரவையில், மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் முன்மொழிந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது, பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், ஐந்தாம் முறையாக தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்த நல்ல வாய்ப்பை நல்கிய தளி சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டப் பேரவைக்கு நான் புதியவன் என்றாலும், சுயேச்சை என்ற முறையிலே ஓர் உறுப்பினர் என்றாலும், இந்தச் சட்டப் பேரவையிலே மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும், மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் கொடுக்கின்ற வாய்ப்பை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கும் வழங்கும்போது, தமிழகத்தில் உண்மையிலேயே ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற தாரக மந்திரத்தை ஏற்று, தான் பொறுப்பேற்ற அதே நாளில், அதே மேடையிலே,



2006 மே 29] [திரு. ட்டி. இராமசந்திரன்]

அதே நிமிடம், பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியிலே சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில், தேர்தல் சமயத்தில் அளித்த வாக்குறுதியை ஏற்று, பல்லாண்டுக் காலமாக, தமிழ்நாட்டிலே தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாது இருந்த, ஏழையெளிய மக்களுடைய கோரிக்கை நிறைவேறும்வகையில், ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்ற கோரிக்கையை ஏற்றதும், அதேபோல, நமது வருங்கால செல்வங்களாகிய குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஜூலை 15, காமராஜர் பிறந்த நாளிலே, வாரத்திற்கு இரண்டு முட்டை வழங்கும் கோப்பில் கையெழுத்திட்டதும், அதேபோல, தமிழகத்திலுள்ள விவசாயிகள் பயன்பெறும்வகையில், கடந்த ஐந்தாண்டுக் காலமாக வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன் தொகையை, ஏறத்தாழ 7,000 கோடி ரூபாய் அளவுக்குத் தள்ளுபடி செய்து, தமிழகத்திலுள்ள 53 இலட்சம் விவசாயிகளைப் பாதுகாத்ததுமான பெருமை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மூன்று கோப்புகளிலும் கையெழுத்திட்டு, தமிழகம் முழுவதும் மட்டுமல்லாமல், இந்தியாவே பேசக்கூடிய அளவிற்குச் சாதனை புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே, குப்தர்கால பொற்கால ஆட்சியை, தமிழ் மண்ணிலே மீண்டும் மலரச் செய்த பெருமை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் தரப்படும் என்று அறிவித்ததற்கேற்ப, தமிழ்நாட்டிலுள்ள 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை எடுத்து, தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 25 இலட்சம் குடும்பங்கள், ஏழையெளிய குடும்பங்கள் பயன்பெறும்வகையிலே, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு, 25 இலட்சம் குடும்பங்கள் என்றால், தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடி மக்கள் பயன்பெறும்வகையிலே, குறிப்பாக இந்திய நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள 9.5 கோடி மக்கள் பயன்பெறும்வகையிலே அறிவித்துள்ளார்கள். இன்றைக்கு, இந்திய நாட்டில் வறுமைக்கோட்டின் விகிதத்தையும், எண்ணிக்கையையும் குறைப்பதிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பங்குள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ட்டி. இராமசந்திரன்] [2006 மே 29

முற்பகல் 10–15

அதேபோல, தமிழ்நாடு முழுவதும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக வனத் துறை புறம்போக்கு நிலம் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வன நிலம், சமூக வனக் காடுகள் ஆகிய அரசின் புறம்போக்கு நிலங்களிலே வீடு கட்டி, பயிர் ஜீவனம் செய்து வாழ்ந்துவரும் பல்லாயிரக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, 1980 ஆம் ஆண்டு வரை, காடுகளில் சாகுபடி செய்துள்ள புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்கவேண்டுமென்று வழிகாட்டப்பட்டுள்ளது. அது, கடந்தகால ஆட்சியிலே கிடப்பில் போடப்பட்டது. இவ்வரசு, இதில், 2000 ஆம் ஆண்டு வரை சுவாதீன அனுபவத்தில் உள்ள வீடுகளுக்கும், புறம்போக்கு நிலங்களுக்கும் பட்டா வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு வழங்கப்பட்டால், கிருஷ்ணகிரி மாவட்டம், தர்மபுரி மாவட்டம், வேலூர் மாவட்டம், நாமக்கல் மாவட்டம், சேலம் மாவட்டம் உள்ளிட்ட மலைப் பகுதிகளிலே வாழுகின்ற பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பயன்பெறும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நேற்றைக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, தளி சட்டமன்ற தொகுதியிலே நடந்த ஒரு துயர சம்பவத்தை இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம் என்பது, குறிப்பாக வன நிலங்களைச் சார்ந்தது. தளி சட்டமன்றத் தொகுதியிலே, அந்தப் பகுதிகளிலே விவசாய விளை நிலங்களுக்கும், அதேபோல விவசாயிகளின் உயிர்களுக்கும் காட்டு யானைகளால் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சம்பங்கி ராமரெட்டி என்பவர், பல்லப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர்; நேற்றைக்கு, அங்கே காட்டு யானைகளால், அவருடைய விவசாய நிலங்கள் நாசப்படுத்தப்பட்டதுடன், அந்த விவசாயியும் மிதிபட்டு செத்துவிட்டார். அந்த விவசாயி செத்தவுடனேயே, சம்பந்தப்பட்ட வனத் துறை அதிகாரிகள் அங்கே சென்று அந்த விவசாயிக்கு நஷ்ட ஈடு, அந்த விவசாயி செத்த 8 மணி நேரத்திலே வழங்கியிருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே, இரண்டு ஆண்டுகளில், செத்தவர்களுக்கும், விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இதுவரையில் நஷ்டஈடு வழங்கப்படவில்லை. ஆனால், இந்த அரசு பதவியேற்றவுடனேயே இறந்த 8 மணி நேரத்தில் அந்தக் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்கியிருப்பது என்பது உண்மையிலேயே இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதையும் அரசு அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள் என்பதையும் காட்டுகிறது.



2006 மே 29] [திரு. ட்டி. இராமசந்திரன்]

அதேபோல, தலித் மக்கள் கோவிலுக்குள் நுழையத் தடை, தலித் மக்கள் கால் செருப்பு அணியத் தடை, தொட்டால் தீட்டு, பட்டால் பாவம் என்று பல்வேறு வழிகளிலே தீண்டாமை கொடுமையினை நட்புறவு கொண்டு முறித்ததுபோல், இவர்களும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஆணையைப் பிறப்பித்து, அனைத்து சமூகத்தினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று அறிவித்து பெரியார் கனவையும், டாக்டர் அம்பேத்கர் எதிர்பார்ப்பையும், அண்ணாவின் உயிர் மூச்சையும் ஒருங்கிணைத்து சமத்துவ நீதியை இந்த மண்ணிலே காத்த பெருமை, டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகர மக்களிடையில், நிரந்தரக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும்வகையில், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்து, இந்த கவர்னர் உரையிலே இடம்பெற்றிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல, மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான கிருஷ்ணகிரி மாவட்டம், தர்மபுரி மாவட்டம், அதேபோல வேலூர் மாவட்டங்களில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை, பல ஆண்டுகளாக இருந்துவருவதை அனைவரும் அறிவோம். கிருஷ்ணகிரி, தர்மபுரி, மற்றும் வேலூர் மாவட்டங்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்தி, சுமார் அரை கோடி மக்களின் ஜீவநாடி கோரிக்கையைத் தமிழக அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் பூமிக்கடியில் புளோரைடு அதிகமாகக் கலந்து இருப்பதால், அந்த நீரை அருந்தும் மக்கள் பற்கள் இழந்தும், எலும்பு வலி ஏற்பட்டும் மிகவும் பாதிப்பிற்குள்ளாகும் நிலையை மாற்றி, மனித உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு சுமார் 10 கோடி ரூபாய் ஆய்வுப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டு, இது கடந்த ஆட்சியில் பாதியில் நிலுவையில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் பிரச்சாரத்தின்போது, தர்மபுரி மாவட்டத்திற்கு 24-4-2006 அன்று வருகை தந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையுமானால், நிச்சயம், இந்த மாவட்டத்தின் ஜீவாதார கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமல்படுத்தப்படும் என்று பேசியதை இந்த மன்றத்தில் நினைவுகூர்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து, இந்த ஆண்டிலே நிதி ஒதுக்கீடு செய்து, மத்திய

அரசிடமிருந்து நிதியாதாரத்தைப் பெற்று, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கவர்னர் உரையிலே இடம்பெற்றுள்ள உழவர் சந்தை திட்டம்; மீண்டும் புத்துயிர் பெறும்வகையிலே அவற்றை அமைத்து, அந்த உழவர் சந்தைகளில் விவசாயிகளுடைய காய்கறிகள் மற்றும் பழங்களைப் பாதுகாக்கும்வகையில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும் என்று ஆணை பிறப்பித்து இருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோல, அரசுப் பேருந்துகளிலே, தங்களுடைய விளைபொருட்களை, விவசாயிகள் உழவர் சந்தைக்கு எடுத்துச் செல்ல ஏற்கெனவே வழங்கியதுபோல, பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

*முற்பகல் 10–20*

அதேபோல, இலவச மின்சாரம் தொடரும் என்பது ஆளுநர் உரையிலே இடம் பெற்றுள்ளது. அதேபோல, இன்றைக்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், விண்ணப்பித்த 24 மணி நேரத்தில் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று ஓர் ஆணை பிறப்பித்திருப்பது, இதுவரை தமிழ்நாட்டிலே எந்த ஆட்சியிலும் பிறப்பிக்காத (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆணையைப் பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதேபோல, இலவச சைக்கிள் திட்டம், ஏற்கெனவே கடந்த ஆட்சியிலே கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் கடந்தகால ஆட்சியிலே வழங்கப்பட்டது என்பதற்காகக் கிடப்பிலே போடாமல், அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல், மீண்டும் வழங்கப்படுவதாக ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

அதேபோல, Plus One, Plus Two மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், 6–ஆம் வகுப்பிலிருந்து Plus Two படிக்கும் மாணவர்கள்வரை, அந்த இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் தொடர வேண்டும் என்பதை இந்தப் பேரவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே, கடந்த ஆட்சியிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய அரசால் 1,000 கோடி ரூபாய் முதன்மையாக அறிவிக்கப்பட்டும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. அதேபோல, வெள்ள பாதிப்பால் உடைபட்ட ஏரிகள், சாலைகள், ஆறுகள் போன்றவை கடந்த காலத்திலே



சீரமைக்கப்படவில்லை. தற்போது அவற்றைச் சீரமைப்பதாக, கவர்னர் உரையிலே இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் குறைக்கப்படுவதாக ஆளுநர் உரையிலே இடம் பெற்றுள்ளது. கடந்த காலத்திலே மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளிலே கல்விக் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டதால், கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுடைய கல்வி என்பது பாதியிலே நின்றுவிட்டது. ஆகவே, கல்விக் கட்டணம் குறைக்கப்படுவது, வரவேற்கத்தக்கது.

அதேபோல, கடந்தகால ஆட்சியிலே அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் பழிவாங்கும் நோக்கத்தோடு TESMA சட்டத்தைக் கொண்டுவந்து, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, அந்தச் சட்டத்தால் அரசியல் தலைவர்களையெல்லாம் கைது செய்தார்கள். அந்த TESMA சட்டத்தை இரத்து செய்து, இன்றைய முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே ஜனநாயகத்தைப் பாதுகாத்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதேபோல, மனித உரிமைகளைப் பறிக்கின்ற தடா சட்டம், பொடா சட்டம், குண்டர் சட்டம் போன்ற பொல்லாத சட்டங்களையெல்லாம் இரத்து செய்ய வேண்டுமென்று இந்தப் பேரவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். கடந்தகால–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ட்டி. இராமசந்திரன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள், முன்பு, ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கிராமப்புற ஏழை எளிய பெண்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டம் மூலமாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. கடந்தகால ஆட்சியிலே, அது பாதியிலே நிறுத்தப்பட்டது. மீண்டும் அந்தக் கிராமப்புற ஏழை எளிய பெண்கள் பயனடையும்வகையில் அதை 15 ஆயிரம் ரூபாயாக தற்போது உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு, கவர்னர் உரையிலே இடம்பெற்றுள்ள அனைத்து அம்சங்களும், தமிழ்நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்கு உதவும்வகையில் உள்ளதைப் பாராட்டி, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி என் உரையை நிறைவு செய்துகொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[2006 மே 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவையில் கலந்துகொள்ளும் வாய்ப்பளித்த விருத்தாசலம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், நான் சார்ந்திருக்கும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு 28 இலட்சம் வாக்குகள் அளித்த தமிழகத்தின் வாக்காளப் பெருமக்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஆளுநர் உரையின்மீது எனது கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

அரசியலை அறவே வெறுத்து ஒதுக்கிவிடாமல், ஏற்றுக் கொள்ளத்தக்கதான ஜனநாயக அரசியலைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆளுநரின் கருத்து வரவேற்கத்தக்கதாகும். எனினும், ஜனநாயகம் என்ற கருவிமூலம், நல்லாட்சி என்ற நோக்கம் நிறைவேற வேண்டும். ஜனநாயகம் என்பது, வேண்டாத ஆட்சியை நீக்கவும், வேண்டிய ஆட்சியைக் கொண்டுவரவும் மக்களுக்குத் தரப்படும் சாதனமாகும். அந்தச் சாதனத்தின்மூலம் மக்களுக்கு நல்லாட்சி கிடைக்க ஜனநாயகம் வழிவகுக்க வேண்டும். ஆனால், இன்றைய ஜனநாயகம் என்ற கருவியில், பணநாயகம் என்ற துரு பிடித்துள்ளது. அரசியலில் ஊழல் செய்து பணம் சேர்க்கவும், அதில் ஒரு பகுதியைத் தேர்தலில் செலவிட்டு மீண்டும் பதவிக்கு வருவதும், அந்தப் பதவியை வைத்து, மேலும் பணம் சேர்ப்பது என்ற நிலைக்கு ஆளாகிவிட்டது. இதனால் ஏழைகள் ஓட்டுப் போட முடியுமே தவிர, தேர்தலில் நின்று வெற்றிபெற முடியாது. நல்லவர்கள், நாட்டுக்குத் தொண்டு செய்ய விரும்புகிறவர்கள், ஏழைகளானாலும் அரசியலில் பங்கு கொள்ளும் அளவிற்கு பணநாயகத்தை வீழ்த்தி, உண்மையான ஜனநாயகத்தை உருவாக்குவதே அனைவரது கடமையாகும். பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, ஊழல்கள்மூலம் சொத்துக்களைச் சேர்த்து, ஜனநாயகத்தை மாசுபடுத்தும் சக்திகளை அடையாளம் காணவும், நடவடிக்கை எடுக்கவும், அந்தச் சொத்துக்களைக் கைப்பற்றவும் எந்தவித ஊழல் தடுப்பு நடவடிக்கையும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது எனக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது.

*முற்பகல் 10–25*

நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசா அவர்கள், அமெரிக்கா சென்றிருந்தார். அப்பொழுது அவரிடம், அங்குள்ள பத்திரிகையாளர்கள், ஏழைகளுக்கு இலவசம் என்று தருவதைவிட ஏதாவது வருமானம் தரும் தொழிலைக் கற்றுக்கொடுப்பதுதானே சிறந்தது என்று கேட்டனர்.



2006 மே 29] [திரு. விஜயகாந்த்]

அதாவது மீனைச் சாப்பிடக் கொடுப்பதைவிட, மீன்பிடிக்கும் தூண்டிலைக் கொடுக்கலாமே என்றனர். அதற்கு அன்னை தெரசா பதிலளிக்கையில், இந்தியாவிலுள்ள ஏழைகளைப் பொறுத்தவரையில் மீனையும் கொடுக்க வேண்டும், மீன் பிடிக்கும் தூண்டிலையும் கொடுக்க வேண்டுமென்று கூறினார். அந்த அடிப்படையில், தேசிய முற்போக்கு திராவிட கழகம் ஏழைகளுக்குத் தரப்படும் இலவசத் திட்டங்களை வரவேற்பதோடு, அவர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டங்களில் அக்கறை செலுத்துவதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. மலிவு விலையில் அரிசி வழங்குவது, மண்ணெண்ணெய் தருவது போன்ற திட்டங்களை வரவேற்கிறேன். ஆனால், அதேநேரத்தில் அவர்கள் விரும்பும் தொழிற்பயிற்சி பெறவும், பின்னர் வேலைவாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ளவும் ஆளுநர் உரையில் குறிப்பிடத்தக்க திட்டங்கள் இல்லாதது, வருத்தத்தைத் தருகிறது.

பல இலட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் அடிப்படை கல்வியும், வேலைவாய்ப்பும் இன்றி, வறுமையில் உழல்வதை நாம் அறிவோம். வறுமையிலிருந்து அவர்களை மீட்க, அவர்களை ஊக்கப்படுத்துவதற்கான குறிப்பிட்ட திட்டங்கள் எதுவும் கூறப்படவில்லை. படிக்காத மற்றும் படித்த பல இலட்சக்கணக்கான இளைஞர்கள், தங்கள் உழைப்பை நாட்டுக்குத் தர தயாராக இருந்தும், அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள எந்தத் திட்டமும், சுய உதவிக் குழுக்களைத் தவிர, காணப்படவில்லை. ஒருவேளை, அரசு அளிக்கும் வரவு–செலவுத் திட்டத்தில் இத்தகைய திட்டங்கள் இடம்பெறுமானால் வரவேற்கத் தயாராக உள்ளேன். மத்திய அரசிடமிருந்து தேவையான திட்டங்களையும், உதவிகளையும், உரிமைகளையும் வாய்மையுடன் வாதாடி, இந்த அரசு பெறும் என்று ஆளுநர் அறிவித்துள்ளார்.

கடந்த 38 ஆண்டுகளாக தீர்க்கப்படாத காவிரிப் பிரச்சினையானாலும் சரி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகும் உயர்த்த முடியாத முல்லைப் பெரியாறு அணை கட்டும் பிரச்சினையானாலும் சரி, பாலாற்றை மணல் ஆறாக மாற்றிய பிரச்சினையானாலும் சரி, கச்சத் தீவை இலங்கை அரசுக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், மீன் பிடிக்கும் உரிமைகளை இலங்கைக்கு விட்டுக்கொடுத்ததானாலும் சரி, தமிழ்நாட்டின் உரிமைகள் பறிபோனதாகத்தான் வரலாறே தவிர, எதையும் இதுவரை நாம் பெறவில்லை. இந்த அரசு இழந்த உரிமைகளைப் பெற எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாலும் தேசிய முற்போக்கு திராவிட கழகம் முழு ஒத்துழைப்பைத் தரும் என்று உறுதியளிக்கிறேன்.

[திரு. விஜயகாந்த்] [2006 மே 29

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பட, விவசாய முன்னேற்றம் இன்றியமையாதது. விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க, ரூபாய் 7 ஆயிரம் கோடி கடனை இரத்து செய்ததை வரவேற்கிறேன். ஆனால் அதேநேரத்தில் அவர்கள் இதர வங்கிகளில் பெற்ற கடன் சுமை, இதைவிட அதிகமாக உள்ளது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவ்வப்போது விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் அளிப்பதைவிட, விவசாயப் பொருளாதாரத்தைச் சீர்திருத்தி அவர்களின் விளைபொருள்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையைப் பெற்றுத் தருவதன்மூலமே அவர்களைக் கடன் சுமையிலிருந்து காப்பாற்ற முடியும்.

என்னுடைய விருத்தாசலம் தொகுதியில், சாலை வசதி, குடிதண்ணீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள், மிகவும் மோசமாக உள்ளன. விருத்தாசலம் அரசுப் பள்ளிகளில் போதிய கட்டட வசதி இல்லை. அரசு மருத்துவமனை மிகவும் வசதியற்ற நிலையில் உள்ளது. X-Ray Unit இருந்தும் நிறுவப்படவில்லை. மகளிர் கல்லூரி இன்றியமையாத தேவையாக உள்ளது. விருத்தாசலம் நகரத்தில் பாலம் இன்னும் அமைக்கப்படவில்லை. ஒரு பொறியியல் கல்லூரி அவசிய தேவையாக உள்ளது. இதையெல்லாம் அரசின்மூலம் பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின்மூலம், கடலூர் மாவட்டத்தில் முந்திரி ஏற்றுமதி வளாகத்திற்கு 10.36 கோடி ரூபாய் அனுமதி கிடைத்தும் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசு அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். முந்திரித் தொழில் அமெரிக்க டாலர்களைப் பெற்றுத் தரும். முந்திரிப் பயிர் மட்டுமல்ல; முந்திரிக் கொட்டை, தோல், பழம், மரத்திலுள்ள பிசின், பட்டை, இலை போன்ற அனைத்தும் பயன்படக்கூடிய பொருள்கள் ஆகும். இவை அனைத்தையும் பயன்படுத்தும்வகையில் அரசு திட்டமிட்டுச் செயலாற்ற கேட்டுக்கொள்கிறேன்.

திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க எடுக்கும் நடவடிக்கையை வரவேற்கிறேன். நீதிமன்றங்களில் சத்தியப்பிரமாண நூலாகவும் அதை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மறைந்த நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன் அவர்களுக்குக் கடற்கரைச் சாலையில் ஜூலை 21 ஆம் தேதி சிலை நிறுவப்படும் என்ற அறிவிப்பை தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் வரவேற்று நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 மே 29] [திரு. விஜயகாந்த்]

தமிழ்நாட்டில் பயிலும் மாணவர்கள் அனைவரும் தமிழைக் கற்க வேண்டுமென்ற கருத்தை வரவேற்கிறேன். அதேநேரத்தில் தமிழோடு வேறு மொழியையும் கற்க மாணவர்கள் விரும்பினாலும், அதற்கான வாய்ப்பை உருவாக்கித் தர கேட்டுக்கொள்கிறேன்.

அரசு செய்ய உள்ள இட ஒதுக்கீட்டுத் திட்டங்களை வரவேற்கிறேன். பெண்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மக்கள் தொகையில் சரிபாதியாக உள்ள அவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் உரிய ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசும் அதற்கான சட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்ய இந்த அரசு வற்புறுத்தும் என எதிர்பார்க்கிறேன்.

தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு தருவதோடு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் இணைக்க முன்முயற்சி எடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், அமைப்புசாராத் தொழிலாளர்கள் போன்றவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உதவித் திட்டங்கள் வகுத்துள்ளது, பின்தங்கிய பகுதிகளில் சிறுதொழில்களுக்கு முதலீட்டு மானிய நிதி உதவித் திட்டம் கொண்டு வந்துள்ளது போன்றவை வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாகும்.

நிர்வாகத்தில் அனைத்துத் துறைகளிலும் மண்டிக்கிடக்கும் இலஞ்சம், பொது மக்களின் அன்றாட வாழ்க்கையில் நெருடும் முட்களாக உள்ளன. அவற்றைப் போக்கி வழிகாணக் கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்தில் ஆளுநர் உரை, நிர்வாகத் துறையில் பல நல்ல மாற்றங்களை உள்ளடக்கி உள்ளது. ஆனால், அதேநேரத்தில் கொள்கை ரீதியாக சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள ஏழையெளிய குடும்பங்களின் நல்வாழ்விற்கு உத்தரவாதம் தரும்வகையில், மேம்பாட்டிற்குரிய குறிப்பிடத்தக்க திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை.

ஒரு சிலரிடம் செல்வம் குவிவதும், பலர் வறுமையில் வாடுவதும் ஆபத்தானது. அரசியல் அனுபவம் மிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் இதை அறியாதவர் அல்லர். கரை இல்லாமல்

கண்டபடி ஓடும் காட்டாற்று வெள்ளம், அழிவைத் தருவது மட்டுமல்ல; கடலில் வீணாகக் கலக்கும். ஆனால் இருமருங்கும் கரை புரண்டு ஓடும் ஆற்று வெள்ளம் மடை திறந்து பாசனத்திற்குப் பயன்படும். செல்வம் சிலரிடம் குவிவது, காட்டாற்று வெள்ளம் போன்றது, அதைத் தடுத்து ஆற்று வெள்ளமாக்கி அணை கட்டி, மடை திறந்து, உழைக்கும் மக்கள்பால் திறந்துவிட வேண்டியது அவசியம். அதைப்போல, வரவிருக்கின்ற வரவு–செலவுத் திட்டத்தில், அரசின் நிதி பெருமளவிற்கு மக்கள் பக்கம் பரவலாகத் திருப்பிவிடப்படும் என்ற நம்பிக்கையில், ஆளுநர் உரையை வரவேற்று அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை. அடுத்த உறுப்பினர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன், அவரும் இருக்கையில் இல்லை. அடுத்த உறுப்பினர் திரு. வேல்துரை அவர்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு, என்னை இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், எனக்குப் போட்டியிட வாய்ப்பளித்த எங்கள் அன்புத் தலைவி, தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர் முதல்வர் மூதறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மற்ற தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் மற்றும் என்னை வெற்றிபெறச் செய்ய தொகுதியில் வந்து தீவிர பிரச்சாரம் செய்த மத்திய அமைச்சர், மாண்புமிகு திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், மத்திய அமைச்சர், மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும், மாண்புமிகு திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக தளபதி அன்பிற்குரிய மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொண்டு, கவர்னர் உரையை வரவேற்று என் உரையைத் தொடங்குகிறேன்.

இந்த மன்றத்தை வெற்றிப் பாதையிலே நடத்திக்கொண்டிருக்கிற பேரவைத் தலைவர் அவர்கள், எனது தொகுதி சேரன்மகாதேவியைத் தலைமையிடமாகக் கொண்டவர். அவரைப் பேரவைத் தலைவராக நியமித்து, இன்றைக்கு எனது தொகுதிக்கும், நெல்லை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிற அன்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





டாக்டர் கலைஞர் அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கூட்டுறவுக் கடன்கள் முழுமையாகத் தள்ளுபடி, பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்த தினத்திலிருந்து சத்துணவிலே இரண்டு முட்டை என்று முதல் நாளிலேயே ஏழை மக்களை மகிழ்விக்கின்ற அருமையான திட்டங்களுக்கு எல்லாம் கையெழுத்திட்டு, இன்றைக்கு மக்களுடைய வரவேற்பைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், அதை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அதேபோன்று, இந்த அரசு தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட திட்டங்களையெல்லாம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையையும் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிறித்தவர்களுக்கும், மற்ற மதத்திலே இருக்கின்றவர்களுக்கெல்லாம் ஆதி திராவிட மக்கள் பெறுகின்ற சலுகை கிடைக்கும் என்று சொல்வது மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அதேபோன்று, இஸ்லாமியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் வேலைவாய்ப்பு, கல்வியிலே இட ஒதுக்கீடு செய்வதற்கான சட்ட வழிவகை செய்யப்படும் என்று சொல்லியிருப்பதை மக்கள் வெகுவாகப் பாராட்டுகிறார்கள்.

இலவச மின்சாரம் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இலவச மின்சாரம் பெறுவதோடு, புதிதாக சிறிய விவசாயிகள் pump-set இணைப்பிற்கு வேண்டி மனு செய்தால், *50,000* ரூபாய் deposit கட்ட வேண்டும்; மேலும் electric pole, உதிரிச் சாமான்கள் எல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகளால் மின் இணைப்பே பெற முடியாது. அதை மாற்றி, அவர்களுக்கு வைப்புத் தொகையை நீங்கள் குறைத்து நிர்ணயிக்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

அதேபோன்று, பனைத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பனைத் தொழிலாளர் நல வாரியம் ஏற்கெனவே இருந்து அது கைவிடப்பட்டது. மீண்டும் அந்த நல வாரியத்தைத் தொடங்கி, பனைத் தொழிலாளர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோரிக்கைகள் என்று சொன்னால், நெடுங்காலமாக, பனைத்

தொழிலாளர்கள் தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையைக் கண்டிப்பாக இந்த அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையிலே, நிறைவேற்ற வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பனைத் தொழிலாளர்கள் பனையிலே இருந்து விழுந்தால், அவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் நட்ட ஈடு வழங்கவேண்டும். ஏனென்றால், விபத்தில் இறந்தால்கூட இரண்டு இலட்சம் ரூபாய் கொடுக்கின்றோம். பனைத் தொழில் செய்கின்றபோது, விழுந்து இறந்தால் அவர்களுக்கும் இரண்டு இலட்சம் ரூபாய் நீங்கள் நட்ட ஈடு வழங்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வி முறையில், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கல்வியின் தரம் இன்றைக்கு உலக அளவில் சிறந்து விளங்குகின்றது. ஆனால், கிராமப்புறங்களில் கல்வியில் அந்தத் தரத்தை அவர்கள் பெற முடியவில்லை. அதனால், கிராமப்புற மக்கள் இன்றைக்கு நல்ல வேலைகளுக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்றது. எனவே, கிராமப்புற பள்ளிகளையும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் தரத்திற்குத் தரம் உயர்த்துவதற்கு அறிஞர்களைக் கொண்ட குழுவை நியமித்து அந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்து, கண்டிப்பாக கிராமப்புற மக்களும் இலவசமாக, தரமான கல்வியைப் பெற்று வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு இன்றைக்குத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் எக்கச்சக்கமாக உயர்ந்து போய்க் கொண்டிருக்கின்றது. ஆனால் நம்முடைய அரசு, அரசுக் கல்லூரிகளில் கல்விக் கட்டணத்தைக் குறைப்போம் என்று சொல்லியிருக்கின்றது. அரசுக் கல்லூரிகளில் மட்டும் கல்விக் கட்டணத்தைக் குறைத்தால் போதாது; தனியார் கல்லூரிகளிலும் கண்டமாதிரி, இஷ்டத்திற்கு வசூல் செய்கின்றார்கள்; அதற்கும் ஒரு கட்டுப்பாட்டை விதிக்கவேண்டும்.

இரண்டாவது, நமது மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்களுடைய உத்தரவின்பேரில் வங்கிகளிலெல்லாம் படிக்கின்றவர்களுக்கு நிறைய கடனைக் கொடுக்கின்றார்கள். ஆனால் fees அதிகமாக இருக்கின்றது. கடனை நிறைய வாங்கிவிட்டு, அவர்கள்





படித்துவிட்டு, வெளியே வருகின்றபோது, மிகப் பெரிய கடன் சுமையோடுதான் வரவிருக்கின்றார்கள். ஆகவே கல்விக் கட்டணத்தை வெகுவாகக் குறைப்பதற்குத் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

தென் மாவட்டங்களில் இனக் கலவரம் வருகிறது என்று சொல்லி, அப்போது அதற்கு என்ன தீர்வு என்பதற்காக, நமது அரசுதான் அன்றைக்கு Justice திரு. இரத்தினவேல் பாண்டியன் அவர்களை வைத்து, ஒரு Commission-ஐ நியமித்தது. அவர்கள், வேலைவாய்ப்பை உருவாக்குவது மட்டும்தான் இதற்குச் சரியான தீர்வாக இருக்க முடியும் என்று சொல்லி, அந்தத் தீர்வைக் கொடுத்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு எந்த நடவடிக்கையும் அதன்மேல் எடுக்கப்படவில்லை. அதற்கு அடுத்து வந்த அரசும் அதைச் செய்யவில்லை.

நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்காவைக் கண்டிப்பாக இந்த அரசு — ஏனென்றால், கடந்தகால ஆட்சியில் அதைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள்; அதை நீங்கள் கண்டிப்பாக — உடனடியாக இந்த ஐந்தாண்டுகளுக்குள் நிறைவேற்றவேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, இன்றைக்கு சேது கால்வாய்த் திட்டம் 2,427 கோடி ரூபாயிலே அன்னை சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் நமக்குத் தரப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டம் நிறைவேறுகின்றபோது, அந்தத் திட்டத்தைப் பயன்படுத்துவோருக்கு, அங்கே தொழிற்சாலைகளோ பெரிய நிறுவனங்களோ எதுவுமில்லை. அவ்வளவு ஓசலவழித்து அந்தக் கால்வாயை வெட்டிக் கொண்டு வருகின்றபோது — இன்றைக்குக்கூட பத்திரிகையிலே தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 26 ஆம் தேதியிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்க நாடுகளுக்கும் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது — 40 நாட்கள் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு ஆவது, இந்தக் கால்வாய்த் திட்டத்தின் மூலமாக 25 நாட்களில் அமெரிக்காவுக்குச் செல்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கின்றது. இன்று சென்னையைச் சுற்றிப் பெரிய பெரிய தொழில்கள் உருவாக்குவதை விடுத்து, 4 zone-களாகத் தமிழ்நாட்டைப் பிரித்து, தொழிலில் பின்தங்கிய பகுதியாகிய நெல்லை மாவட்டத்தை நீங்கள் தேர்வு செய்து, அங்கே பெரிய தொழில்களை உருவாக்க வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று

சொன்னால், தொழில்கள் பரவலாக்கப்பட்டால்தான் வேலைவாய்ப்பு வரும். வேலைவாய்ப்புகள் வரும்போதுதான் பிரச்சினைகள் இல்லாமல் இருக்கும் மக்கள் மத்தியிலே. நீங்கள்தான் கண்டிப்பாகச் செய்வீர்கள். உங்களுக்கு அந்த அக்கறை இருக்கிறது. நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் இந்தக் கோரிக்கையை இந்த அரசுக்கு வைக்கின்றேன்.

நிறைய ஊர்களுக்குச் சென்றால், ஆதிதிராவிடர்களுடைய ஓட்டு வீடுகளெல்லாம் பழுதாகி இருக்கின்றன. அவற்றைச் சீர்செய்து தாருங்கள்; சீர்செய்து தாருங்கள் என்று சொல்கின்றார்கள். அவை, யாரும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. ஒரு special திட்டமாக, ஓட்டு வீடுகளையெல்லாம் மாற்றுவதற்கோ அல்லது ஓட்டு வீடுகளை repair செய்து கொடுப்பதற்கோ நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–10*

அதோடு, இன்றைக்குப் பத்திரிகையிலே, நிரந்தர Indira Awas Yojana, பாரத் நிர்மாண் திட்டத்தின்கீழ், வீடுகள் எல்லோருக்கும் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தின்கீழ், 2002 கணக்குப்படி, அன்றைக்குள்ள ஏழைகளைக் கணக்கெடுத்து, அதன்படி காத்திருப்போர் பட்டியலில் வைத்து, அது நிறைவேற்றப்படும் என்று அந்த விளம்பரத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் ஊர்களுக்குச் சென்று, கடந்தகால ஆட்சியில் என்ன செய்திருக்கின்றார்கள் என்று கேட்டால், 'கடந்த ஆட்சியில், இதே திட்டம் இருந்து இருக்கின்றது; ஆனால், கடந்த ஆட்சியிலே, வேண்டியவர்களுக்காக மட்டும். அவர்களுக்கு வேண்டியவர்களுக்குத்தான் செய்திருக்கிறார்கள்; எங்களுக்குச் செய்யவில்லை; நாங்கள் காங்கிரஸ், நாங்கள் தி.மு.க., அதனால் எங்களுக்குச் செய்யவில்லை' என்கிற வருத்தத்தைத் தெரிவிக்கிறார்கள். இதைப் பஞ்சாயத்து மூலமாகத் தேர்வு செய்யப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான்கு மாதங்கள்தான் பஞ்சாயத்திலுடைய காலம் இருக்கிறது. இந்த நேரத்திலே தேர்வு செய்தால், சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். நாங்களும் அந்தக் குழுவிலே, அந்தத் தேர்வு செய்கிற குழுவிலே இடம்பெற்று எங்களுடைய பரிந்துரையை ஏற்றுக்கொள்கிற நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இஷ்டத்திற்குத் தேர்வு செய்து வைத்துவிட்டு, seniority fix பண்ணி வைத்துப் போய்விடுவார்கள்; திரும்பவும்



உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கிடைக்கிற வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமண உதவித் திட்டம். நாங்கள் இப்போது தொகுதியிலே நன்றி சொல்லப் போகிறபோது, திருமண உதவித் திட்டத்திற்கு இப்போதே application கொடுக்கலாமா என்று கேட்கிறார்கள். உண்மையிலேயே, கலைஞர் அவர்கள், அன்றைக்கு முதல் நாளே அந்தத் திட்டத்தையும் சேர்த்து அறிவித்திருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. ஏனென்று சொன்னால், நிறைய பெண்கள், தாய்மார்கள் எல்லாம், போகிறபோது நிறைய கேட்கிறார்கள். எங்களிடம் திருமண உதவித் திட்டத்திற்கு, இப்போதே விண்ணப்பம் கொடுக்கலாமா என்று கேட்கிறார்கள். ஒருவேளை முடிந்தால், முன்தேதியிட்டு, நீங்கள் பதவியேற்ற அன்றிலிருந்தேகூட அந்தத் திட்டத்திற்கு அனுமதி தந்தால், மனுக்களை வாங்கி, அதற்கான உதவித் தொகையை வழங்குகிற நிலையை நீங்கள் உருவாக்கினால், தொகுதி மக்கள் எல்லாம் மகிழ்ச்சியடைவார்கள் என்ற செய்தியை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இது நிரம்ப அருமையான திட்டம். ஆனால், ஒரு ஆண்டுக்கு ஒரு யூனியனில் ஒரு பஞ்சாயத்துக்குத்தான் என்று இருப்பதை, நீங்கள் கண்டிப்பாக ஒரு வருஷம் 2 பஞ்சாயத்து எனத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஏனென்றால், அடிப்படை வசதி, குடிதண்ணீர், சாலை வசதிகள், எல்லா வசதிகளும் அப்போது கிடைத்தது. நமது தொகுதியில் எல்லாம், இன்றைக்கு மீண்டும் நாம் சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறோம் என்றால், அந்தத் திட்டங்களையெல்லாம் முறையாகப் பயன்படுத்தியதன் பலனை இப்போது தேர்தலிலே வாக்குக் கேட்கிறபோது, முழுமையாக உணர்கிற ஒரு நிலை இருந்தது. எனவே, அந்தத் திட்டத்தை நீங்கள் மீண்டும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – இரண்டு யூனியன்தான் இருக்கிறது ஒரு தொகுதியிலே; இரண்டு யூனியன், இரண்டரை யூனியன் இருக்கிறது; ஒரு யூனியனுக்கு ஒன்று என்றால், அதிலேயும் பாரபட்சம் வருகிறது— எனவே, இரண்டு பஞ்சாயத்துகளை நீங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாகத் தர வேண்டும் என்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு வேண்டிய எலுமிச்சையாறு திட்டம்; அது பொதுப் பணித் துறைத் திட்டம். ஏற்கெனவே, நான் 2001 வரை சட்டமன்ற

உறுப்பினராக இருந்தபோது, அன்றைக்குப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பல கோரிக்கைகளும், முதல்வரிடத்திலே பல கோரிக்கைகளும் வைத்து, அந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சியிலே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு — முதல் reach–லேதான் அந்த அணையே இருக்கிறது — ஆனால் முதல் reach–க்குப் பயன்படாத நிலையிலே அது நான்காவது, மூன்றாவது reach-க்குத் தண்ணீர் கொண்டுபோகிற நிலையிலே அந்தத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. அந்த எலுமிச்சையாறு திட்டத்தை முதல் reach–லே உள்ள குளங்களே பயன்படுகிற மாதிரி, supplementation கிடைக்கிற மாதிரி, அந்தத் திட்டத்தை நீங்கள் மாற்றி, முதல் reach-லேவுள்ள குளங்களுக்கு, ஏனென்றால், second reach–க்குப் பச்சையாறு இருக்கிறது; third–க்கு நம்பியாறு இருக்கிறது; ஆனால் first reach–க்குக் கூடுதல் supplementation–க்குத் தண்ணீர் இல்லை; அதனாலே எலுமிச்சையாறு திட்டத்தை நீங்கள் நிறைவேற்றி, கண்டிப்பாக முதல் reach குளங்கள் பயன்படுகிறவகையிலே, அந்தத் திட்டத்தை நீங்கள் உருவாக்கித்தர வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஜம்பு நதித் திட்டம். நிரம்ப நாட்களாக நிலுவையில் இருக்கிறது. அது கடையத்தில், அதுவும் குறிப்பாக அம்பாசமுத்திரத்திலே நம்முடைய பேரவைத் தலைவருடைய தொகுதியிலே அந்த அணை கட்ட வேண்டும். நம்முடைய அந்தத் திட்டம், நிறைவேற்றப்படுகிறபோது, அந்த கடையம் பகுதி, வேப்பு நாடாறு, ஐந்தாம் கட்டளை, வெங்கடாம்பட்டி, பாப்பாக்குடியிலுள்ள புதுப்பட்டி போன்ற பல கிராமங்கள், கிட்டத்தட்ட 40 கிராமங்கள் அந்த அணைத் திட்டத்தின்மூலமாகப் பயன்பெறும். எனவே, ஜம்பு நதித் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று காங்கேயம் கால்வாய். என்னுடைய தொகுதி முழுவதும் விவசாயத் தொழில் மட்டும்தான் அதிகம். விவசாயம், பீடித் தொழில், நெசவுத் தொழில்கள் இருக்கின்றன. அதிலும் அதிகமாக விவசாயிகள் உள்ளனர். எனவே, காங்கேயம் கால்வாயை முழுமையாக cement lining செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பீடித் தொழிலாளர்களுக்கு என்று ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரி full-fledged ஆஸ்பத்திரி. ஆனால்,





அங்கு போதிய டாக்டர்கள் நியமனம் மற்றும் மற்ற வசதிகள் செய்யப்படாததால் அந்த ஆஸ்பத்திரி முழுமையாகப் பலன் அளிக்காமல் இருக்கிறது. எனவே, அந்த பீடித் தொழிலாளர்களுக்கான ஆஸ்பத்திரியை முழுமையான ஆஸ்பத்திரியாகச் செயல்படவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கூடலிலேயுள்ள பாலம்; ஏற்கெனவே நமது கலைஞர் அவர்கள்தான், 1999–லே தந்தார்கள். ஆனால், அதைக் கட்டி நாம் திறப்பு விழா பண்ணவில்லை. வேறு யாரோ கொண்டுவந்தோம் என்று சொல்லி, இன்றைக்கு அங்கே அவ்வாறு பரப்பிக்கொண்டிருந்தாலும்கூட, மக்கள் எல்லாம் நம்மைத்தான் சொல்கிறார்கள். அந்தப் பாலத்தை நாம் அங்கு கட்டிவிட்டாலும், அணுகுசாலை மிக மோசமாகப் போய்விட்டது. பஸ் போக்குவரத்துக்குப் பெரிய பாலம் அது. 400 மீட்டர் நீளத்திற்குப் பாலம் கட்டி, போக்குவாத்திற்கு அந்தச் சாலை சரியாக இல்லை. அந்தச் சாலையை நீங்கள் சீர்படுத்தித் தாவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் அன்றைக்கு நமது கோரிக்கையை ஏற்று, தொகுதி முழுக்க ஆற்றுத் தண்ணீர் கொடுப்பதற்கு அனுமதியைத் தந்தார்கள். அந்தத் திட்டமும் நிறைவேற்றப்பட்டு, இன்றைக்கு அந்த மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த ஊர் மக்கள் எல்லாம் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள், நிச்சயமாக அந்த வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பைக் கொடுக்கின்ற நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

அதேபோன்று, இந்தத் தொகுதியிலே College கிடையாது. அம்பாசமுத்திரத்திலே இருக்கிறது; அதை விட்டால், திருநெல்வேலியிலே இருக்கிறது. எங்கள் தொகுதியிலே, கிட்டத்தட்ட 11 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. எனவே, ஒரு கலைக் கல்லூரி எங்கள் சேரன்மகாதேவி தொகுதிக்குக் கண்டிப்பாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி நெல் எக்கச்சக்கமாக விளைகிறது. அதனாலே, ஒரு நவீன அரிசி ஆலையைக் கண்டிப்பாக நீங்கள், எங்கள் தொகுதியிலே உருவாக்க வேண்டும் என்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பீடித் தொழிலாளர்கள்; அவர்கள் மிகுந்த கஷ்டத்திலே இருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள், நெசவாளர்கள் எல்லாம் மிகவும் பயங்கரமாகப் பாதிப்படைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்றுத் தொழில் உருவாக்குகிறவகையிலே, எங்கள் பகுதியிலே மிகப் பெரிய ஒரு தொழிற்சாலையை, 1,000, 2,000 குடும்பங்கள் பிழைக்கின்றவகையில் உருவாக்க வேண்டும். ஏனென்றால் பீடிச் சுற்றுகிற பெண்கள் எல்லாம், 40 வயது, 45 வயதிலே இறந்து போகின்றார்கள், Cancer போன்ற வியாதிகள் வந்து. எனவே மிகப் பெரிய தொழிற்சாலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும். எங்கள் பகுதியிலே உருவாக்கித் தந்தால், நெல்லை மாவட்டத்திலே, குறிப்பாக, எங்கள் பகுதியிலே நீங்கள் உருவாக்கித் தந்தால், எங்கள் பகுதியினுடைய தொழிலை மாற்றி, அந்தத் தொழிலிலிருந்து விடுபடுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு வரும்.

நான் சட்டமன்றத்தில் பேரவைத் தலைவரிடம் அனுமதி வாங்கவில்லை; இருந்தாலும் ஒரு கோரிக்கையை நான் சொல்கிறேன். கடந்த 1996 தேர்தலிலே வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டப் பிறகு, நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டது செல்லாது என்று வழக்குத் தொடரப்பட்டு, High Court, Supreme Court–களில் எல்லாம் போய், High Court–ல் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்குச் செலவு முழுவதும் கொடுக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டது, High Court–லே. அங்கே Supreme Court–லேயும் போய், வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. அதேபோன்று அதற்கு முந்தைய தேர்தலிலே 1991–லேயும் இதேபோன்று தேர்தலிலே, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர், சட்டமன்ற உறுப்பினராக வந்ததே செல்லாது என்று வழக்குத் தொடரப்பட்டது. ஆனால், நான் 1996–லே தேர்வு செய்யப்பட்டபோது, இதுபோன்ற வழக்குகளைப் போட்டு, அதையும் மீறி வெற்றி பெற்று, அன்றைக்கு நமது முதல்வரிடத்திலே நான் சென்று, என் தொகுதிக்கு நிறைய பணிகள் செய்ய வேண்டும்; நீங்கள் நிறைய திட்டங்களை எங்களுக்கு அறிவித்துத் தரவேண்டும் என்று கேட்டேன். நீங்கள் நிறைய திட்டங்களைத் தந்தீர்கள். அதனடிப்படையிலே, இன்றைக்கு வாக்குகள் கேட்டபோது, 'நீங்கள் குடிக்கத் தண்ணீர் தந்தீர்; ஆற்றுப் பாலம் தந்தீர்; உங்களுக்குத்தான் வாக்கு' என்று இன்றைக்கு ஒரு மகத்தான வெற்றியை எனக்குத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அன்றைக்கு முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் தந்த திட்டங்கள்தான் காரணம்.





அதேபோன்று, இன்றைக்கும் நான் உங்களிடத்திலே பல கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். எனக்கு அதுபோன்ற பிரச்சினைகள், சிக்கல்கள் எல்லாம் இருப்பது உங்களுக்குத் தெரியும். எனவே, நீங்கள் இந்த தடவையும் நல்ல திட்டங்களை எனக்குத் தந்து மக்கள் மத்தியிலே ஒரு நல்ல மரியாதையை உருவாக்கித் தருகிறவகையிலே, ஆவன செய்ய வேண்டும் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டு, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் பாசித் அவர்கள்.

**திரு. எச். அப்துல் பாசித்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பேரவையிலே, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பெருமையை, சிறுபான்மை சமுதாயத்தின் எளிய தொண்டனாகிய எனக்கு அளித்த, ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அதன் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

நான் காயிதே மில்லத் வழிவந்த தொண்டன். கண்ணியத்தின் பிறப்பிடத்திலிருந்து வந்திருக்கிறேன். இரு வண்ணக் கொடியும், இளம்பிறை கொடியும் இணைந்தே படர்வது தமிழகத்தின் இயற்கை நெறியாகும். சூரியனும், சந்திரனும் இயற்கையின் பிரம்மாண்டங்கள். இளம்பிறை அதன் வடிவங்களுள் ஒன்று. வளர்பிறை உதயசூரியனாகப் பரிணமிப்பது இயற்கையின் நியதியே. எனவே, நான் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் இதயமான உதயசூரியனாக இப்பேரவையிலே இருக்கிறேன். இப்பேரவையில் 70 ஆண்டுக் காலமாக பொது வாழ்வின் சிகரமாகத் திகழும் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று அமர்ந்திருக்கிறார். டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கும் அவையில், நான் இருப்பதை வாழ்வில் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன். முன்னாள் உலகின் மூவா மனிதர்களின் பிரதிபலிப்பாக, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தையும், தந்தை பெரியாரையும், பேறிஞர் அண்ணாவையும்,

[திரு. எச். அப்துல் பாசித்] [2006 மே 29

பெருந்தலைவர் காமராஜரையும் பார்க்கிறேன். அண்ணல் அம்பேத்கரும், பசும்பொன் தேவரும் கலைஞர் அவர்களுடைய வீரத்திலும், விவேகத்திலும் பளிச்சிடுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அய்யன் திருவள்ளுவரின் அறம், பொருள், இன்பம் ஆகிய அனைத்தும் கலைஞரிடம் குடிகொண்ட காரணத்தால்தான், ஆளுநர் உரை தமிழக மக்களின் வேதனை போக்கும் அருமருந்தாக மட்டுமின்றி, பேருரையாகவும் பரிணாமம் பெற்றிருக்கிறது. இவ்வுரை உண்மைகளையும் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் உரையாகத் திகழ்கிறது.

*முற்பகல் 10–50*

ஆளுநர் உரையிலே, 46–வது திட்டமாக சிறுபான்மையினருக்குக் கல்வி, வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும் என்று அறிவித்ததன்வாயிலாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1998 ஆம் ஆண்டு முஸ்லீம் லீக்கினுடைய பொன் விழா மாநாட்டிலே, மறைந்த பெருந்தலைவர் சிராஜ் மில்லத் அப்துல் சமஸ்தாத், பேராசிரியர் காதர் மொய்தீன், ஜி.எம். பனாத் வாலா, இன்றைய மத்திய அமைச்சர் இ. அகமத் அவர்கள் மற்றும் மறைந்த மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களுடைய முன்னிலையிலே தாங்கள் கொடுத்த வாக்குறுதியை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நன்றி உணர்வோடு நினைவுகூர விரும்புகிறேன்.

'பசியால் ஒரு ஏழை மாண்டான்' என்ற செய்தியற்ற சரித்திரத்தைப் படைக்க, மனித மாண்புகளைப் பேணிக் காக்க, இரண்டு ரூபாய்க்கு கிலோ அரிசி வழங்கியதன்வாயிலாக, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்துக்கு உயிரூட்டிய பெருமை உங்களையே சாரும்.

7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடனை இரத்து செய்து, இலட்சோப இலட்சம் விவசாயிகளின் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றி வைத்திருக்கிறீர்கள். இரத்தத் துளிகளாலும், கண்ணீர் அருவிகளாலும் சாதிக்க முடியாததை, ஒரு துளி மையால் சாதித்துக் காட்டிய பெருமை, தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும்.

மாண்புமிகு முதல்வர் மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள், முதல்வராக வரவேண்டும் என்பதற்காகத்தான் மேட்டூரின் நீர்மட்டம்கூட



2006 மே 29] [திரு. எச். அப்துல் பாசித்]

குறையாமல் வரவேற்றுக் காத்திருப்பது, எத்தனை பெரிய அதிசயம்! (மேசையைத் தட்டும் ஒலி) இது இயற்கையின் பாராட்டு. டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தால், எல்லாம் மரபுப்படி நடக்கும் என்பதற்கு அடையாளமாகத்தான் மேட்டூர் அணை ஜூன் 12 ஆம் தேதி திறக்கப்படும் என்ற அறிவிப்பினால், காவிரி டெல்டா விவசாயிகள் நீண்ட காலத்திற்குப் பிறகு நெஞ்சை நிமிர்த்தி நடக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

மனம் மாறினால்தான் மதம் மாற முடியும். கட்டாய மத மாற்றம் என்பது அறிவுக்குப் பொருந்தாத ஒன்று. எனவேதான், மத மாற்ற தடைச் சட்டத்தை இரத்து செய்ய, இப்பேரவையிலே தீர்மானத்தை நிறைவேற்றி, சிறுபான்மை மக்களுடைய அச்சத்தைப் போக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களே, உருது பேசும் முஸ்லீம்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்த பெருமையும், உருது அகாடமியை உருவாக்கிய பெருமையும் உங்களையே சேரும். முந்தைய ஆட்சி, உருது அகாடமியை முடக்கியது. மீண்டும் அதனை உயிர்பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமின்றி, உருது மொழிக் கல்விக்காக ஒரு இயக்குநரை நியமித்து, அதில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிவகுக்கும்படி மிக்கப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உங்களுடைய ஆட்சியிலே வெள்ளக்கல் நீர்த்தேக்கத் திட்டம் வரையப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், பிறகு வந்த அ.தி.மு.க. அரசால், அந்தத் திட்டம் முடக்கி வைக்கப்பட்டது. மீண்டும் அந்த வெள்ளக்கல் நீர்த்தேக்கத் திட்டத்தை, அமல்படுத்த வேண்டுமென்று மிக்கப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாணியம்பாடி தொகுதி மக்களின் நலன் கருதி, வாணியம்பாடி நகரத்திலே வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்காயம் ஒன்றியத்தில் தக்காளி விளைச்சல் பெருமளவில் உள்ளது. விலை ஏற்ற இறக்கம் ஏற்படும்போது விவசாயப் பெருமக்கள்

பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி, நிரந்தரமான வாழ்விற்கு வகைசெய்யும் நோக்கில், தமிழக அரசின் சார்பில், தக்காளி சாறு தொழிற்சாலை ஒன்று நிறுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதனூர் ஒன்றியத்திலுள்ள மலைக் கிராமங்களான காமன்தட்டு, பனங்காட்டூர், நாட்டுனேரி போன்ற கிராமங்களுக்குச் சாலை வசதி இல்லாத காரணத்தினால், *20, 25* கிலோ மீட்டர் தூரம் அப்பகுதி மக்கள் நடந்துதான் நகரங்களுக்கு வர முடிகிறது. எனவே, சாலைகளை அமைத்துத் தரும்படி மிக்கப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–55*

மரியாதைக்குரிய நபிகள் நாயகம் ஸல்லல்லா அலைஹிவஸல்லம் அவர்களினுடைய பிறந்த தின விழா விடுமுறையைத் தமிழகத்தில் மட்டுமின்றி, இந்திய அளவில் பொது விடுமுறையாக அறிவித்த பெருமை, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். ஆனால், முந்தைய ஆட்சியிலே அந்தப் பொது விடுமுறை நீக்கப்பட்டு இருக்கிறது. அந்த விடுமுறையை முந்தைய அரசு இரத்து செய்துவிட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மீண்டும் மிலாது விழாவிற்கு அரசாங்கப் பொது விடுமுறையை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு காலத்தில் வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்று சொல்வார்கள். இப்போது தெற்கோடு சேர்ந்து வடக்கும் வாழ்கிறது என்ற நிலை உருவாகி உள்ளது. மத்திய அமைச்சரவையிலே *13* தமிழக அமைச்சர்கள் இருக்கிறார்கள். இது, தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களினுடைய சாதனை ஆகும். மத்திய அரசின் சாதனை, மாநில அரசின் சாதனை என்று சாதனைகள் தொடரும் இனிய பொற்காலத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களினுடைய சீரிய நல்ல ஆட்சியில், தமிழக மக்கள் வாழ்வும் வளமும் பெற்று வாழ்வார்கள் என்ற நம்பிக்கையோடும், நல் வாழ்த்துகளோடும் என் சார்பிலும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கக்கூடிய இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலும் ஆளுநர் உரையை வரவேற்று அமர்கிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*





## 6. அரசினர் தீர்மானம்

### நீக்கிவைக்கப்பெற்ற அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை வரவு—செலவுக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள வகைசெய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிய இருக்கிறார்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*26–5–2006* அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு, அவை முன்னவரின் தீர்மானத்தையொட்டி, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் இந்தத் தொடர் முழுவதும் நீக்கி வைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. *27–5–2006* ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில், அ.இ.அ.தி.மு.க–வினர் வருத்தம் தெரிவித்துக்கொண்டால், அவர்களை இந்த அவையின் தற்போதைய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அனுமதிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், அவர்கள் சார்பில் குறைந்தபட்சம் வருத்தம்கூட தெரிவிக்கப்படவில்லை. எனினும், இன்று *29–5–2006* ஆம் நாள் அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் இந்த ஆளுநர் உரை விவாதம் முடிந்ததற்குப் பின்னர் தொடங்குகிற பட்ஜெட் தொடரில் கலந்துகொள்ளலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 7. உரிமை மீறல் பிரச்சினையை எடுத்துக்கொள்வது குறித்து

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26–05–2006 ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும், அதில் நான் தாக்கப்பட்டது குறித்தும், அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை 219 விதிப்படி இந்த அவையிலே நான் கொடுத்தேன். அது தங்களுடைய ஆய்விலே இருப்பதாகத் தாங்கள் குறிப்பிட்டீர்கள். இப்போது என்னுடைய உரிமை மீறல் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அந்த உரிமையை எனக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய உரிமை மீறல் பிரச்சினை நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11–00*

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் – தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வை. சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுவதற்கான வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடைபெற்று முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளுடைய தலைமைப் பொறுப்பேற்று இருந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக மக்களுக்கு வைத்த கோரிக்கை, ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்ற அந்த வேண்டுகோளை வைத்து, சர்வாதிகாரம் முடியவைக்கப்பட்டு, ஜனநாயகம் மீட்கப்பட்டு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்று, மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பினை அளித்த தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.





நடைபெற்ற இந்தச் சட்டமன்றத் தேர்தலில், எனது திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்து நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்காக வாக்கு சேகரித்து, மிகச் சிறப்பாக உரையாற்றிய தமிழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, எங்களது சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதைப்போலவே, எனது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய தளபதி அவர்கள் வருகைதந்து, என்னுடைய மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியிலே 10 இடங்களுக்கு மேலே பேசி, வாக்கு சேகரித்தார்கள். அதிலும் குறிப்பாக, மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் பெரும்பான்மையான இடங்களில் மரியாதைக்குரிய தளபதி அவர்கள் எனக்கு வாக்கு சேகரித்து உரையாற்றியது என்பது, என்னுடைய வெற்றியை உறுதி செய்வதற்குப் பேருதவியாக இருந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவுகூர்ந்து, அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, நமது ஜனநாயக முற்போக்குக் கட்சித் தலைவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, நடைபெற்ற இந்தத் தேர்தல் என்பது, இதுவரையிலும் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களிலே புதுமையான தேர்தலாக நடைபெற்றிருக்கிறது. அரசு என்றால் என்ன, தேர்தல் என்றால் என்ன என்பது பல சந்தர்ப்பங்களிலே புலப்படாத ஒன்றாக இருக்கும், தேர்தல் காலத்தில். ஆனால், இந்தத் தேர்தல் என்பது, இந்தக் கருத்துகளை மிகத் தெளிவாக விளங்கச் செய்வதற்குரிய ஒரு தேர்தலாக நடைபெற்றது என்பது எங்களுடைய கருத்து. அதைவிட வாக்காளப் பெருமக்கள், தெளிவாகத் தங்களுடைய தீர்ப்புகளை வழங்குவதற்கான வாய்ப்பை அளித்திருக்கிற தேர்தலாக நாங்கள் கருதுகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தத் தேர்தலை ஒரு புதிய திசையை, வழியை காட்டிய தேர்தல் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம் என்று நாங்கள் கருதுகிறோம். அதற்குப் பிரதான காரணம் என்று சொல்ல வேண்டுமானால், இதுவரையிலும் தேர்தல் காலங்களிலே அரசியல் கட்சிகள் தங்களுடைய கொள்கை நிலைகளை எடுத்துக் கூறுகிற வழக்கம் உண்டு. அது ஒரு கட்டத்திற்கு மேலே போய், தனிநபர் விமர்சனங்களாக, தனிநபர் தாக்குதல்களாகக்கூட மாறிய காலங்கள் ஏராளம் உண்டு. ஆனால், இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையிலும், தனிநபர் தாக்குதல் என்பது அது சொந்த விருப்பு

வெறுப்புகளுக்காக யாரோ பேசியிருக்கலாம். ஆனால் தேர்தலுடைய பிரதான நோக்கம் அதுவாக இருக்காமல், இந்தத் தேர்தலுடைய நோக்கம் என்பது, ஒரே பிரதான நோக்கமாக அனைவருமே பேசக்கூடிய ஒன்றாக, அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக, அதைப்பற்றி விவாதிக்கக்கூடிய ஒன்றாக, ஏன், இன்னும் சொல்லவேண்டுமானால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கிற முன்னாள் முதலமைச்சர் அவர்களேகூட அதைப்பற்றிப் பேசித்தான் தனது கட்சிக்கு வாக்கு சேகரிக்க வேண்டிய ஒரு நிர்பந்தத்திற்குரிய பிரச்சினையாக வந்தது என்பது, கருத்தாக வந்தது என்பது, இதுவரையில் வரலாற்றில் இல்லாத திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை என்பதை யாருமே மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லா அரசியல் கட்சிகளுமே தேர்தல் அறிக்கையை முன்வைத்துதான் தேர்தல் களத்தில் நின்றோம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் தேர்தல் அறிக்கையை வைத்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் வைத்தது. பாட்டாளி மக்கள் கட்சியும் வைத்தது. தேசிய காங்கிரசும் வைத்தது. ஆகவே எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் அறிக்கைகளை வைத்தன. ஆனால் ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளுடைய ஒவ்வொரு கட்சியினுடைய தேர்தல் அறிக்கையையும் ஒன்றாக்கி, அதையே ஒட்டுமொத்த கூட்டணியின் அறிக்கையாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை இருந்தது என்பதுதான் இதிலே இருக்கிற சிறப்பு. ஆகவே அந்தத் தேர்தல் அறிக்கையைப் பற்றிய செய்தியும், அதைப் பற்றிய கருத்தும், அதைப் பற்றிய பேச்சும்தான் இந்தச் சட்டமன்றத் தேர்தலிலே பிரதானமாக இருந்தது என்பது மறுக்க முடியாத ஒன்று.

*முற்பகல் 11–05*

அதிலே நான் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளரே இதைப் பேசினார் என்று நான் குறிப்பிட்டேனே, அவரும் தேர்தல் அறிக்கையை வைத்துவிட்டுத்தான் பிரச்சாரத்திற்குப் புறப்பட்டார். அவர் 10 தினங்களுக்கு மேலாக பிரச்சாரப் பணிகளை முடித்துவிட்டு, 12–வது, 13–வது தினங்களிலே ஒரு புதிய அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பு என்ன? இலவசமாக 10 கிலோ அரிசி வழங்குவேன் என்று சொன்னார். அப்படியானால், இவர் இலவசமாக வழங்குவது மக்களுக்குரிய தேவைக்காக வழங்குவது என்று அர்த்தமல்ல. திராவிட





முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படும் என்று சொன்ன அந்தச் செய்தி இருக்கிறதே, அது பட்டிதொட்டியெல்லாம் பரவி, மக்களுடைய மகத்தான ஆதரவைப் பெற்றுவிட்ட காரணத்தினாலே, ஜெயலலிதா அவர்கள், 10 கிலோ அரிசியை நான் வழங்குவேன் என்று திரும்ப இடையிலே ஒரு தேர்தல் அறிக்கையை அவர் அறிவிக்க வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டார். ஆகவேதான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை என்பது, இதுவரையிலும் இல்லாத ஒரு வாலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக தமிழக மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆகவே, இதேபோல பல செய்திகள் அந்தத் தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டு, கொள்கை அறிவிப்புகளாக வந்தன என்பதும், அதையே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தேர்தல் அறிக்கையே என்னுடைய ஆட்சிக் காலத்தில் நிதிநிலை அறிக்கையாக ஆக்கப்படும் என்று அறிவித்த செய்தி இருக்கிறதே, அது மிகப் பெரிய (மேசையைத் தட்டும் ஒலி) துணிவான செய்தி. அதுவே இன்றைக்கு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற செய்தியாக வந்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக, வரவேற்கக்கூடிய ஒன்றாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே இப்படிப்பட்ட சிறப்புகள் எல்லாம் இந்தத் தேர்தலிலே இருந்தன என்ற காரணத்தினாலேதான் இது ஒரு புதுவகையான தேர்தல் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

ஆனால், இதையும் தாண்டி, மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களும் இருக்கிறார்கள். ஒரு வாதத்திற்காக ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார். மறுதினம், அதையே வேறுவிதமாக, குரங்குக் கையிலே அகப்பட்ட பூமாலை என்று நம்மை விமர்சித்தார். திரும்ப, இரண்டு தினங்களுக்குள்ளாகவே இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று சொன்னார் முன்னாள் முதலமைச்சர் அவர்கள். அப்படியானால் மூன்று தினங்களுக்குள்ளாகவே, மூன்று கருத்துகளை வெளியிடுகிறார் என்று சொன்னால், அதைத்தான் இந்தச் சட்டமன்றத்தில் நான் திரும்பத் திரும்பப் பதிவு செய்திருக்கிறேன், இன்றைக்கும் திரும்பப் பதிவு செய்ய விரும்புகிறேன்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியைக் கொட்டித் தீர்த்துக்கொண்டேயிருக்கிறார் என்பது அவருடைய செய்தியிலிருந்து வெளிப்படையான உண்மையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் சட்டமன்றத்திலே வந்து சொன்னார்.

ஒரேயொரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவருடைய பேச்சிற்குப் பதில் சொல்வார்கள். தமிழகத்தினுடைய வளர்ச்சி விகிதம் எப்படியிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டிச் சொல்லப்பட்டிருக்கிறது; சரிந்திருக்கிறது; அதை முன்னேற்றுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய உரையிலே சொன்னது, நேற்றைய முந்தினநாள் பேசுகிறபொழுது அதை மறுத்தார். தமிழகம் தொழில் துறையிலே முன்னேறியிருக்கிறது என்று சொன்னார். அந்தப் புள்ளிவிவரங்கள், சரியா தப்பா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். ஆனால், நான் கேட்கிறேன், அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் கடைசியாக இறங்குகிறபொழுது அண்ணா தி.மு.க.–வினுடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற அந்தச் செய்தியைத் திரும்ப அவரும் படித்துப் பார்க்க வேண்டும்; நாமும் படித்துப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்து.

அதிலே சொல்லப்பட்டிருக்கிற செய்தியில், தமிழகத்தினுடைய வேளாண் உற்பத்தி என்பது 13 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துவிட்டது என்று நான் சொல்லவில்லை, அ.தி.மு.க.–வினுடைய நிதிநிலை அறிக்கையிலேயே எழுத்துப்பூர்வமாக எழுதி வைக்கப்பட்ட செய்தி. அப்படியானால், 13 சதவீத வளர்ச்சியிலிருந்து 8 சதவீதமாகக் குறைந்துவிட்டது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிதிநிலை அறிக்கையிலேயே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை நான் அன்றைக்கு விவாதத்திலே சொல்கிறபொழுது, உங்களுடைய ஆட்சியிலே விவசாயப் பொருளாதாரம் என்பது வீழ்ச்சியடைந்திருக்கிறது என்று சொன்னேன். இல்லை, இல்லை அது இயற்கைப் பாதிப்பால் வந்திருக்கிறது என்று சொன்னார். இயற்கைப் பாதிப்பால் வந்திருக்கிறதா, செயற்கையாக வந்திருக்கிறதா என்பதை நீங்கள் பரிசிலித்து அதற்குரிய தீர்வு காண்பதற்கு உரிய முயற்சி எடுக்க வேண்டும்; ஆனால், வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னேன். அதைச் சொல்லிவிட்டு, இயற்கைப் பாதிப்பு வந்த அந்த ஆண்டைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று கேட்கிறபோது, முதலமைச்சர் அவர்கள் அதற்கு மழுப்பலாகப் பதிலைச் சொன்னார். ஆனால் அதிலிருந்து தெரிகிற உண்மை என்னவென்றால், இயற்கைச் சீற்ற பாதிப்பு எந்த ஆண்டு வந்ததோ, அந்த ஆண்டிற்குரிய வீழ்ச்சியாக அது குறிப்பிடப்படவில்லை. நல்ல நிலையிலே செயல்பட்ட ஆண்டுகளிலேயே





அப்படிப்பட்ட வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது பின்னாலே ஒரு செய்தியின் மூலமாக நான் தெரிந்துகொண்டேன். ஆகவே, அண்ணா தி.மு.க. ஆட்சியிலே விவசாயத் துறை படு வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது என்பதுதான் உண்மை என்பது அவர்களுடைய நிதிநிலை அறிக்கையின்மூலமாகவே இங்கே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற உண்மை. ஆகவே, இதிலே குறிப்பாக இப்படி நான் இதைச் சுட்டிக்காட்டிச் சொல்வதற்கு, பல்வேறு மறுப்புகளைச் சொல்வதற்காக அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள். ஆனால், ஐந்தாண்டுக் காலத்தில் இப்படி அடிப்படைத் தேவைக்குரிய பிரச்சினைகளையெல்லாம் நிறைவு செய்வதற்குப் பதிலாக, திட்டங்களைத் தீட்டுவதற்குப் பதிலாக, சட்டங்களைப் போடுவதற்குப் பதிலாக, மக்கள் விரோதச் சட்டங்களைப் போட்டார்களே தவிர, மக்களையும், ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும், இதர பகுதி மக்களையும் துன்புறுத்துவதற்கான சட்டங்கள்தான் ஏராளமாக இந்த அவையிலே போடப்பட்டன. ஆகவே, அவற்றையெல்லாம் இன்றைக்கு நீக்குவதற்குரிய ஒரு முயற்சி எடுக்கிற முதலமைச்சராக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் இதிலேயிருக்கிற பெருமைக்குரிய ஒன்றாக நாங்கள் கருதுகிறோம்.

முற்பகல் 11–10

குறிப்பாக, இந்த ஆளுநர் அறிக்கையிலே பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதுவே திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலும் சொல்லப்பட்டது, வெள்ளம் வறட்சிப் பாதிப்புகளால் வேதனையுற்ற விவசாயிகளுக்கு, ஏழாயிரம் கோடி ரூபாய் அளவிற்கான கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று. இந்த அறிவிப்பு, தமிழகத்திலே இருக்கிற அனைத்துப் பகுதி விவசாயிகளுடைய வயிற்றிலே பால் வார்த்த செய்தியாக இருக்கிறது. இந்த அவையிலே தொடர்ந்து குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறோம். தேர்தல் காலத்திலே வாக்கு சேகரிக்க வந்தபொழுது, நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், திருவாரூரிலே பேசுகிறபொழுது, எங்களை அறிமுகப்படுத்தி பேசுகிறபொழுது சொன்னார்கள். இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்த பழனிசாமி அவர்களும், சிவபுண்ணியம் அவர்களும் தொடர்ந்து இந்தக் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குரல் கொடுத்தே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய குரல், செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது. கேட்க மறுத்தார்கள், அந்த ஆட்சியாளர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்து, அதை முற்றாக தள்ளுபடி



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227073

செய்வதற்குரிய முயற்சியை எடுக்கும் என்று தேர்தல் காலத்திலே, பிரச்சாரக் கூட்டத்திலேயே டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதையே இன்றைக்கு ஆளுநர் உரையின் மூலமாகச் சொல்லப்பட்டிருப்பது மட்டுமல்ல; பதவி ஏற்ற அன்றையதினமே இரண்டாவது உத்தரவாக அதிலே கையெழுத்திட்டு, 7 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அநேகமாக இந்திய வரலாற்றிலேயே இப்படி ஒரு மாநிலத்தில் இவ்வளவு அதிகமான தொகையை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்குகிற மாநிலம் தமிழகமாகத்தான் இருக்கமுடியும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மகிழ்ச்சியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இது ஒரு சாதாரண நடவடிக்கை அல்ல. ஆனால், இதைப்பற்றிப் பேசுகிறபோது, இங்கே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள், இது சாத்தியமா; இது நடைபெறுமா என்று. நடைபெறுவதற்காகத்தானே திட்டம் போடப்படுகிறது? இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே போடுவதற்குரிய முயற்சியே எடுக்கவில்லை. அதைப்பற்றிச் சிந்திக்கவே மறுத்தார்கள். ஆனால், இதற்குரிய முயற்சி எடுக்கப்படுகிறபோது, நடைபெறுமா என்று ஆருடம் சொல்லலாமா? ஆருடம் கேட்டுக் கேட்டுத்தான் அ.தி.மு.க. ஆட்சியே போய்விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எதிர்காலத்திலே இப்படி விவசாயிகளுடைய பிரச்சினையைப்பற்றிப் பேசுகிறபோது, ஆருடம் சொல்லத் தேவையில்லை. இது எங்களுடைய, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, என்னுடைய சொந்தக் கருத்து.

இதை நடைமுறைப்படுத்துகிறபோது, சில பிரச்சினைகள் வரலாம். அல்லது இதிலே ஏற்றத்தாழ்வுகள் வரலாம். வரவே கூடாதா? ஒரு நிர்வாகம் என்று சொல்கிறபோது, அதிலே பிரச்சினைகளும் சிக்கல்களும் வராமல் இருக்குமா? வருகிற அந்தச் சிக்கல்களையும், தடைகளையும் தாண்டிதான் இந்த நிவாரணப் பணிகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆகவே, இதைச் செய்வதற்குரிய முயற்சிகள் இருக்கின்றன. அதற்குரிய வழிவகைகளைக் காணுகிற தலைவராக டாக்டர் கலைஞர் அவர்கள் கண்டிப்பாக இருப்பார் என்று நாங்கள் நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது நடக்கும். ஆகவேதான், இந்த விவசாயிகளுக்குரிய இந்தக் கடன் சுமை என்பதைத் தீர்ப்பது என்பது இருக்கிறதே, அது சாதாரண விஷயமல்ல. அடிப்படை பொருளாதாரத்திற்குத் திட்டமிட்டு, அந்தக் கட்டமைப்பு சரிந்துவிடாமல் பாதுகாக்கப்படுவதற்குரிய நடவடிக்கையாக அந்தச் செய்தி



அமைந்திருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்தாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, *20* இலட்சம் ஹெக்டேர் நிலம், *50* இலட்சம் ஏக்கர், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக செயல்படுத்தப்படும் என்று அறிவித்தவர் முன்னாள் முதலமைச்சர். அதையே திரும்ப எடுத்து — அவர் சொன்னது யாருக்காகச் சொன்னார்? மிகப் பெரிய பண முதலைகளுக்குத் தாரை வார்ப்பதற்குரிய திட்டத்தை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அறிவித்தார். ஆக அறிவித்தது யாருக்காக? ஏழை எளியவர்களுக்காகவா, நிலமற்ற ஏழைகளுக்காகவா, விவசாயிகளுக்காகவா அறிவித்தார்? அவர் இந்தத் திட்டத்தை அறிவித்து, மிகப் பெரிய பணக்காரர்கள் கையிலே அந்த நிலத்தை ஒப்படைப்பதற்கும், அதைப் பண்ணைத் திட்டங்களாக மாற்றுவதற்கும், அவர்கள் விருப்பம்போல செயல்பட்டு, ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, சுற்றுப்புறத்திலே இருக்கிற நூற்றுக்கணக்கான சாதாரண ஏழை விவசாயிகளுக்குக்கூட, நிலத்தடி நீர் மட்டம் கீழ்நோக்கிச் சென்று, அவர்களுக்கே நீர் கிடைக்காமல், விவசாயம் செய்ய முடியாத இக்கட்டான ஒரு திட்டத்தை அவர் அறிவித்தார்.

இதை அவர் இந்தச் சட்டமன்றத்திலே அறிவிக்கிறபோது, இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த நாங்கள் எதிர்த்துப் போராடினோம். அன்றைக்கு உறுப்பினராக இருந்த மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் எழுந்து கேட்டபோது, முன்னாள் முதலமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா? இப்படியே கேட்டுக்கொண்டு இருக்கிறார் ஹேமச்சந்திரன், இவர்களுக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை. நான் இதோடு விடவில்லை. மற்ற அமைச்சர்களும் அவர் என்ன கேட்டாலும், பதில் சொல்லாதீர்கள் என்று அறிவித்தார். இதுதான் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு முதலமைச்சர் சொல்கிற பதிலா? அப்படியானால், இந்தத் திட்டத்தைப் பற்றி விமர்சனமே செய்யக் கூடாதா? இப்படிச் சொல்லுகிறபொழுது, அப்படியொரு பதிலைச் சொல்லி அவர் பேசவே மறுத்தார்.

*முற்பகல் 11–15*

திரும்பத் திரும்ப நாங்கள் குரல் கொடுப்பதற்காக முயற்சி எடுத்தபோது, ஏற்றுக்கொள்ள மறுத்தார். அப்படியானால், அந்தத் திட்டத்தினுடைய உள்நோக்கம் என்ன என்பது, நாட்டு மக்களுக்குத் தெரிந்தது. அதை மாற்றி, அதற்குரிய திட்டங்களை ஏழையெளிய விவசாயிகள், தொழிலாளர்கள், பயன்படுத்துவதற்குரிய திட்டமாக மாற்றி,

அதை இரண்டு ஏக்கர் வீதம், விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்குவேன் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்போது அந்த நிலம் எங்கே இருக்கிறது என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார். நான் முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்களுடைய ஆட்சிக் காலத்திலே 2004 ஆம் ஆண்டில் ஒரு புள்ளிவிவர அறிக்கை கொடுத்திருக்கிறீர்கள். Statistics Book கொடுத்திருக்கிறார்கள். அந்த அம்மாதான் கொடுத்தார்கள். அதில் 60–வது பக்கத்திலே விவரம் இருக்கிறது, எடுத்து படித்துக்கொள்ளுங்கள். தலைப்பு வாரியாக என்னென்ன நிலங்கள் இருக்கின்றன; அதிலே தரிசு நிலம் எப்படியிருக்கிறது; மேய்க்கால் புறம்போக்கு எப்படியிருக்கிறது; பயன்படுத்தப்படாத நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று ஒரு மதிப்பீடு செய்கிறபோது, நான் மேலெழுந்தவாரியாகவே ஒரு கணக்குப் போட்டு பார்க்கிறபொழுது, கிட்டத்தட்ட 78 இலட்சம் ஏக்கருக்கு மேலே எடுப்பதற்குரிய நிலங்கள் இருப்பதாக ஜெயலலிதாவினுடைய ஆட்சியில் சொல்லப்பட்ட அந்தப் புள்ளிவிவரத்திலே இருக்கிறது. ஆகவே நிலமே கொடுக்க முடியாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஆகவே கொடுப்பதற்கு முன்னதாகவே இது நடக்குமா, அது நடக்காது, எங்கே இருக்கிறது நிலம் என்று கேட்டால், இவர் சொல்லுகிறபோது நிலம் வரும்; நாங்கள் சொல்லுகிறபொழுது, நிலம் வராதா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்பார்கள். அதைக் கேட்கத்தான் போகிறார்கள். இவர், முன்னாள் முதலமைச்சர் சொன்னால் நிலம், 'ஜீபூம்பா' என்றால் நிலம் வந்துவிடுமா? இந்த ஆட்சியில் மட்டும் நிலம் இருக்கிறது என்று சொன்னால், அது வராமல் போய்விடுமா? ஆகவே, இருக்கிற நிலத்தை எடுப்பதற்குரிய வாய்ப்பை, சட்ட சிக்கல்களைத் தீர்த்து ஏழைகளுக்குரிய நிலத்தை வழங்குவதற்குரிய முயற்சி எடுப்பது என்ற இந்தத் திட்டம் இருக்கிறதே இதுதான் மகத்தான திட்டம். இது கம்யூனிஸ்டுகளுடைய—எங்களுடைய—அடிப்படை கோரிக்கை. நில உடைமை என்பதுதான் இந்தச் சமுதாயத்திலே பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. அப்படி அது ஒரு முக்கியமான காரணியாக இருக்கிறபொழுது, அந்த நில உடைமையைத் தகர்த்து, பரவலாக மக்களுக்குக் கிடைக்கச் செய்கிற அந்தத் திட்டத்தை, டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னால், கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கோரிக்கை வெற்றி பெற்றிருக்கிறது என்று நாங்கள் எல்லாம் பெருமையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இதெல்லாம் எதிர்காலத்தில் நடைமுறையில் வருகிறபொழுது,





இது ஒரு மகத்தான திட்டமாக, வெற்றிச் சாதனையாக, வரலாற்றிலே பதிக்கக்கூடிய செய்தியாக வர இருக்கிறது. ஆகவே இதற்கு மறுப்பு சொல்லுகிறார்.

அதைப்போலவே, இன்னும் பல்வேறு திட்டங்களைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, காவிரி நீர்ப் பிரச்சினை. அதை நான் இப்போது சொல்லவேண்டியதில்லை. நிறைய நேரம் நான் பேசிவிட்டேன். அதற்கான அறிவிப்புகள் நம்முடைய அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. நான் ஒரேயொரு செய்தியைத்தான் சட்டமன்றத்திலே வந்து குறிப்பிட்டுச் சொன்னேன். காவிரி நீர்ப் பிரச்சினையில், இறுதித் தீர்ப்பைப் பெறுவதற்குரிய உத்தரவாதத்தைப் பெறுகிற நோக்கத்தில், இந்தச் சட்டமன்றத்திலே ஒத்தக் கருத்தோடு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று ஒரு முன்மொழிவைச் சொன்னேன். உடனடியாக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எழுந்து சொன்னார்; மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்றக்கொள்ளக்கூடியது என்றார். எனக்கே மகிழ்ச்சி தாங்கவில்லை. நிலைகால் புரியவில்லை எனக்கு. முதலமைச்சர் அவர்களே ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்று மகிழ்ச்சியின் உச்சத்திற்கு நான் சென்றுவிட்டேன். அடுத்த வரியிலே அவர் சொன்னார்; அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிற சாத்தோடு சேர்த்து, கர்நாடக மாநில அரசாங்கத்தை 356–வது பிரிவைப் பயன்படுத்தி கலைக்கவேண்டும் என்று இணைத்து தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் என்றார். நான் வெளியில் பேசிய செய்தியைச் சொல்லவில்லை; இந்த அவையிலேயே பதிவு செய்யப்பட்டிருக்கிற செய்தி இது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய செய்தியையும் நான் சொல்லவில்லை. புத்தகமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிற செய்தியை நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். காவிரி நீர்ப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சிகளும் ஒத்த கருத்தோடு ஒரு தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று கேட்கிறபொழுது, அந்த மாநில அரசைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார். தண்ணீர் கொடுக்கிற இடத்திலே இருக்கிற கர்நாடகத்தைக் கலைக்க வேண்டும் என்று சொன்னால், தண்ணீர் வருமா? இப்படித்தான் முரண்பட்ட நிலைகளில் பல தகவல்களை இந்தச் சட்டமன்றத்திலே பதிவு செய்ததனுடைய விளைவாக, நம்முடைய உரிமைகளைப் பெறுவதிலே தடைக் கல்லாக இருந்திருக்கிறது அதி.மு.க. ஆட்சி. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் நீக்கி, காவிரி நீர்ப் பிரச்சினைக்குரிய நிரந்தர தீர்வு காண்பதற்குரிய முயற்சியை, இடைக்கால தீர்ப்பை உரிய முறையிலே பெறுவதற்கான முயற்சியை டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்று, திறம்பட

நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதற்குரிய முழு ஒத்துழைப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நல்கும். ஆனால் இப்படிப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக பல தடைகள் ஏற்பட்டிருக்கின்றன.

அதேபோல, முல்லைப் பெரியாறு அணையினுடைய உயரத்தை அதிகரிக்கவேண்டும் என்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்று அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதைத் தடுப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதெல்லாம் சிறப்பிற்குரிய, வரவேற்புக்குரிய செய்திகளாக நாங்கள் கருதுகிறோம். குறிப்பாக, தென்னக நதிகளை இணைக்கும் திட்டம். இதற்கு மத்திய அரசை வலியுறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிற இந்தச் செய்தி, மிக சிறப்பிற்குரிய தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய செய்தியாக நாங்கள் கருதுகிறோம்.

அதேபோல, உலக வர்த்தக அமைப்புகள்மூலமாக, Doha மாநாடு நடந்தபொழுது, மிக சிறப்புக்குரிய முறையிலே நம்முடைய தமிழகத்தின் சார்பிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னணித் தலைவர்களில் ஒருவராக இருந்து, மறைந்த மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்கள் அந்த Doha மாநாட்டிலே பேசிய அந்தச் செய்தி இருக்கிறதே, மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன அந்தச் செய்தியின்மூலமாக, விவசாயிகளுடைய நலன் பாதுகாக்கப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற அந்தச் செய்தி வரவேற்கக்கூடியது. உலக வர்த்தக அமைப்பைப் பற்றி செய்திகள் குறித்து, எனக்கு வேறான கருத்துகள் இருந்தாலும்கூட, அந்தக் கருத்துகள்மூலமாக, இந்திய நாட்டின் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாதே என்ற அழுத்தமான கருத்தை அந்த மாநாட்டிலே பதிவு செய்தவர் மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்கள். அதனுடைய விளைவாக, ஓரளவு உலகமயமாக்கல் கொள்கையின் மூலமாக, தாராளமயமாக்கல் கொள்கையின் மூலமாக, விவசாயிகள் ஓரளவு இன்று இந்தியாவிலே, தமிழகத்திலே பாதுகாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அதனுடைய தொடர்ச்சியாக, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய கருத்தாக வந்திருக்கிறது என்பது உலக வர்த்தக ஆணையத்தின் மூலமாக விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவண்ணம் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று சொல்லியிருக்கிற அந்தக் கருத்து



இருக்கிறதே, அது வரவேற்கக்கூடிய ஒன்று. அதைத் தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய ஒன்றாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே இப்படிப்பட்ட நல்ல செய்திகள் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 11–20*

அதேபோல, வேளாண் தொழிலைப் பாதுகாப்பதற்காக, மத்திய அரசைப் பல்வேறுவகைகளிலே வற்புறுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட இருக்கிறது. அமைப்புசாரா தொழில்களுக்கான வாரியம் செயல்படுத்தப்பட இருக்கிறது. பனைத் தொழிலாளர்களுக்கான வாரியம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

அரிசிக்கான குடும்ப அட்டை பெற்றவர்களுக்கு 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி—அதை நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன்—இதை வழங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, வருகிற 3 ஆம் தேதி முதல், டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளிலே வழங்கப்பட இருக்கிறது என்ற செய்தி இருக்கிறதே, இப்போது ஊரிலிருந்து நூற்றுக்கணக்கிலே தொலைபேசியில் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. 'நீங்கள் வர வேண்டும், இந்த அரிசி திட்டத்தினை அறிவிக்கிறபோது எல்லா இடங்களிலும் பங்குகொண்டு, அதை வழங்குவதற்குரிய விழாவாக மாற்ற வேண்டும்' என்று சொல்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்களே, 3 ஆம் தேதி உங்களுடைய பிறந்த நாள் என்பது, கோலாகலமான விழாவாக, மக்கள் விழாவாக, (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் மதிக்கிற விழாவாக, ஏழையெளிய, சாதாரண பகுதி மக்கள் வாழ்த்துகிற விழாவாக, அது நடைபெற இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து இடங்களிலேயும், அது அவரவர்களுடைய இல்லங்களினுடைய திருவிழாவாக மாற்றப்பட இருக்கிறது. இது ஒரு சிறப்புக்குரிய திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

அதேபோல, புதிதாகக் குடும்ப அட்டைகள் பெற்றவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்ற அறிவிப்பு. திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்கச் செய்வது, அதேபோல, தொல்காப்பியர், திருவள்ளுவர் பெயரில் செம்மொழி விருதுகள் வழங்குவதற்கான கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாகப் பயின்றிட கல்வியாளர்களைக் கலந்துபேசி, ஆணை பிறப்பிப்பது குறித்த விஷயத்தைப்பற்றி ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இது சென்ற ஆட்சியிலே, அறிவியல் பாடம் என்ற பெயராலே அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தப் பாடத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டோம் என்று பெருமையாகச் சொல்கிறபோது, நான் இடையிலே கேட்டேன்; நீங்கள் பாடத் திட்டத்தைக் கொண்டு வந்ததை நான் பொதுவாக வரவேற்கிறேன்; ஆனால் அந்தப் பாடத் திட்டம் அரசின் சார்பில் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா, அதன்மூலமாக தேர்வுகள் நடத்தப்பட்டிருக்கிறதா, அதன்மீது மதிப்பெண்கள் பெறப்பட்டு, அந்த மாணவர்கள் உயர்த்தப்பட்டிருக்கிறார்களா என்று கேட்டபோது, அன்றைக்குக் கல்வித் துறை அமைச்சராக இருந்த, அந்தப் பிரச்சினைக்குரியவராக இருந்த திரு. சி.வி. சண்முகம் அவர்கள், 'ஆம், நடைமுறைப்படுத்தப்படுகிறது' என்று சொன்னார். நான் 'இல்லை' என்று சொன்னேன். 'இல்லை, இல்லை' என்று மறுத்துப் பேசினார். 'சபாஷ், சண்முகம் அவர்கள், சரியான பதிலைச் சொன்னார்' என்று அன்றைய முதல்வர் அவர்கள் பாராட்டினார். பின்னாலே, பள்ளிகளிலே அதற்குரிய பொறுப்பாளர்களை, அந்தக் கல்வித் துறை அதிகாரிகளை விசாரித்துப் பார்க்கிறபோது, அதற்குரிய, பாடத் திட்டத்திற்குரிய தேர்வுகளே நடைபெறவில்லை என்ற அதிகாரபூர்வமான செய்தி வந்திருக்கிறது. ஆகவேதான், அதையெல்லாம் உணர்ந்திருக்கிற காரணத்தினாலேதான், டாக்டர் கலைஞர் அவர்கள் இதற்குரிய சட்ட நுணுக்கங்களை ஆய்ந்து, அதற்குரிய கல்வியாளர்களைக்கொண்டு, ஒரு அரசாணை பிறப்பிக்கப்படும் என்று ஆளுநர் உரைமூலமாகச் சொல்லி இருப்பதைத்தான் சரியான திட்டமாக நாங்கள் கருதுகிறோம். அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி எடுத்திருப்பதற்கு எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, காமராசர் பிறந்த தினமான அன்றைய நாளிலே, சத்துணவுத் திட்டத்தின்மூலமாக அந்தக் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டை வழங்குவது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது சிறப்புக்குரிய ஒன்று. சென்ற ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் தீர்ப்புக்குப் பின்னாலே, திரும்ப அது வழங்கப்பட்டது. திரும்ப நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் வாரம் இரண்டு முட்டை வழங்கப்படும் என்று சொல்லியிருப்பது வருங்கால சந்ததியினுடைய வாழ்வு வளமாக, நலமாக இருப்பதற்கான நல்ல திட்டமாக நாங்கள் கருதுகிறோம்.





அதைப்போல, ஒப்பந்த முறையிலே தொகுப்பூதியம் பெறும் ஆசிரியர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது, அரசுப் பள்ளிகள், கல்லூரிகளில் கணினி வழங்குவது, காலியிடங்களில் காலமுறை ஊதியத்தின் அடிப்படையில் நியமனம் செய்வது என்று சொல்லப்பட்டிருப்பது, இப்படி எல்லாவிதமான இந்தச் செய்திகளையும் பார்த்தால், அநேகமாக, இந்த ஆளுநர் உரையின்மூலமாகவே, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு, 5 ஆண்டுக் காலத்திற்கு நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் எல்லாமே, இன்று கொள்கை அறிவிப்பாகவே வந்துவிட்டன என்பதை மகிழ்ச்சிக்குரிய செய்தியாக நாங்கள் சொல்கிறோம். இப்படிப் பல்வேறு கருத்துகளோடு, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அந்த உயர் கல்வி நிறுவனங்களிலே 27 சதவீதம் இட ஒதுக்கீட்டிற்கான அந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவருவதற்காக மத்திய அரசு எடுத்திருக்கிற முயற்சியைப் பாராட்டுவதும், வரவேற்பதும் என்பது மட்டுமல்ல; இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது இருக்கிறதே, இதுதான் அந்தச் சமூகநீதி கண்ணோட்டத்தை யார் புரிந்துகொள்வார்கள், யார் செயல்படுத்துவார்கள் என்பதற்குரிய உதாரணமாக, டாக்டர் கலைஞர் அவர்கள் திறம்பட இந்தச் செய்தியை, இதிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள் என்பதாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. அதற்குரிய அந்த முக்கியத்துவத்தை உணர்ந்து, மத்திய அரசாங்கம் அதனை உடனடியாகச் சட்டமாக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

அதைப்போல, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான முயற்சி, மருத்துவமனைகளிலே உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான முயற்சி, சாலைப் பாதுகாப்பு, மேலும் சாலைகள் அகலமாக்கப்படும் என்ற செய்தி, ஐநூறு மக்கள் தொகை கொண்டிருக்கிற கிராமப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள், கான்கிரீட் சாலைகள், இப்படிப் பல்வேறு திட்டங்களை அறிவித்து, இந்த நாட்டு மக்களுக்குச் சிறந்த ஓர் ஆட்சியாக, நடைமுறைப்படுத்துவதற்குரிய முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, அரசு அலுவலர்களுக்கு எதிராக போடப்பட்ட, அந்த 'டெஸ்மா' சட்டம் நீக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 மே 29

நம்முடைய முதலமைச்சர் அவர்கள்மீது பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்கள்மீதெல்லாம் அன்றைக்குப் பொறுப்பிலே இருந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், எங்களுடைய தலைவர் நல்லகண்ணு, வரதராஜன் போன்றவர்கள்மீதெல்லாம் பல்வேறு வழக்குகள் தொடுக்கப் பட்டிருக்கின்றன. அதுபோல, அவதூறு வழக்குகள் என்று தனியாகவே போட்டார்கள்.

*முற்பகல் 11–25*

அதிலே, குறிப்பாக, வறட்சிக் காலங்களிலே விவசாயிகள் பலபேர் எங்களுடைய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே இறந்து போனார்கள். அப்படி, பாபநாசம் அருகிலே இருக்கின்ற சாலியமங்கலம் என்ற கிராமத்திலே வீரையன் என்கின்ற விவசாயி, தற்கொலை செய்துகொண்டு இறந்து போனார். அவருடைய குடும்பச் சூழ்நிலை, வறட்சி, வறுமை காரணமாக இறந்து போனார் என்ற செய்தியைச் சொன்ன காரணத்தினாலேயே, எங்களுடைய தலைவர் நல்லகண்ணு அவர்கள்மீதும், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள்மீதும் அ.தி.மு.க. அரசு அவதூறு வழக்குப் போட்டது. இன்றையவரையிலும் அவர்கள், நீதிமன்றத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, நம்முடைய தலைவர் ஜி.கே. மணி அவர்கள்மீதும் இன்னும் பல தலைவர்கள்மீதும் (குறுக்கீடு)—கோ.கா. மணி அவர்கள்மீதும்—அந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வழக்குகள் காரணமாக, எல்லோரும் இப்போது நீதிமன்றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை நீக்கிய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்கள்மீது போடப்பட்டிருக்கிற இந்த அவதூறு வழக்குகளையும் இணைத்தே வாபஸ் பெறுவதற்கு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இணைத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படுமென்ற அறிவிப்பும் வரவேற்கக்கூடியது. அந்தக் கூட்டுறவுத் தேர்தலிலே...

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** கடுமையான வறட்சியின் காரணத்தினால் கடந்த ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டது உண்மை. பத்திரிகைகளிலும் வந்தது. நேரில் அறிந்தவர்கள் சொல்ல நாங்கள் கேட்டிருக்கின்றோம்.



2006 மே 29] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

அவதூறாக ஆட்சியின்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள் என்று, கடந்த ஆட்சியிலே பொய் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர், அந்த வழக்கை விரைவிலே திரும்பப் பெறுவார் என்ற அந்த உறுதியைத் தங்களுக்குத் தர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வறட்சியைப் பற்றி பேசுகிறபோது காலத்தின் அருமையைக் கருதி, சில செய்திகளைச் சொல்லாமல் விட்டேன். அந்தக் காலகட்ட நிலையிலே, பல பேர்கள் தற்கொலை செய்துகொண்டு இறந்து போனார்கள். பட்டினிக் கொடுமையாலே ஆதிச்சபுரத்திலே, பிரகாஷ் என்ற 7 வயது சிறுவன் இறந்து போனான். அதேபோல, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாளையங்கோட்டை சண்முகம் என்பவர், தற்கொலை செய்துகொண்டு இறந்து போனார். அந்தப் பாளையங்கோட்டை சண்முகம் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்னதாக, அன்றைய முதலமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டு இறந்து போனார். அந்தக் கடிதத்திலே அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற செய்தி: "என்னுடைய குடும்பத்திலே எனக்கு 1½ ஏக்கர் நிலம் இருக்கிறது; அதை 2 முறை சாகுபடி செய்வதற்குரிய முயற்சி எடுத்தேன்; அது வறட்சியின் கொடுமையினாலே கருகிப் போய்விட்டது; கடன்பட்டுத் திரும்பவும் சாகுபடி செய்வதற்கான முயற்சிகள் எடுத்தேன்; அதுவும் கைக்கு வராமல் போய்விட்டது. கடன் சுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற என்னாலே, என்னுடைய வயதான உடல் நலமில்லாத மனைவி, என்னுடைய மகள், படித்த ஒரு மகள், அவளும் உடல்நலம் கெட்டிருக்கிறாள்; என்னுடைய ஒரே மகன், இவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தினால், இருக்கிற சூழ்நிலையிலே என்னுடைய குடும்பத்தைப் பாதுகாக்க இயலவில்லை; என்னுடைய குடும்பத்திலே, இன்றைய நிலையில், அரை படி அரிசிக்குக்கூட வழியில்லாத நிலையில் நான் இருக்கிறேன். இந்த நிலையைப் போக்க வேண்டும், என்னுடைய குடும்பம், என்னுடைய மனைவி, என்னுடைய மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், நான் உயிரோடு இருப்பதன்மூலமாக, இவர்களைப் பாதுகாக்க இயலாத கையறு நிலைக்கு

நான் தள்ளப்பட்டுவிட்டேன். ஆகவே, நான் தற்கொலை செய்துகொள்வது என்று முடிவு எடுத்துவிட்டேன்; ஆகவே, நான் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துகொள்கிறேன்; நான் தற்கொலை செய்துகொள்வதன் காரணமாக, என்னுடைய குடும்பத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் பாதுகாப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு தற்கொலை செய்துகொள்கிறேன். என்னுடைய மகளுக்கு ஒரு வேலை தாருங்கள்; என்னுடைய மகனுக்கு வாய்ப்பு அளியுங்கள்; என்னுடைய உடல் நலமில்லாத மனைவியைச் சுகாதார ரீதியாக கவனித்துக் கொள்வதற்கு உரிய வாய்ப்பை ஏற்படுத்தி என்னுடைய குடும்பத்திற்கு உதவுவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் தற்கொலை செய்துகொள்கிறேன்" என்று தற்கொலை செய்துகொண்ட பாளையங்கோட்டை சண்முகம், கடிதத்தை முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கு எழுதி வைத்துவிட்டே தற்கொலை செய்துகொண்டார்.

அதிலே என்ன குறிப்பு எழுதி வைத்தார் என்றால், இந்தக் கடிதத்தைச் சட்டமன்ற உறுப்பினர் சிவபுண்ணியம்மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்ப வேண்டுமென்று எழுதி வைத்துவிட்டு இறந்தார். இந்தக் கடிதம் என்னுடைய கைக்கு வந்து சேர்ந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேக்ஸ் மூலமாக செய்தியை அனுப்பி வைத்தேன், முன்னாள் முதலமைச்சருக்கு. அந்தச் செய்தியை அவர் படித்துப் பார்த்துவிட்டு அந்தக் குடும்பத்தின்மீது பரிவு கொண்டு, அக்கறை கொண்டு பதற்றப்பட்டு, அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, மூன்று தினங்கள் எந்தவிதமான செய்தியையுமே அறிவிக்காமல் நான்காவது தினம் இரவு ஒரு மணிக்கு, நள்ளிரவிலே, D.S.P. தலைமையிலே *30, 40* காவலர்கள் என்னுடைய வீட்டு compound சுவர் ஏறி குதித்து, கதவைத் தட்டி, அந்தக் கடிதம் எங்கே இருக்கிறது என்று என்னை எழுப்பிக் கேட்டார்கள். இதுதான் அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றது. நான், இதை மாலை நேரத்திலேயே, இவர்களிடத்தில் சொல்லி 'அந்தக் கடிதம் இருக்கிறது; தேவையென்று அரசு கேட்கவில்லை; அதனுடைய நகலை முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறேன்; மாவட்ட ஆட்சியருக்குக் கொடுத்திருக்கிறேன், வட்டாட்சியருக்குக் கொடுத்திருக்கிறேன்; ஆனால், உரிய முறையிலே நீங்கள் கேட்கவில்லை; இப்பொழுது கேட்டிருக்கிறீர்கள்; அது சென்னையிலே இருக்கிறது' என்றுகூட சொல்லிப் பார்த்தேன். நடக்கவில்லை; இப்பொழுதே வேண்டுமென்று சொன்னார்கள். இல்லாத ஒன்றை எப்படி அளிக்க முடியுமென்று கேட்டேன். 'என்னிடத்தில்தான் இருக்கிறது' என்று கையெழுத்துப் போடுங்கள் என்று சொன்னார்கள். அவர் கொடுத்த





அந்தப் பேப்பரை நான் வாங்கிப் பார்க்கிறபோது, வெற்றுத் தாளிலே என்னிடத்தில் கையெழுத்து கேட்டார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினரை, இரண்டு லட்சம் மக்களுடைய பிரதிநிதியை, வெற்றுத் தாளிலே கையெழுத்துப் போட வேண்டுமென்று காவல் துறையை வைத்து நிர்ப்பந்தம் செய்த கொடுமை, அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றது. அது மக்களுக்குத் தெரிந்து மாவட்டம் முழுமையிலும் மிகப் பெரிய பிரச்சினையாக மாறி, நம்முடைய கூட்டணிக் கட்சிகள் எல்லாம் சாலை மறியலாக, வேறுவிதமான போராட்டமாக மாற்றி, அந்த மாவட்டமே ஸ்தம்பிக்க செய்கிற போராட்டம் நடைபெற்றதற்குப் பின்னாலே தலையிட்டு, மாவட்ட ஆட்சியரும், மற்றவர்களும் மன்னிப்புக் கோரி, இப்படிக் கேட்டது தவறு என்று ஒப்புக் கொண்டார்கள். அதை இந்தச் சட்டமன்றத்தில் கேட்டபோது, அதற்கு வேறுவிதமாக நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சி எடுத்தவர் முன்னாள் முதலமைச்சர். ஆனால் அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சி எடுத்தது உண்டா?

*முற்பகல் 11–30*

ஏழு வயது பிரகாஷ் என்ற மாணவன் பட்டினியால் செத்துப் போனான் என்று பழனிசாமி அவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே பேசினார். நானும் பேசினேன். என்ன கேட்டார் தெரியுங்களா? இது வெளியில் பேசிய செய்தி அல்ல. 'ஏழு வயது பிரகாஷ் என்ற மாணவன் பட்டினியால் செத்துப் போனது உண்மை என்று சொன்னால், அவனோடு கூடப் பிறந்த இன்னும் இரண்டு பேர்கள் ஏன் உயிரோடு இருக்கிறார்கள்?' என்று கேட்டவர் முன்னாள் முதலமைச்சர். இது வெளியிலே, மேடையிலே பேசிய செய்தி அல்ல. இந்த அவையிலே சொன்ன செய்தி. அதுவும் இங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் அப்பொழுதுதான் கேட்டேன். பெற்றால்தானே தெரியும் பிள்ளையின் பாசம் என்று கேட்டேன். கேட்கக் கூடாதா? இதைக் கேட்டவுடன் அவருக்குக் கோபம் வந்தது. உள்நோக்கத்தோடு பேசுகிறார் என்று சொன்னார் இல்லை, இல்லை எங்களுடைய வயிற்றெரிச்சலை இங்கே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னோம். ஆனால், இப்படித்தான் எங்களுடைய மாவட்டத்தில் விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டபொழுது, செத்து மடிந்தபொழுது, அவர்களுக்குரிய நிவாரணங்களைக் கொடுப்பதற்கு மறுத்த ஆட்சி அ.தி.மு.க. ஆட்சி. ஆனால், இன்றைக்கு ஏதேதோ பேசுவதற்குரிய முயற்சிகளை எடுக்கிறார்கள். இதையெல்லாம் நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அதற்குரிய தீர்ப்பை வழங்கினார்கள். அதன்

காரணத்தினாலேதான் ஒன்றுபட்ட மாவட்டம் திருவாரூர், நாகை மாவட்டங்களில் நூற்றுக்கு நூறு சதவிகிதம் நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. இந்த விளைவுகளையெல்லாம் நேரடியாக சந்தித்த மக்கள், பண பலத்திற்கு, படை பலத்திற்கு, அதிகார பலத்திற்கு அஞ்சாமல் வாக்களித்து, நம்முடைய கூட்டணியை மகத்தான வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள். அதுதான் அங்கே நடந்த நிகழ்வுகள். இப்படியெல்லாம் சென்ற ஆட்சியிலே நடைபெற்றது, அந்தக் கொடுமைகள் எல்லாம். அவற்றையெல்லாம் நீக்குவதற்குரிய முயற்சியாகத்தான், இன்றைக்கு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கான இந்தத் திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக இருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இவ்வளவு சாதனைகள், இவ்வளவு திட்டங்கள், இவ்வளவு கருத்துகள், இந்த ஆளுநர் உரையின்மூலமாக, நாட்டு மக்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது என்ற இந்தச் செய்தியைச் சொன்னேன். இதையே நமது அண்ணா தி.மு.க. ஆட்சியினுடைய ஐந்தாண்டுக் கால சாதனைகளைக் கொஞ்சம் சொல்ல வேண்டும் என்ற எனக்கு ஓர் ஆசை இருக்கிறது. அதை ஒரு பட்டியலாகப் போட்டுப் பார்த்தால், இவர்கள் ஆட்சிக் காலத்திலே சொல்ல வேண்டுமென்றால், அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துச்சொல்ல வேண்டுமென்றால், முதலாவதாக வேலை நியமனத் தடைச் சட்டம். 56 இலட்சம் பேர் பாதிப்பு. இளைஞர்கள் வேலையே பெறமுடியவில்லை. அதேபோல, அரசுத் துறை கல்வி நிறுவனங்களில் இரண்டரை இலட்சம் பணியிடங்கள் காலி ஏற்பட்டது. அதை நிரப்புவதற்கு உரிய முயற்சியை அவர்கள் எடுக்கவில்லை. நெசவாளி குடும்பங்கள், சிட்டா நூல் விலையேற்றம் காரணத்தாலே போராடினார்கள் என்ற காரணத்திற்காக, அவர்கள்மீது அடக்குமுறைகள்; அதைவிட அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காத காரணத்தினாலே, பட்டினிக் கிடந்தார்கள் என்று கஞ்சித் தொட்டி திறக்கப்பட்டது அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில். அந்தக் கஞ்சித் தொட்டி திறப்பதற்கான நிலைமை வந்ததைப் பரிசீலித்து, அவர்களுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, கஞ்சித் தொட்டிக்கு எதிரேயே முட்டை பிரியாணி வைத்துச் சாப்பிட்டவர்கள் அ.தி.மு.க. நண்பர்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள்,





நெசவாளர்கள் பாதிக்கப்பட்டபோது கஞ்சித் தொட்டி திறந்தது பற்றிக் குறிப்பிட்டார்கள். நெசவாளர்கள் பிரச்சினையிலே மிகுந்த கவனம் செலுத்துகின்ற டாக்டர் கலைஞர் அவர்கள், என்னுடைய தொகுதியிலே அம்மையார்குப்பம் கிராமத்திற்கு, கஞ்சித் தொட்டி திறக்க வருகை தந்தபோது அங்கே அவரை வரவிடாமல் தடுக்கும்வண்ணம் பிரியாணி விருந்து போட்டு, நெசவாளர்களுடைய வறுமையை கேலியாக, கூத்தாக ஆக்கியவர்கள் அ.தி.மு.க.–வினர் என்பதனை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். ஏழை நெசவாளர்கள் பாதிக்கப்பட்டபோது, அவ்வளவு அநாகரிகமாக அவர்களைக் கேவலப்படுத்தி, நெசவாளர் பெருமக்களுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டவர்கள்தான் அண்ணா தி.மு.க.–வினர். அதனால்தான் பள்ளிப்பட்டிலே இன்றைக்கு, கலைஞருடைய ஆதரவினால், நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், சீக்கிரம் முடியுங்கள். *34 நிமிடங்கள் எடுத்து இருக்கிறீர்கள்.*

*முற்பகல் 11–35*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் வறட்சிக் காலங்களில், எங்களுடைய மாவட்டங்களிலே சாதாரண ஏழை எளிய மக்கள் உணவுக்கு வழி இல்லாதவர்கள் எலியைப் பிடித்து சுட்டுத் தின்றார்கள். எலியைப் பிடித்து சுட்டுத் தின்றவர்கள், இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது என்று சொல்கிறபோது, முன்னாள் முதலமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா? அது அவர்களுடைய பழக்கமான உணவு என்று சொன்னார்கள். எலி சாப்பிடுவது என்பது பசிக்காக அல்ல; ருசிக்காக அவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று சபையிலேயே ஏளனமாகச் சொன்னார். இதுதான் நடந்தது சென்ற முறை.

அதேபோல, விவசாயத் தொழிலாளர்களுக்காக, அப்போது நல வாரியம் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டது. அது அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கலைக்கப்பட்டுவிட்டது. அவர்கள் புதிய திட்டத்தை அறிவித்தார்கள். 7 கோடி ரூபாய்க்கு மேலே பணம் பெற்றது என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. எனவே, இந்த நிலைமையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வைக்கிற கோரிக்கை, விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தை ஏற்படுத்த நீங்கள் திருவாரூருக்கு வருகை தந்தபோது, கோலப்பன் தலைமையிலே

ஒரு குழு உங்களால் அமைக்கப்பட்டது. அந்த ஆய்வின்மூலமாக இந்தச் சட்டமன்றத்திலே நீங்கள் அந்த நல வாரியத்தை அமைத்தீர்கள். அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்தீர்கள். அது அ.தி.மு.க. ஆட்சியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அதைக் கொண்டுவருவதற்கான முயற்சியினை நீங்கள் எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்வதோடு, கோலப்பன் குழுவினுடைய அந்தப் பரிந்துரைகளையும் அமல்படுத்துவதற்கான முயற்சிகளையும் இணைத்தே எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பஸ் கட்டணம் அ.தி.மு.க. ஆட்சியிலே உயர்த்தப்பட்டது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய பெயராலே திருமண உதவித் திட்டம் நடைமுறையிலே இருந்தது; அ.தி.மு.க. ஆட்சியிலே நிறுத்தப்பட்டது; மீண்டும் இப்போது 10 ஆயிரம் என்றிருந்ததை 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவிக்கை செய்திருக்கிறார்கள்.

அதேபோல, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, பட்ஜெட்டின் பெயராலே, நிர்வாக உத்தரவின் பெயராலே, அந்த ஆட்சிக் காலத்தில் மக்கள்மீது ஏற்றப்பட்ட சுமை கிட்டத்தட்ட 8 ஆயிரம் கோடி ரூபாய் என்று மதிப்பிடப்படுகிறது. பொருளாதார நிபுணர்களால் சொல்லப்பட்டிருக்கிற கருத்து, சாதாரண ஏழையெளிய மக்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிற சுமை 8 ஆயிரம் கோடி ரூபாய். அந்த நேரத்திலே பால் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு, ரேஷன் கடைகளில் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை விலை உயர்வு, மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸை நிறுத்தியது, ரேஷன் அட்டையிலே 'எச்' முத்திரையைக் குத்தி ரேஷன்தாரர்களை அவமானப்படுத்தியது, அதேபோல சத்துணவிலே முட்டையை நிறுத்தியது, மத மாற்றத் தடைச் சட்டம் கொண்டு வந்தது, ஆடு மாடு கோழியினை பலியிடுவதற்குத் தடைச் சட்டம் கொண்டு வந்தது, பொடா சட்டத்தைக் கூர்மையாக்கி எதிரிகளைப் பழி வாங்கியது; பழி வாங்கியவர்களே இப்போது வேறு நிலையில் இருக்கிறார்கள் என்பது வேறு; அவர்கள் பழி வாங்கப்பட்டவர்கள். ஆனால் அன்றைய நிலையிலே அதைப் பயன்படுத்தினார்கள்.

அதேபோல, காவல் துறையின்மூலம் அடக்குமுறை; பிடிக்காதவர்கள்மீது கஞ்சா வழக்கு. இதற்காக காவல் துறைமூலமாகவே கஞ்சாத் தோட்டமே பயிரிட்டார்களோ, என்னவோ தெரியவில்லை. அடிக்கடி கஞ்சா வழக்கு போடப்பட்டது என்பது, அ.தி.மு.க. ஆட்சியிலே



தொடர்ந்து நடைபெற்றது. அதேபோல, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பறித்த சலுகைகளைத் திரும்பக் கேட்கிறபோது, பேச்சுவார்த்தை என்ற பெயராலே அவர்களை அழைத்துப் பேசி, சமாதானம் செய்வதுபோலச் செய்துவிட்டு, திரும்ப அவர்கள்மீதே அடக்குமுறைச் சட்டங்களைப் பாயச் செய்வதற்குச் சட்டங்களைத் திருத்தி, மேலும் கடுமையாக்கியது. ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பேர்களை ஒரே இடத்திலே, ஒரே நேரத்திலே ஒரே உத்தரவின்மூலமாகப் பணிநீக்கம் செய்து, உலக மகா சாதனை புரிந்தவர் முன்னாள் முதலமைச்சர்.

அநேகமாக, பல அடக்குமுறைச் சட்டங்கள் போட்ட நாடுகள் இருக்கின்றன. சர்வாதிகாரிகள் கோலோச்சிய நாடுகள் இருக்கின்றன. இட்லர், முசோலினி போன்றவர்கள்கூட அடக்குமுறைக் காலத்தில், சர்வாதிகாரத்தை நடத்திய அந்த நாட்டிலேகூட, இப்படி ஒரு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பது கேள்விப்பட முடியாத ஒன்று. அப்படி ஒரு உத்தரவைப் போட்டு அவர்களையெல்லாம் பணிநீக்கம் செய்த கொடுமை நடைபெற்றது. அதேபோல, திரும்ப 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். 10 ஆயிரம் சாலைப் பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். ஆயிரம் கதர் வாரியத் தொழிலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள், 3 ஆயிரம் கணினி ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இதுதான் அ.தி.மு.க.-வினுடைய சாதனையாக இருந்து கொண்டேயிருக்கிறது. அதைப்பற்றி இப்போது வாய் திறக்க மறுத்து, நமது ஆட்சி தொடங்கிய ஏழே நாட்களுக்குள்ளாக, 'ஏன் இந்தக் காரியங்களை நீங்கள் செய்யவில்லை' என்று கேள்வி கேட்பவர்களாக வந்திருக்கிறார்களே என்பது, வேதனைக்குரிய செய்தியாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து.

குறிப்பாக, நான் சில கோரிக்கைகளைச் சொல்ல விரும்புகிறேன். டெல்டா மாவட்டத்தில் தொடர்ந்து இயற்கையினுடைய சீற்ற பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. மழை, வெள்ளம் வருகிறது, புயல் வருகிறது, புதிய வரவாக சுனாமி வருகிறது. அதேபோல மாறி மாறி பாதித்து, பின்னர் வறட்சி வருகிறது. இப்படி பாதித்துக் கொண்டேயிருக்கிற மாவட்டம். இந்த மாவட்டத்தின்மூலமாக மிகப் பெரிய அளவிலே உணவு உற்பத்தி செய்து இந்த நாட்டிற்குப் படைத்துக் கொண்டிருக்கிற விவசாயிகள், தொடர்ந்து பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய மறுவாழ்வுக்காக நீங்கள் நிவாரணம் அளித்திருக்கிறீர்கள். அதற்குரிய கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்வது என்பது மிகப்

பெரிய வரவேற்கக்கூடிய ஒன்று. அதோடு ஒரு தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய திட்டமாக, ஒரு Master Plan என்ற அடிப்படையிலே, அந்தக் காவிரி டெல்டா பகுதிகளைச் சீரமைப்பதற்கு, என்ன திட்டத்தைச் செய்வது என்று டாக்டர் கலைஞர் அவர்களே, நீங்கள் சிந்திக்கவேண்டும். அதற்குரிய ஒரு குழுவை நியமிக்கவேண்டும். அதன்மூலமாக அடிப்படைத் திட்டங்களை நிறைவேற்றி, அந்தக் காவிரி டெல்டா பகுதி பாசனப் பகுதிகளுடைய விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதுகாப்பதற்குரிய முயற்சியினை எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, குறிப்பாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள். 39 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே நிமிடம், இதோ முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன். கோவை மாவட்டத்திலேயிருந்து ஒரு செய்தி. குறிப்பாக, திருப்பூர் நகரம், அதைச் சுற்றியிருக்கக்கூடிய பல பகுதிகளில் சாயப் பட்டறைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதேபோல, சில தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அது மாசுக் கட்டுப்பாடு என்ற காரணத்தினாலே மூடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பாதிப்புகள் வருவதைத் தடுக்கவேண்டும் என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதை நடைமுறைப்படுத்தச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்கிறபோது, சிறு தொழில்கள் செய்கின்ற அந்த முதலாளிகளாலே அதை ஈடு செய்யமுடியாத இக்கட்டான நிலை இருக்கிற காரணத்தினாலே, மத்திய அரசாங்கம் அதற்குரிய மறு முதலீட்டு உதவி செய்வதற்கு, அவர்கள் தயாராக இருக்கிறார்கள்; ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவி, மாநில அரசினுடைய நிதி உதவி, அந்தச் சிறு தொழில் முனைவோர்கள் மூன்று பேருடைய நிதியையும் பெற்று, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினரை அழைத்துப் பேசி, அதை நிறைவு செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டும். அதைப்போல அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு.. (குறுக்கீடு)

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. சிவபுண்ணியத்தினுடைய கோரிக்கையைப் பற்றி நேற்றைய முன்தினம்,



மத்திய அமைச்சர் இராஜா அவர்களும், நானும், இங்கே அவையிலே இருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர், திரு. கோவிந்தசாமி அவர்களும், மற்றும் அந்தத் தரப்பினுடைய உற்பத்தியாளர்களும் கலந்துகொண்டு என்ன செய்வது என்று ஒரு யோசனையையும், அது விஷயமான நடவடிக்கையிலும் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை ஒழுங்குபடுத்துவதற்குரிய முயற்சிகள் எடுக்கவேண்டும். இதிலே இப்படிப்பட்ட நிகழ்வு நடக்காதவண்ணம் தடுக்க வேண்டுமென்றால், பத்திரப் பதிவு செய்கிறபோது, அதற்குத் தேவையான ஒரு சட்ட திருத்தத்தைச் செய்து, இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல், எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கோரிக்கைகள் என்ற அடிப்படையிலே, குழு வீடுகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் அது செம்மையாக அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்ற காரணத்தினாலே, என்னுடைய பணிவான வேண்டுகோள், ரூபாய் 33,000 செலவிலே குழு வீடுகள் அமைக்கப்படுகின்றன. இதனால் எந்தவகையிலுமே அவர்கள் வசிப்பதற்குப் போதுமான, ஆரோக்கியமான சூழ்நிலை என்பது அறவே இருக்காது. இதை மத்திய அரசாங்கத்தினுடைய திட்டத்தின் அடிப்படையிலே நாம் நிறைவேற்றினாலும்கூட, அவர்கள் வாழ்வதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்துகிற வகையில், அதுவும் குறிப்பாக அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இந்தச் சலுகைகளைச் செய்கிறபோது, அது ஏதோ கோழிக்கூண்டு போல இருக்கிறது. ரூபாய் 33,000, ரூபாய் 38,000 என்ற அடிப்படையிலே, அந்த நிதி என்பது எந்தவகையிலுமே பொருத்தம் இல்லை என்ற காரணத்தினாலே, ஒரு இலட்சம் ரூபாயிலே ஒரு வீடு அமைப்பது என்ற திட்டத்தை ஒரு கொள்கையாக, அதை உருவாக்குவதற்கு நீங்கள் கலந்து பேசி அறிவிப்பு செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன்.

அதேபோல், சில திட்டங்கள்; உங்களது ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட சலுகைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன — அண்ணா

மறுமலர்ச்சித் திட்டம்—அதை நீங்கள் மீண்டும் கொண்டுவர வேண்டும். உழவர் சந்தை திட்டத்தை அமல்படுத்த நீங்கள் முயற்சி எடுத்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று.

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு பேருந்து வழித்தடங்கள் என்று அறிவித்து நடைமுறைப்படுத்தினீர்கள். இது இப்போது சாத்தியமா, இல்லையா என்று தெரியாது. ஆனால், உங்களது ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட அந்த இரண்டு பேருந்து வழித்தடங்கள் இருக்கிறதே, அது பல தொகுதிகளிலே இன்றைக்கும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதை நிறுத்துவதற்கான முயற்சிகள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே எடுக்கப்பட்டது. ஆனால், அந்த மக்களுடைய எதிர்ப்பின் காரணமாக அது நடைமுறையில் இருக்கிறது. பல குக்கிராமங்களிலும் அந்த இரண்டு வழித்தடங்களும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வாய்ப்பிருந்தால் அதைச் செய்வதற்கு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது நல்ல திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்துகிறபோது, விவசாயிகளுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குரிய முயற்சி என்ற அடிப்படையிலே, ஏகபோக கொள்முதல் திட்டத்தை நீங்கள் அறிவிக்க வேண்டும். அது இந்தக் கொள்கை அறிவிப்பிலே வரவில்லை. அது எப்போதுமே நீங்கள் நடைமுறைப்படுத்துகிற ஒன்று என்ற காரணத்தினாலே, அதை அறிவிப்பதற்குரிய முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பல்வேறு கருத்துகள் தமிழகத்திலே பரவியிருக்கின்றன என்று சொன்னாலும், பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்களுடைய கொள்கை வழியில் வந்தவர்கள், அண்ணா அவர்களுடைய வழியிலே வந்தவர்கள் என்ற காரணத்தினாலே, தமிழகத்திலே பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்ப வேண்டிய அவசியம் இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். இல்லையென்று சொன்னால், இந்தத் தமிழகத்தினுடைய நீரோட்டமே அல்லது செயல்பாடுகளே வேறுவிதமாகச் சென்றுவிடுமோ? இதைக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நான் பேசுகிறேன் என்றுகூட நீங்கள் ஆச்சரியமாகப் பார்க்கலாம். ஆனால், காலத்தின் அவசியம் கருதி, தமிழகத்தினுடைய நம்முடைய அரசியல் நீரோட்டம் என்பது, திசை மாற்றப்படுவதற்குரிய முயற்சி, சதித் திட்டத்தின் அடிப்படையிலே நடைபெறுவதாக நாங்கள் இங்கே கருதுகிற காரணத்தினாலே, பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்புவதற்கென்றே ஒரு



தனித் துறையை டாக்டர் கலைஞர் அவர்களே நீங்கள் தொடங்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அன்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன்மூலமாகத்தான் தமிழகத்தைத் தெளிவுபெற்ற தமிழகமாக, சரியாக சிந்திக்கிற தமிழகமாக, யதார்த்தப் பார்வையோடு சிந்திக்கிற தமிழகமாக, நீங்கள் உருவாக்குவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும். அதைச் செய்வதற்குரிய முயற்சிகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதி என்ற முறையில். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *45 நிமிடங்கள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி என்ற முறையிலே, ஒரே ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வைத்துவிடுகிறேன். ஒரே செய்தி. இது மத்திய அரசைக் கேட்கவேண்டிய செய்தி. மன்னார்குடிக்கு இரயில் போக்குவரத்து இருந்து, இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது. அது, 30 ஆண்டுகளாக இருந்தது. ஆனால், அந்த வழித்தடம் இருக்கிறது. இப்போது தஞ்சாவூர், நீடாமங்கலம் வழியாக திருவாரூர் செல்கிறது. நீடாமங்கலத்திலிருந்துதான் மன்னார்குடிக்கு இரயில் வந்து சென்றிருக்கிறது. அந்த வழித்தடம் இருக்கிற காரணத்தினாலே, மன்னார்குடிக்கு என்று இருந்தால் அது பயன்படாது என்ற காரணத்தினாலே, நீடாமங்கலம், மன்னார்குடி வழியாக பட்டுக்கோட்டையையோ அல்லது நீடாமங்கலம், மன்னார்குடி வழியாக திருத்துறைப்பூண்டியையோ இணைத்துவிட்டால், மிகப்பெரிய அளவிலே வேதாரண்யம் போன்ற பகுதியில் கிடைக்கின்ற உப்பு போன்ற பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும், வர்த்தக ரீதியாக மக்கள் பயன்படுத்துவதற்கும், அதேபோல தெற்குப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் பயன்படுத்துவதற்கும், ஒரு வாய்ப்பாக அது அமையும் என்ற காரணத்தினாலே—சென்ற முறை முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு இந்தக் கோரிக்கையை வைத்தபோது, ஒரே வரியிலே தடுத்தார்; பாராளுமன்றத்திலே கேட்கவேண்டியதை இங்கே சட்டமன்றத்திலே கேட்கிறார் என்று என்னைக் கிண்டல் செய்து அவர் நிறுத்திவிட்டார்; இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக்கிற காரணத்தினாலே, இந்த மன்றத்தின்மூலமாக கோரிக்கையை மத்திய அரசுக்கு வைக்க வேண்டுமென்று கேட்டும் நடக்கவில்லை—மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 மே 29

அவர்கள், இந்தக் கோரிக்கையை நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, மேலும் கோரிக்கைகள் இருக்கின்றன; அவர்களிடத்திலே நேரில் அளிக்கிறேன் என்பதைச் சொல்லி இந்த அரிய வாய்ப்பினைத் தந்த உங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு) என்ன point of order?

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோது, திருப்பூர் சாயத் தொழிற்சாலைகள் மூடப்படுவதாகச் சொன்னார்கள். அங்கே இருக்கின்ற தொழிற்சாலைகள் வளர வேண்டும், தொழில்கள் வளர வேண்டும் என்பதில் எனக்கோ, காங்கிரஸ் இயக்கத்திற்கோ மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அப்படிச் சாயத் தொழிற்சாலைகள் முறையாகச் சுத்தப்படுத்தப்படாமல் அந்தக் கழிவு நீர்—எனது தொகுதிதான்; கழிவு நீர்—எனது பகுதி வழியாக சாக்கடையாக வந்து, ஒரத்துப்பாளையம் அணை கெட்டு, அங்கே இருக்கிற விவசாயிகள் குடிக்க தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள்; இருக்கின்ற மாடுகள் எல்லாம் செத்துக்கொண்டிருக்கிற நிலைமை, தென்னை மரங்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன; காய்ந்த தென்னை மரங்களுக்குக்கூட கடந்த ஆட்சியிலே நஷ்ட – ஈடு தருவதாகச் சொன்ன அரசு, இதுவரை வழங்காமல் பல இலட்சக்கணக்கான தென்னை மரங்கள் காய்ந்து இருக்கின்றன. எனவே, முறையாக தொழில்கள் வளர வேண்டுமென்று சொன்னால், சுத்தப்படுத்தப்பட்ட நீரை மட்டும் ஒரத்துப்பாளையம் அணையில் விடவேண்டும். இல்லையென்றால், மாசு கட்டுப்படுத்துகிற மிகப் பெரிய ஒரு நிறுவனத்தை – பெரிய mass purification centre–ஐ, தமிழக அரசு மத்திய அரசின் உதவியோடு அங்கே போட்டு, திருப்பூர் தொழிலும் வளர வேண்டும்; காங்கேயத்து விவசாயியும் செழிக்க வேண்டும்; இதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று அரசினுடைய கவனத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள்.



2006 மே 29]

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலில் நன்றியைக் கூறி, கடந்த ஐந்து ஆண்டுக் காலம் தமிழ்நாட்டை ஆண்ட அ.தி.மு.க. அரசு, மக்கள் பெற்று வந்த சலுகைகளை எல்லாம் ஒன்றொன்றாய் தட்டிப் பறித்து, மக்கள் விரோத அரசாட்சியாக, தொழிலாளர் விரோத அரசாட்சியாக, ஜனநாயக விரோத அரசாட்சியாக, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் மக்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்குக்கூட வாய்ப்பளிக்காமல் சட்டமன்ற ஜனநாயகத்தையே முற்றிலும் சீர்குலைத்த ஓர் அரசாக செயல்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்தச் சட்டமன்ற ஜனநாயகம் எந்த அளவு சீர்குலைக்கப்பட்டது என்பதற்கு, நம்முடைய பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்கள் அமர்ந்திருக்கிற அந்த ஆசனத்தினுடைய பின்பகுதி, ஐந்தாண்டுகளாக ஒரு முறையாவது தலைவர் என்மீது சாயமாட்டாரா என்ற ஏக்கத்தோடு இருந்ததை உங்கள்மூலமாக இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறீர்கள். அந்த அளவுக்குச் சட்டமன்ற ஜனநாயகத்தையே முற்றிலும் சீர்குலைத்த ஓர் ஆட்சி தமிழ்நாட்டிலே நடந்து கொண்டிருந்தது.

அந்த ஆட்சி தூக்கி எறியப்பட்டு, மக்கள் நலனில் அக்கறையோடு செயலாற்றக்கூடிய ஒரு மாற்று அரசு அமைய வேண்டுமென்று, நம்முடைய பெருமதிப்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழகத்தில் உருவான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி, தமிழ்நாட்டு மக்களிடத்திலே வேண்டியது. தமிழக மக்கள் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வேண்டுகோளை ஏற்று, அ.தி.மு.க. ஆட்சிக்கு விடைகொடுத்து, மக்கள் நலனில் அக்கறையோடு செயலாற்றக்கூடிய ஒரு மாற்று அரசை, நமது பெருமதிப்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழகத்தில் உருவாக்க, துணை நின்ற வாக்காளப் பெருமக்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக, ஒரு வலுவான கூட்டணியை உருவாக்குவதற்காக, தம்முடைய கட்சியின் தொகுதிகளின் எண்ணிக்கை குறைந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு மன நிறைவான தொகுதிகளைத் தந்து ஒரு வலுவான வெற்றிக் கூட்டணியை உருவாக்கி, இந்த வெற்றிக்கு வித்திட்ட முதல்வர் கலைஞர் அவர்களை இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் முழுவதும், இந்த அணியின் மகத்தான வெற்றிக்காகப் பணியாற்றி இருக்கிற ஜனநாயக

முற்போக்குக் கூட்டணியின் மதிப்புமிக்க தலைவர்களுக்கும், அதைப்போல, திருப்பூர் சட்டப் பேரவைத் தொகுதியில் என்னை வேட்பாளராக நிறுத்தி, இந்த அவைக்கு வருவதற்கு வாய்ப்பளித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், திருப்பூர் தொகுதியில் எனது வெற்றிக்காகப் பணியாற்றி இருக்கிற ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள், செயல்வீரர்கள் அனைவருக்கும், வாக்களித்து வெற்றிவாகை சூட்டியிருக்கிற வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–50*

அன்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் தந்திருக்கிற இந்த நல்ல தீர்ப்பை, இன்றைக்கு ஆட்சி அதிகாரத்திலிருந்து மக்களால் அகற்றப்பட்டிருக்கிற அ.இ.அ.தி.மு.க., அதனுடைய முன்னாள் முதலமைச்சர், இந்த மக்கள் தீர்ப்பை மதிக்காமல், இன்றைக்குச் செயல்படுகிற இந்த அரசை, காட்டுமிராண்டிகள் அரசு என்றும், குரங்கின் கையில் கிடைத்த பூமாலை என்றும், இப்படிப்பட்ட ஒரு சட்டமன்றத்திற்கு, தான் செல்லமாட்டேன் என்றும் தமிழ்நாட்டு மக்கள் முன்னாலே பிரகடனப்படுத்தினார்கள். ஆனால், கடந்த 26, 27 ஆகிய இரு தினங்களில், இந்தச் சபையிலே நடந்திருக்கிற நிகழ்வுகளெல்லாம் எதைக் காட்டுகிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

சட்டமன்றத்திற்குள்ளே கலவரத்தில் ஈடுபட்டு, அம்மையார் அவர்கள் சொன்னதை நடைமுறைப்படுத்திக் காட்டியது—நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அல்ல—அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள்தான், அந்தக் கடமையை இங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை நாம் நடந்த சம்பவத்தின்மூலம் பார்க்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, சட்டமன்றத்திற்கே வரமாட்டேன் என்று தமிழக மக்கள் முன்னாலே அறிவித்த ஜெயலலிதா அம்மையார் அவர்கள், எனக்கு அங்கே பாதுகாப்பு இல்லை என்று சொல்லி வர மறுத்தவர்கள், 27 ஆம் தேதி இந்த அவைக்குத் தனியாக வந்தார்கள். தனியாக வந்து, அவையிலே தான் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலாக, தான் பேச முடியுமா என்றெல்லாம் கேட்டு, அது நடைமுறைச் சாத்தியம் இல்லை என்று நீங்களும் விளக்கம் அளித்தீர்கள். இறுதியாக, தனக்குப் பேச வாய்ப்பு அளிப்பீர்களா என்று கேட்டார். வாய்ப்புத் தரப்படும் என்றீர்கள். எப்போது என்று





கேட்டபோது, இப்போதே பேசுங்கள் என்று அனுமதித்தீர்கள். ஆகவே, அவையிலே அவரும், இந்த ஆளுநர் உரைபற்றி அவருடைய விமர்சனங்களை எடுத்துச் சொன்னார். இங்கே முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அதற்கெல்லாம் விளக்கம் அளித்தார்கள். பேசி முடித்த பிறகும், தனிமையிலேதான் ஒத்தையாக இங்கிருந்து சென்றார். பாதுகாப்பாகச் சென்றிருக்கிறார். ஆகவே, அவருக்கு எந்தவொரு ஆபத்தும் இல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சபையிலே பேசிவிட்டுச் சென்றார். அவர் இந்தச் சபைக்குச் சென்றால் தனக்குப் பாதுகாப்பு இருக்காது என்று சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் கட்சியைச் சார்ந்த ஒருவர்கூட இந்த அவையில் இல்லாதபோது, ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்தவர்கள் மட்டுமே இடம் பெற்றிருக்கிற இந்த அவையில், அவர் எவ்வளவு கண்ணியத்தோடு நடத்தப்பட்டார், எவ்வளவு பாதுகாப்போடு இங்கு வந்து திரும்பிச் சென்றிருக்கிறார் என்பது, இந்த அரசு ஜனநாயகத்திற்கு எவ்வளவு மதிப்பு அளிக்கிற அரசு என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்ற முறையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள் இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

கவர்னருடைய உரையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல் காலத்திலே கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதியை நடைமுறையில் நிறைவேற்றக்கூடியவகையில், அதனுடைய துவக்கமாக, கவர்னருடைய உரை அமைந்திருப்பது உள்ளபடியே பாராட்டிற்கும், போற்றுதலுக்கும் உரிய நிகழ்வு என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம், ஏற்கெனவே தமிழ்நாட்டு மக்களுக்கு முன்னாலே கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளைத் தொடர்ந்து படிப்படியாய் நிறைவேற்றுவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய பாராட்டைத் தெரிவிப்பதோடு, இந்த அரசு இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, எங்கள் இயக்கம் இந்த அரசுக்குத் துணையாகவும், பக்க பலமாகவும் நிற்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் ஒன்றை இங்கே கவனப்படுத்த விரும்புவது, கடந்த 26 ஆம் தேதி அன்று, காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா, என்னுடைய இனிய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது, இங்கே ஒன்றைச் சூசகமாகக் குறிப்பிட்டார். பெண் பார்க்க வந்தவர்கள் நாங்கள். திருமண ஏற்பாடுகளைச் செய்தவர்கள் நாங்கள். சமையல் உட்பட

அனைத்தையும் கவனித்தோம். திருமணத்தையும் நடத்தி வைத்தோம். இப்போது சாந்தி முகூர்த்தத்தை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, துணை மாப்பிள்ளைக்கு எப்போது கல்யாணம் என்று எங்கள் தரப்பைச் சார்ந்தவர்கள் கேட்கிறார்கள் என்று அவருக்கே உரிய பாணியிலே கேட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சாந்தி முகூர்த்தம் என்று சொல்லவில்லை. தாம்பத்தியம் நடத்துகிறீர்கள் என்று சொன்னார்.

*முற்பகல் 11–55*

**திரு. சி. கோவிந்தசாமி:** திருத்திக் கொள்கிறேன். ஆகவே, குடும்பத் தலைவர்கள் அதைப் பார்த்துக் கொள்வார்கள் என்றும் அதற்கு விளக்கம் சொன்னார். ஆகவே, நான் இங்கே குறிப்பிட விரும்புவது, இந்த அரசுக்குத் துணையாக, பக்க பலமாக, அவர் சொன்னதைப்போல துணை மாப்பிள்ளையாக, நிச்சயமாக இருப்போம். ஆனால், அதேநேரத்தில், துணை மாப்பிள்ளைக்கு எப்போது திருமணம் என்று, கோரிக்கையை உங்களிடத்திலே வைத்து, சங்கடத்திற்குத் தங்களை ஆளாக்க மாட்டோம். அதேநேரத்தில், நாங்கள் எப்போதுமே திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சாரியாகவே இருப்போம் என்றும் கருத வேண்டாம். துணை மாப்பிள்ளையாக இருப்பவர், தன்னுடைய சொந்தக் காலில் குடும்பம் நடத்துகிற சக்தியை எப்போது எங்கே பெறுகிறோமோ, அப்போது நிச்சயமாக திருமணத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)—வயதானாலும் குடும்பம் நடத்துகின்ற சக்தி வரவேண்டும் அல்லவா?— ஆகவே, அந்தவகையில், அந்தச் சிரமத்தையும் உங்களுக்கு நாங்கள் ஏற்படுத்த மாட்டோம் என்பதையும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு அறிவிப்புகளை நடைமுறைப் படுத்துவதற்கான ஒரு நல்ல துவக்கம் என்கின்ற முறையிலே, மீண்டும் ஒருமுறை பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விவசாயிகள் வாங்கியிருக்கின்ற கூட்டுறவுக் கடன் சற்றேறக்குறைய ஏழாயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்திருப்பதும், ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிற அரிசி, ஏழைகளுக்கு இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதும், இதெல்லாம் எந்தச் சூழ்நிலையில் என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன். இதுபோன்ற பொது விநியோக முறைக்கு



மானியம் வழங்கக்கூடாது; வேளாண் துறைக்கு மானியம் வழங்கக்கூடாது என்று இன்றைக்கு உலக வர்த்தக அமைப்பு, வளர்ந்த நாடுகளின் நிர்பந்தத்தால், வளரும் நாடுகளை நிர்பந்தப்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தில், துணிச்சலாக இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய முடிவு, இந்தக் கடன் தள்ளுபடியும், ரேஷன் அரிசி விலை குறைப்பும் என்பதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கவனப்படுத்தி இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தவகையிலே, இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நிலமற்ற ஏழைகளுக்கு 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்படுத்தி, ஏழைக் குடும்பத்திற்கு தலா இரண்டு ஏக்கர் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதும் ஒரு நல்ல துவக்கம். ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அந்தப் பணியை துவக்குவதற்கான முயற்சியை மேற்கொள்வது, மேலும் இந்த அரசுக்குப் பெருமையைச் சேர்க்கின்ற காரியமாக அமையும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்ப் பண்பாட்டுச் சின்னமாக விளங்குகிற கண்ணகியின் சிலை, மீண்டும் கடற்கரைச் சாலையிலே நிறுவப்படும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் குறிப்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, கண்ணகிக்கு மீண்டும் சிலை வைத்து பெருமைப்படுத்துகிற நீங்கள், சென்னைக் கடற்கரையில் சீரணி அரங்கில்—இந்திய தேசம் விடுதலைப் பெற்ற காலத்திலிருந்து விடுதலைக் காற்றை வீசிக் கொண்டிருந்த ஒரு கடற்கரை; அதேபோல, விடுதலைக்குப் பிறகு ஜனநாயகக் காற்றை சுவாசித்துக்கொண்டிருந்த சென்னை கடற்கரை; கடந்த ஆட்சியாளர்களால், சென்னை மெரினா கடற்கரையில் சீரணி அரங்கத்தில்—எந்தவொரு அரசியல் நிகழ்வுகளும் நடத்தக்கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கிற தடையையும், கண்ணகி சிலை திறப்புவிழா நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தடையையும் நீக்கி, அங்கே வழக்கம்போல் பொது நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஆணையிடவேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த அவையின்மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, அரசுக் கல்லூரிகளில் வசதியுள்ள மாணவர்கள் மட்டுமே படிப்பதற்காக உள்ள சுயநிதிப் பாடப் பிரிவுகள் பொதுவகையாக மாற்றப்பட்டு, மற்றப் பிரிவுகளைப் போலவே கட்டணமும்

நிர்ணயிக்கப்படும் என்பது வரவேற்கத்தக்கது. இதேநிலை அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும். தனியார் கல்லூரிகளில் அடிக்கிற எல்லையற்ற கொள்ளையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் சில வழிமுறைகளை உருவாக்க வேண்டுமென்பதையும் சேர்த்து இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்த அரசினுடைய பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டுதான், பள்ளி மாணவ மாணவியருக்குக் கடந்தகால ஆட்சியிலே வழங்கப்பட்ட இலவச மிதிவண்டி திட்டம், இந்த ஆட்சியிலும் தங்குதடையின்றி தொடரும் என்று அறிவித்திருப்பது, இந்த அரசினுடைய பெருந்தன்மையை மேலும் எடுத்துக்காட்டுகிற நிகழ்ச்சியாகும்.

அதேபோல, சென்னை நகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மெட்ரோ இரயில் திட்டம் அறிமுகப்படுத்தியிருப்பதும் வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிகழ்ச்சி.

சென்னை விமான நிலையம், சர்வதேசத் தரத்திற்கு ஏற்றவகையில் நவீனப்படுத்தி விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதையும் செய்வதிலே ஆட்சேபணை இல்லை. அதை நடைமுறையில் செய்கிறபோது, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அந்த விமான நிலையத்தின் அருகிலே நீண்ட நெடுங்காலமாக அங்கே வசித்து வருகிற சற்றேறக்குறைய 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாதாரண ஏழை மக்கள், குடிசையிலே வாழ்கிற மக்கள், அந்த இடம் பறிபோய்விடும் என்கின்ற அச்சத்தோடு இன்றைக்கு அதைப் பாதுகாப்பதற்காகக் குரல் கொடுத்து வருகிறார்கள். ஏற்கெனவே, அந்த மக்கள் பாதிக்கப்படாதவண்ணம், விமான நிலையத்தின் பின்பகுதியிலே வெறும் காடுகளாக இருக்கிற பகுதி இதற்காகக் கையகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு, கடந்தகால ஆட்சியில் அதை இரத்து செய்து, மக்கள் வசிக்கிற பகுதியை விமான நிலைய விரிவாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கடந்த அரசு அறிவித்து, அந்த மக்கள் மத்தியிலே ஒரு பெரும் பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கியது. ஆகவே, அந்த மக்கள் பாதிக்காத வகையில், ஏற்கெனவே விமான நிலையத்தின் பின்புறத்தில் இருக்கிற அந்தக் காலி நிலத்தைக் கையகப்படுத்தி, அந்த விமான நிலையத்தை விரிவுபடுத்தப்படுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





*நண்பகல் 12–00*

அதேபோல, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நல வாரியம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது, வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிலை. ஏற்கெனவே, தாங்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, இந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்குத் தொழில்வாரியான நல வாரியங்களை அறிவித்தீர்கள். 9 நல வாரியங்கள் அதுபோன்று செயல்பட்டு வந்தன. ஆனால், அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் அவற்றை எல்லாம் ஒன்றாக இணைத்து 60 தொழில்களுக்கும் சேர்த்து ஒரு வாரியம் என்று அறிவித்து, அதையும் நடைமுறையில் அமலாக்காமல் கிடப்பிலே போட்டிருக்கிறார்கள். ஆகவே, நல வாரியம் செயல்படுத்தப்படுவதோடு, தங்கள் ஆட்சியில், கடந்த காலத்தில் இருந்ததைப்போல, சில முக்கிய தொழில்களுக்கு, தொழில்வாரியான நல வாரியங்களையும் அறிவித்து, அவற்றை நடைமுறையில் செயல்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர் நல வாரியம்; அநேகமாக, இப்போது அது தொழிலாளர் நல வாரியமாகவே இல்லை. அப்படி ஓர் அமைப்பு நம்முடைய தமிழ்நாட்டில் செயல்படுகிறதா என்ற ஒரு கேள்விக் குறி, கடந்த ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தொழிலாளர் நலனின்மீது மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தத் தொழிலாளர் நல வாரியத்தை உண்மையிலேயே தொழிலாளர் நலன் காக்கும் வாரியமாக மாற்றியமைக்க வேண்டிய பெரும் பொறுப்பு உங்கள் கையில் இருக்கிறது. அந்தக் கடமையை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்; நிறைவேற்றுவீர்கள் என்ற பெரும் நம்பிக்கை எனக்கு உண்டு.

அதேபோல, அந்த ஒட்டுமொத்த தொழிலாளர் நல வாரியத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக, முக்கியமான தொழிற்சங்க அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழு கடந்த காலத்திலே, தங்கள் ஆட்சிக் காலத்திலே இருந்தது. அதனால் அது முறையாக பல்வேறு ஆலோசனைகளைச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு, தொழிற்சங்க அமைப்புகளுக்குக் கிடைத்தது. ஆனால், இன்றைக்கு அந்த அமைப்பு முழுமையாகச் செயல்படாத நிலை, அது இல்லை என்று சொல்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை மீண்டும் உருவாக்குவதற்குத் தாங்கள் முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. கோவிந்தசாமி] [2006 மே 29

TESMA சட்ட வழக்கு; ஏற்கெனவே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல தாங்கள் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும், அரசு ஊழியர்கள் போராட்டத்தை ஆதரித்ததற்காக அந்த வழக்குக்கு ஆளாகி இருக்கக்கூடிய சூழ்நிலையில், அதையெல்லாம் இரத்துச் செய்திருக்கிறீர்கள். அதன்மூலம் தொடரப்பட்ட வழக்குகளும் வாபஸ் பெறப்படும் என்பது மகிழ்ச்சிக்குரியது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இதேபோன்று பல்வேறு துறைகளிலே பணியாற்றுகிற ஊழியர்களின்மீது பல பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அரசு நடத்துகிற TASMAC நிறுவனத்தில் அவர்கள் தயாரித்து விநியோகித்த, Midas Company–யினுடைய அந்தச் சரக்கைத்தான் விற்பனை செய்ய வேண்டும், எல்லாச் சரக்குகளையும் சேர்த்து வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய ஊழியர்களைக்கூட விட்டுவைக்காமல், அவர்கள்மீது பொய் வழக்குத் தொடுக்கப்பட்டு, பல ஊழியர்கள் தமிழ்நாட்டிலே வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தாங்கள் முதல்வரான இந்தச் சந்தர்ப்பத்தில், தங்களுக்கெல்லாம் மீண்டும் வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று அவர்கள் காத்திருக்கிறார்கள்; ஆகவே அவர்கள்மீது போடப்பட்ட பொய் வழக்குகளைத் திரும்பப் பெற்று, அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்க தாங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த அறிக்கையிலே, பொதுத் துறை நிறுவனமான போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதில் இந்த அரசு தொடர்ந்து முன்னுரிமை செலுத்தி வருகிறது என்பதைக் குறிப்பிட்டு, அது தொடரும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். மிகவும் வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிகழ்வு. ஆனால் கடந்த கால ஆட்சி, இந்த அரசுப் பேருந்துகளை எல்லாம் தனியாருக்கு விடுவதற்காக, அரசு வழித்தடங்களைத் தனியாருக்கு விடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிற்சங்க அமைப்புகளின்மூலமாக நீதிமன்றம்வரை சென்று, அதற்கான சில தடைகளைப் பெற்று, இடைக்காலமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது தாங்கள் மீண்டும் முதலமைச்சராக வந்திருக்கிறீர்கள். நீங்கள்தான் இந்தத் துறையை உருவாக்கினீர்கள். ஆகவே, மீண்டும் அப்படிப்பட்ட ஓர் ஆபத்து, இந்த அரசில் போக்குவரத்துத் துறை, தனியாருக்குப் போகிற வாய்ப்பு, நிச்சயம், அறவே இருக்காது என்கிற ஒரு நல்ல செய்தியை நீங்கள் தங்கள் பதிலுரையின்மூலம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



2006 மே 29] [திரு. சி. கோவிந்தசாமி]

கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்திருப்பது நல்ல நிகழ்ச்சி. ஆகவே அந்தக் கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படுகிறபோது, அதற்கு முன்னால், கடந்தகால ஆட்சியாளர்களால் அநேகமாக 90 சதவிகித கூட்டுறவு அமைப்புகளில் அந்தக் கூட்டுறவு நிறுவனத்திற்குச் சம்பந்தம் இல்லாத போலி உறுப்பினர்கள்தான் ஏராளமாகச் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் போலி உறுப்பினர்கள் முழுமையாக நீக்கப்பட்டு, அந்தக் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்கள் ஜனநாயகப்பூர்வமாக நடத்தப்பட்டு, அவை செயல்பட வழிவகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–05

அதேபோல நூல், துணி, ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி அதிகரிப்பதற்குரிய அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல செய்தி. ஆனால், தற்போதைய நிலை, குறிப்பாக திருப்பூருடைய நிலை—இங்கே காங்கேயம் சட்டப் பேரவை உறுப்பினர்கூட கவனப்படுத்தினார்கள்—திருப்பூரிலே, அந்த ஒரு நகரத்திலே மட்டும் சற்றேறக்குறைய 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு நகரமாக திருப்பூர் நகரம் இன்றைக்கு விளங்கி வருகிறது. இந்தச் சாயக் கழிவு நீர் பிரச்சினைக்குக் கடந்தகால அரசாங்கம், ஒரு சரியான தீர்வை ஏற்படுத்தவில்லை. குறிப்பிட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சாயத் தண்ணீரை சுத்தப்படுத்தி, நொய்யல் ஆறு மாசுபடுவதைத் தடுக்கவேண்டுமென்பதற்கு எந்த ஒரு உருப்படியான ஆலோசனையும் கடந்த ஆட்சியாலே வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக, நீதிமன்றத்திற்கு எடுத்துச்சென்று அரசு வழக்குரைஞரின் மூலமாக அந்த ஆலைகளைப் பூட்ட வேண்டும் என்பதற்காகத்தான், கடந்தகால ஆட்சியாளர்கள் வாதாடினார்கள்; நீதிமன்றத்திலே செயல்பட்டார்கள். ஆகவே, அந்த ஆலைகள் பூட்டப்படுமானால், திருப்பூர் மட்டுமல்ல; தமிழ்நாட்டில், இங்கே இருக்கிற அமைச்சர் பெருமக்கள், இருக்கிற ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் திருப்பூருக்கு வந்து, இன்றைக்கு வேலை செய்து வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய ஒரு நிலைக்கு, மிகப் பெரிய பேராபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஆலை உரிமையாளர்கள் அந்த—R.O.—மறுசுழற்சி முறையில் தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்கான முன்பணமாக 50 சதம்

செலுத்தி, தற்போது நீதிமன்றத்தினுடைய நெருக்கடியிலிருந்து தங்களைப் பாதுகாத்து வருகிறார்கள். இது தொடராது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதிலே ஒரு சிறப்புக் கவனம் எடுத்து, அவர்கள் முயற்சி எடுத்தால்தான்—கடந்த காலத்தில், இப்படி ஒரு நெருக்கடி வந்தபோது, நீங்கள்தான் அனைவரையும் அழைத்து வைத்துப் பேசி, அரசாங்கமே இதற்கு ஒரு முன்முயற்சி எடுத்து, நீதிமன்றத்தில் அரசின் சார்பிலே ஒரு affidavit தாக்கல் செய்யப்பட்டு, பூட்டப்படுகின்ற அந்தத் தொழிற்சாலைகளை அன்றைக்குப் பாதுகாத்தீர்கள்; இலட்சக்கணக்கான மக்களின் வேலைவாய்ப்பைப் பாதுகாத்தீர்கள்; அதுபோன்ற ஒரு நெருக்கடி இப்பொழுதும் வந்திருக்கிறது; நீங்கள் மீண்டும் முதலமைச்சராக இங்கே இந்த அவையிலே அமர்ந்திருக்கிறீர்கள்; ஆகவே, நீங்கள் தனிக் கவனம் எடுத்து அதற்கு முயற்சி எடுத்தால்—நிச்சயமாக திருப்பூரை நாம் காப்பாற்ற முடியும்; நொய்யல் நதியையும் காப்பாற்றி விவசாயிகளையும் பாதுகாக்க முடியும்; அதற்குரிய ஒரு பொருத்தமான நல்ல நிரந்தரத் தீர்வை எட்டுவதற்குத் தாங்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திருப்பூர் தொகுதிக்கு என்னை ஆதரித்து வாக்கு கேட்டு வந்த என்னுடைய பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய உள்ளாட்சித் துறை அமைச்சர், எனது இனிய நண்பர் தளபதி அவர்கள், திருப்பூரில் கொளுத்துகிற வெயிலையும் பொருட்படுத்தாமல், தெருத் தெருவாக பிரச்சாரத்தில் ஈடுபடுகிறபோதெல்லாம், கலைஞர் முதல்வராக வந்தால், திருப்பூரினுடைய சாயப் பட்டறை பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று ஒரு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த மக்கள் நம்பிக்கையோடு வாக்களித்திருக்கிறார்கள். தொழில் நடத்தக் கூடியவர்களும், தொழிலாளர்களும் நீங்கள் முதல்வரான பிறகு, இதற்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் என்று ஆவலோடு காத்திருக்கிறார்கள். நான் தனியாகவும் முதலமைச்சரிடத்திலே தெரிவித்திருக்கிறேன். அடுத்த வாரம், அவர்களையெல்லாம் நேரிலே சந்திப்பதற்கு நீங்கள் சம்மதம் தெரிவித்திருப்பதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தத் தொழிலையும், நொய்யல் நதியையும் காப்பாற்றுவதற்கு உங்களுடைய நேரடி கவனம் தேவை என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி, வீட்டுமனைப் பட்டா. தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளில் வசிக்கிற சாதாரண ஏழை மக்கள், குடிசைகளிலே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்கள், 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 30





ஆண்டுகள் என்று அந்த இடத்திலே குடியிருக்கிறார்கள். அதற்குரிய பட்டா இல்லை. பட்டா கோருகிறபோது, சில சட்டச் சிக்கல்கள் அங்கே வருகின்றன என்று காரணம் சொல்கிறார்கள். அது அரசு புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு அல்லது வண்டி புறம்போக்கு, ஓடை புறம்போக்கு, மேய்ச்சல் நிலம் இப்படி பல்வேறு பெயர்களில் இருக்கிற காரணத்தினாலே, பட்டா வழங்க இயலவில்லை என்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆகவே ஒரு குறிப்பிட்ட கால வரையறை வைத்து இதுமாதிரி அரசு சம்பந்தப்பட்ட எந்த நிலங்களில் குடியிருந்தாலும், அந்த ஏழைகளுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுப்பதற்குரியவகையிலே, ஒரு நல்ல சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, அந்த ஏழை எளிய மக்களின் வயிற்றில் பால் வார்க்கக்கூடியவகையில், தாங்கள் முயற்சிக்க வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–10

அதேபோலதான், உள்ளாட்சித் துறை; இன்றையதினம் உள்ளாட்சித் துறையில் பொருத்தமான அமைச்சர் அதற்குப் பொறுப்பேற்றிருக்கிறார். அவர் வேகமாக செயல்படக்கூடிய ஆற்றல் படைத்தவர். இத்துறையில் ஏராளமான பிரச்சினைகள் குவிந்து கிடக்கின்றன. அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகள் என்று சொல்லுகிற அந்தப் பகுதியிலேதான், தமிழகத்தினுடைய பெரும்பான்மையான மக்கள் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக, கோவை நகரம், திருப்பூர், ஈரோடு அல்லது வளர்ந்து வருகிற பெரு நகரங்களின் பெரும் பகுதிகளில் இன்றைக்கு அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளிலே அந்த மக்கள் வாழ்கிறார்கள். அந்த மக்கள் இன்றைக்கு சாக்கடையின் மத்தியிலே வாழக்கூடிய ஓர் அவல நிலைமை நீடித்துக்கொண்டிருக்கிறது. அங்கீகாரம் இல்லை என்ற ஒரே காரணத்தால் அந்த மக்கள் அங்கீகரிக்கப்படாதவர்களாக இன்றைக்கு நடத்தப்படுகிற ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அதற்குப் பொருத்தமான ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து, அந்த மக்களும் வரி செலுத்துகிறார்கள்; அரசுக்குக் கட்டவேண்டிய எல்லா வரிகளையும் கட்டுகிறார்கள்; ஆனால் சட்டம் குறுக்கே நிற்கிறது என்று சொல்லி—இன்றைக்கு அவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாத நிலை இருக்கிறது; ஆகவே,—அந்தச் சட்டம் உரிய முறையில் திருத்தப்பட்டு, அந்த மக்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த அரசாங்கம் தேர்தலுக்கு முன்பாக ஜனவரி மாதத்திலே ஓர் அரசாணையை வெளியிட்டது. அந்த அரசாணையை மேலோட்டமாகப் பார்த்தால், ஏதோ அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளில் வாழ்கிற மக்களுக்கெல்லாம் இனி எல்லா வசதிகளும் கிடைக்கும் என்ற ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகிற ஓர் அறிக்கையாகத்தான் இருந்தது. எல்லா அறிக்கைகளும் அப்படித்தான் இருந்தன; அதுமாதிரிதான் இந்த அறிக்கையும் இருந்தது. ஆகவே, அந்த அறிக்கையைச் சற்று உற்று, உள்நோக்கிப் பார்த்தால் அவர்கள் என்ன குறிப்பிடுகிறார்கள் என்றால், 1980 ஆம் ஆண்டுக்கு முன்பு ஒரு slab, ceiling, பிறகு 1990–க்கு முன்னாலே, 2000–க்கு முன்னாலே என்று ceiling வைத்து அதற்கான development charge கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக. திருப்பூர் மாதிரி இருக்கிற, வளர்ச்சி அடைகிற நகரங்களில் நிலத்தினுடைய மதிப்பு உயர்ந்து இருக்கிறது. ஆகவே, நிலத்தினுடைய மதிப்பு உயர்ந்திருக்கிறபோது, 60–க்கு 40 அளவுள்ள, 5–1/2 சென்ட் இடத்தில் ஒரு சாதாரண மனிதன் குடியிருக்கக்கூடிய வீட்டுக்கு இந்த அரசாணை, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் பெருமையாக பீற்றிக்கொண்ட அந்த ஆணை என்ன சொல்கிறது என்றால், அந்த ஓர் இடத்திற்கு development charge என்று முதலில் 24,000 ரூபாயில் தொடங்கி, ஒன்றேகால் இலட்சம் ரூபாய் வரை அவர்கள் கட்டணம் செலுத்தினால்தான், அந்த இடத்திற்கு அடிப்படை வசதிகள் செய்ய முடியும் என்று அந்த அரசாணை குறிப்பிடுகிறது. அந்த விலைக்கு அந்த இடத்தையே வாங்கி இருக்க மாட்டான்; இன்றைக்கு development charge கட்டச் சொன்னால், அந்த வீதியில் இருக்கிறவர்கள் எல்லாம் பணம் போட்டு அந்த வசதிகளைச் செய்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மக்களை ஏமாற்றுவதற்காக அறிவித்த அந்தப் போலியான சட்டத்தை இரத்து செய்து, உண்மையிலேயே அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளில் வாழ்கிற மக்கள் பயன்பெறத்தக்கவகையிலே, உரிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு முன்பாக, உடனடியாகச் செய்ய வேண்டியது, நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே நேரிலும் சொல்லியிருக்கிறேன், இந்த அவையிலும் குறிப்பிட விரும்புவது, இந்தச் சட்டத்தைக் காரணம் காட்டி, இன்றைக்கு மிக அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான குடிநீர், அந்தக் குடிநீர் இணைப்புகூட—கடந்த காலங்களில், இதே நிலை இருந்தபோது. குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டன; அதிலே ஒன்றும் தடை இல்லை; ஆகவே, சாலையோ,





சாக்கடையோ, கழிப்பிடமோ அதுமாதிரி இருப்பதற்குத்தான் development charge கட்டவேண்டும்; குடிக்கிற தண்ணீருக்கு இணைப்பு வழங்குவதற்கு எந்தத் தடையும் கடந்த காலங்களில் இல்லை; ஆனால், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் போட்ட உத்தரவைக் காட்டி, இன்றைக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இணைப்பு வழங்குவதற்குக்கூட— இந்த development charge கட்டினால்தான் முடியும் என்று சொல்கிறார்கள். அதைவிடக் கொடுமையானது, திருப்பூரிலே அந்த வீட்டு இணைப்பிற்காக முன்பணம் கட்டுங்கள் என்று அறிவித்து, 11,000 பேர் முன்பணம் கட்டியபிறகு, அந்தப் பணத்தை வாங்கி, கோடிக்கணக்கில் நகராட்சி deposit செய்துவிட்டு, இப்போது என்ன சொல்கிறது என்றால், அங்கீகாரம் இல்லாத பிரிவுகளில் இருப்பவர்களுக்கு எல்லாம் இணைப்பு கிடையாது என்று மறுப்பது, அந்த மக்களினுடைய உரிமையை மிகப் பெரிய அளவிலே காலில் போட்டு மிதிப்பதற்குச் சமமாகும். ஆகவேதான், மற்ற உத்தரவை நீங்கள் பின்னாலே செய்தாலும், குறைந்தபட்சம் குடிக்கிற தண்ணீர் கொடுப்பதற்கு இந்த ஆணை தடையாக இருக்கக்கூடாது. ஆகவே, குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான ஓர் ஆணையை தயவுசெய்து, இந்தக் கூட்டத் தொடரிலேயே அதற்கான ஒரு நல்ல செய்தியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இங்கே அறிவிக்க வேண்டும். தமிழ்நாட்டு மக்களுக்கு தாகம் தீர்ப்பது மிகமிக முக்கியம் என்ற முறையில் இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, திருப்பூர் தொகுதியினுடைய சில செய்திகளைச் சொல்லி நான் முடிக்க விரும்புகிறேன். திருப்பூர் தொகுதிக்காக கேட்கிற கோரிக்கைகள் எல்லாம், நான் முன்பு சொன்னதைப்போல, எங்கள் ஊர் மக்கள் மட்டுமல்ல; நேற்றையதினம் சென்னைக்கு வருவதற்காகப் பேருந்து நிலையத்தைக் கடந்து வருகிறபோது, ஆயிரக்கணக்கான பேர் பழைய பேருந்து நிலையத்திலே தென் மாவட்டங்களை நோக்கி செல்வதற்குக் காத்திருந்தார்கள். காரணம், 160 சாயத் தொழிற்சாலைகள் பூட்டப்பட்டு, நான்கைந்து நாட்கள் ஆனதாலே வேறு வழியில்லாமல் சொந்த ஊருக்குச் செல்வதற்காக பஸ்ஸுக்காகக் காத்திருந்தார்கள். ஆகவே, தமிழ்நாட்டினுடைய ஏறத்தாழ பெரும்பான்மையான மாவட்டங்களைச் சார்ந்திருக்கிற வேலை கிடைக்காத சாதாரண மக்கள், இன்றைக்கு ஏற்றுமதித் தொழில் வளர்ச்சியின் காரணமாக வேலை செய்து வாழ்ந்துவருகிற ஒரு நகரமாக இன்றைக்குத் திருப்பூர் நகரம், திருப்பூர் தொகுதி இருக்கிறது. ஆகவே, மற்ற எல்லா தொகுதிகளுக்கும் சராசரியாக செய்கிற உதவியைக்காட்டிலும், ஒட்டுமொத்த தமிழ்நாட்டினுடைய ஒரு

கணிசமான பகுதி மக்கள் திருப்பூரில் வாழ்கிறார்கள் என்பதைக் கவனத்தில்கொண்டு, திருப்பூர் தொகுதியினுடைய தேவைகளுக்கு முன்னுரிமை செலுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமக்களையும் (குறுக்கீடு)—அவரையும்தான்—நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தவகையில் அதற்குரிய சில முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

காலை, மாலை நேரங்களில் தொழிலாளிகள், 15, 20 கிலோ மீட்டர் அப்பாலிலிருந்து வேலைக்கு வருகிறார்கள். அந்தப் பேருந்து படிக்கட்டில் மட்டும் 50 பேர் கம்பியைப் பிடித்து தொங்கிக்கொண்டு வருகிற காட்சி, திருப்பூரைத் தவிர தமிழகத்திலே வேறு எங்கும் இருக்காது. அப்படித் தவறி விழுந்து இறந்தவர்களுடைய எண்ணிக்கையும் உண்டு. ஆகவே, இந்தக் குறிப்பிட்ட நெருக்கடி நேரங்களிலாவது, அந்த பனியன் தொழிலாளிகள் உரிய நேரத்தில் வேலைக்கு வந்து சேர்வதற்குரிய ஒரு நெருக்கடி நேரப் பேருந்தும், அதேபோல ஆண்களுக்கு இணையாக பெண்களும் அந்தத் தொழிலில் வேலை செய்கிறார்கள்; அந்த பஸ்ஸில் இடம் பிடிப்பதற்காக ஆண்களோடு, பெண்களும் முட்டி மோதுகின்ற காட்சி, கண்களில் சகிக்க முடியாத காட்சியாக இருக்கின்றது; ஆகவே, பெண்களுக்கென்று சில பிரத்யேகமான பேருந்துகளுக்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் போக்குவரத்து அமைச்சரிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட அமைச்சர் மூலமாக, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–15*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதேபோல, மத்திய அரசின் E.S.I. நிறுவனம். அங்கே இலட்சக்கணக்கான தொழிலாளிகள் வேலை செய்கின்றார்கள். அங்கே E.S.I. மருத்துவமனை அமைப்பதற்காக, மத்திய அரசு 100 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையை அமைப்பதற்காக அனுமதி கொடுத்துவிட்டது. ஆனால் அதற்கான நிலம் கையகப்படுத்திக் கொடுக்கவேண்டும். கடந்த கால அரசு, ஐந்தாண்டுக் காலம் அதைச் செய்யாமல், தொழிலாளிகளுடைய நலனைப் பற்றி சிறிதும், கிஞ்சித்தும் எண்ணிப் பார்க்காத, ஒரு தொழிலாளர் விரோத அரசாக இருந்த காரணத்தால், அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆகவே, தொழிலாளர்கள்மீது மிகுந்த அன்பு கொண்டிருக்கக்கூடிய தலைவர்





கலைஞர் அவர்கள், தங்கள் அரசில் உடனடியாக அந்தப் பணியை மேற்கொண்டு, அந்த நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுத்தால், அங்கே E.S.I. மருத்துவமனையை அமைப்பதற்கு மத்திய அரசு தயாராக இருக்கின்றது. அதை அமைத்து தொழிலாளர் குடும்பங்கள் அங்கே பயனடைவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

அதேபோல, வெளியூர்களிலிருந்து வரும் பெண் தொழிலாளர்கள் தங்குவதற்குரிய விடுதிகளை ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். கூடுதல் குடியிருப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. மருத்துவமனையைச் சீர்படுத்தவேண்டும். அது ஒரு மாவட்ட மருத்துவமனை என்ற பெயரில்தான் இருக்கிறது. அது கட்டப்படுகின்றபோது தாலுகா மருத்துவமனையாக இருந்தது. இப்போது அந்த board-ல் மாவட்டம் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட மருத்துவமனைக்குரிய எந்த அடிப்படை வசதிகளும் இல்லை. எனவே, அதைச் சீர்படுத்துவதற்குரிய ஏற்பாடு செய்யவேண்டும்.

வாய்ப்பு இருக்குமானால், மாவட்டத் தலைநகரங்களுக்கு இணையாக வளர்ச்சியடைந்திருக்கக்கூடிய திருப்பூருக்கு, அதற்குரிய இடம் இருக்கின்றது; அங்கே 36 ஏக்கர் நிலம் மருத்துவமனை வளாகத்தில் இருக்கின்றது. அங்கே தனியாக ஒரு மருத்துவக் கல்லூரிகூட உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, மாவட்டத் தலைநகரம் என்று பாராமல், மாவட்டத் தலைநகரங்களைவிடக் கூடுதலாக, வளர்ச்சியடைந்த தொழில் நகரம் என்ற முறையில், மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டு, நான் நிறைவாக (குறுக்கீடு) சொல்கின்றேன்.

கோவை மாவட்டம், அநேகமாக தமிழ்நாட்டில் இப்போது இருக்கின்ற மாவட்டங்களில் பெரிய மாவட்டம். ஜனத் தொகையிலும், தொழில் வளர்ச்சியிலும், பரப்பளவிலும் பெரிய மாவட்டமாக இருக்கின்றது. ஏற்கெனவே 14 சட்டமன்றத் தொகுதிகள். இப்போது சீரமைப்பின் மூலம் 16 தொகுதிகளாக அது உயர்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற ஒரு பெரிய மாவட்டம் என்ற முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு தனி மாவட்டம் உருவாக்க, தங்களுடைய பதிலுரையிலோ, நிதிநிலை அறிக்கையிலோ தாங்கள் அதற்கான நல்ல செய்தியைத் தெரிவிக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. சி. கோவிந்தசாமி] [2006 மே 29

அதேபோல, திருப்பூர் தொகுதியின் வளர்ச்சி காரணமாக, 3 நகராட்சிகள் ஆயின. அதைச் சுற்றியிருக்கின்ற ஊராட்சிகளும், நகராட்சிக்கு இணையாக வளர்ந்து இருக்கின்றன. ஆகவே, திருப்பூரை ஒரு மாநகராட்சியாக மாற்றினால், அதன்மூலம் சில அடிப்படை வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்கு உதவியாக இருக்கும். அந்தவகையில், அந்தக் கடமைகளை, பணிகளை நிறைவேற்றுவதற்கு தாங்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சமீபத்தில் கடந்த இரு தினங்களுக்கு முன்னால், கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த பெருமழையினாலும், அங்கே வீசிய சூறாவளிக் காற்றாலும், இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வாழைகள் பெரிதும் சேதமடைந்திருக்கின்றன என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, அதை உரிய முறையில் ஆய்வு செய்து பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு உரிய நட்ட ஈடு வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரை உண்மையிலேயே நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை நடைமுறையில் நிறைவேற்றுகின்ற தொடக்கமாக, மிகச் சிறப்பாக மக்கள் மனதில் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஆளுநர் உரையாக இது அமைந்திருப்பதற்கு வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே முன்னாள் முதலமைச்சர்—நான் முன்பே சொல்லிவிட்டேன்; முதலமைச்சர் அதையெல்லாம் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கின்றேன்; ஆகவே முன்னாள் முதலமைச்சர்—எப்படி நடந்துகொண்டார் என்பதையெல்லாம் நாம் பார்த்தோம். அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரைத்தான்—அரசியலில் அணி மாறுவது என்பது, பொதுவாக அந்தந்த அரசியல் சூழ்நிலைகளைப் பொறுத்தது. ஆனால் அரசியலில் அணி மாறுவது வேறு, துரோகம் செய்வது என்பது வேறு. ஆகவே அப்படிப்பட்ட ஒரு மக்கள் விரோத அரசாட்சி நடத்திய அதி.மு.க.வுக்குத் துணையாகத்தான் ம.தி.மு.க., அதனுடைய தலைவர் வைகோ. அவர்களும் போனார்கள். போனது மட்டுமல்ல,—அவருக்கு என்னவெல்லாம் பட்டம் கொடுத்து அழைத்தார்கள், ஜான்சி ராணியே வருக வருக என்று. 19 மாத காலம் சிறைக் கொட்டகையில் அடைத்த அம்மையாருக்கு ஜான்சி ராணி என்று பட்டம் கொடுத்து அழைத்திருக்கின்றார்கள். ஆக, இப்படிப் பல்வேறு செய்திகளைத் தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே பரப்பினாலும்,



2006 மே 29] [திரு. சி. கோவிந்தசாமி]

அதையெல்லாம் நிராகரித்து, தமிழ்நாட்டு மக்கள், மக்கள் நலனில் அக்கறையோடு செயலாற்றக்கூடிய ஒரு மாற்று அரசு, நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பிலே தலைவர் கலைஞர் தலைமையிலே அமைவதற்குத் துணைநின்ற தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு மீண்டும் ஒருமுறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைக் கூறி அமர்கின்றேன், வணக்கம்.

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் உரையாற்றுகிற நேரத்தில், அங்கீகாரம் பெற முடியாமல் இருக்கக்கூடிய அந்த நிலையைப்பற்றி, அந்த வீட்டு மனைகளைப்பற்றி அவர் இங்கே குறிப்பிட்டு எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே இதுகுறித்து அவர் என்னிடத்திலே, இந்தப் பிரச்சினைகளைப்பற்றியும் விவாதித்திருக்கிறார். நானும் உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் இதுகுறித்து விளக்கமாகப் பேசியிருக்கிறேன். அவரும் ஓர் உறுதிமொழி தந்திருக்கிறார். விரைவிலே அமைச்சரவைக் கூட்டத்திலே இதுகுறித்து விவாதித்து, உரியமுறையிலே நீங்கள் எதிர்பார்ப்பதைப்போல அந்தத் தீர்வுக்கான நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக முதல்வர் அவர்களோடு கலந்து, ஒரு நல்ல செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்தமைக்காக, அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகளில் வாழ்கிற அனைத்துத் தரப்பு மக்களின் சார்பில் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரி நாராயணன் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, one clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், முதலில். பேசச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) என்ன, என்ன?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி கேட்டது திருப்பூருக்கு. ஏற்கெனவே நான் பேசியபோது கேட்டேன்; தமிழ்நாடு முழுக்க, இந்தப் பிரச்சினை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** திருப்பூர் நகராட்சி மாத்திரமல்ல; கோவை மாநகராட்சி மாத்திரமல்ல; தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய நகராட்சிப் பகுதிகள், மாநகராட்சிப் பகுதிகளுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரி நாராயணன் அவர்கள்.

***திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்:** வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பதின்மூன்றாவது சட்டப் பேரவையினுடைய தலைவராகப் பெருமையோடு பொறுப்பேற்றிருக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்திடுமுகத்தான் எனக்கு வழங்கிய இந்த வாய்ப்புக்கு உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

அரசியல் உலகில் அரசியல் கனி பறித்திடுவதற்கு வந்திடவில்லை, இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். 14 வயது பள்ளி மாணவப் பருவத்தில் தாய் மொழியாம் தமிழ் மொழி காக்க, திருவாரூர் வீதிகளில் தமிழ்க் கொடியேந்தி மாணவச் சமுதாயத்தைத் தட்டியெழுப்பி, 'ஓடி வந்த இந்திப் பெண்ணே! நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்ல' என்று தமிழக வரலாற்றில் புதிய அத்தியாயம் படைத்திட்ட அந்த நாளையும், தமிழர்களின் தன்மானம் காத்திட வெண்தாடி வேந்தர் தந்தைப் பெரியார் அவர்கள் கரம் பிடித்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நடந்து, மொழி காக்க, தமிழ் இனம் காக்க, மக்கள் நலம் காக்க, பலமுறை சிறையேகி, பாம்புகளும் பல்லிகளும் ஊர்ந்த பாளை தனிமைச் சிறையில் அடைபட்டு, தனது 82 வயதில் இன்றுவரை இந்த நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, ஐந்தாவது முறையாக தமிழக முதல்வராக இன்று ஆட்சிக் கட்டில் ஏறி, அரசுப் பொறுப்பேற்றுள்ள ஆரூர் கண்ட மனு நீதிச் சோழரே, தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்திருக்கும் நிறைகுடமே,





14 வயதில் நீங்கள் தொடங்கிய மொழிப் போரில் வெற்றி பெற்று, உங்கள் வாழ்நாளிலேயே தமிழ் மொழிக்குச் 'செம்மொழி' அந்தஸ்து பெற்றுத் தந்த வரலாற்றுத் தலைவரே, வாழும் வள்ளுவரே, 'செம்மொழி கொண்டோன்', (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தமிழ்த்தாய், தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே, சட்டமன்ற உறுப்பினராக இந்த மன்றத்தில் பணியாற்றிடும் பேறு பெற்றமைக்குப் பேருவகை கொண்டு, மீண்டும் நன்றி செலுத்துகிறேன். அவை முன்னவர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், சென்னை மாநகரத் தந்தையாய்ப் பொறுப்பேற்று, மேயருள் சிறந்த மேயர் என்ற பல்வேறு விருதுகளைப் பெற்று, இன்றைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராய் விளங்கும் வெள்ளை மாளிகையின் வெண் புறா, இளைஞர்களின் எழுஞாயிறு, இந்த நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் முதற்கண் உரித்தாக்குகின்றேன்.

*பிற்பகல் 12–25*

தலைவர் கலைஞர் அவர்களால் அச்சரப்பாக்கம் தொகுதியிலே நிறுத்தப்பட்ட என்னை, தலைவர் கலைஞர்மீதும், தளபதி அவர்கள்மீதும் நம்பிக்கை வைத்த மக்கள், 15,856 வாக்குகள் எனக்கு அதிகமாக அளித்து வெற்றிபெறச் செய்து, சட்டமன்றத்திற்கு அனுப்பிய அச்சரப்பாக்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், ஜனநாயகக் கூட்டணியினுடைய தலைவர்களுக்கும், எனது வெற்றிக்காக உழைத்திட்ட அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியை நான் மீண்டும் மீண்டும் உரித்தாக்குகிறேன்.

தமிழக முதல்வர் அவர்களே, தாங்கள் ஐந்தாம் முறையாக முதலமைச்சராய்ப் பொறுப்பேற்ற விழா நிகழ்வை, இலட்சோப இலட்ச மக்கள் நேரிலும், தொலைக்காட்சியின் வாயிலாகவும் உலகம் எங்கும் கண்டு களித்துக் கொண்டிருந்த அதேவேளையில், தேர்தல் வாக்குறுதிகளில் மூன்றினை நிறைவேற்றிடும்வகையில் கோப்புகளில் கையெழுத்திட்ட காட்சி கண்டு உலகே வியந்து நின்றது.

தாங்கள் பிறந்த தினமான ஜூன் திங்கள் 3 ஆம் நாள் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் திட்டம் அமலுக்கு வருகிறது. ஆம்; உங்களுடைய ஒவ்வொரு பிறந்த நாளிலும் கடந்த காலத்தில் சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றிய பெருமை, உங்களைத்தான் சாரும் தலைவர் கலைஞர் அவர்களே. குழந்தைச் செல்வங்களின் உடல்நலம் பேணிட, வாரம் இரண்டு முட்டைகள் சத்துணவோடு கர்ம வீரர் காமராஜர் பிறந்த ஜூலை 15 ஆம் நாளிலிருந்து அமலுக்கு வருகிறது என்கின்ற உத்தரவு, பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் ஒரு மிகப் பெரிய மகிழ்வைத் தந்திருக்கிறது.

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார். வறட்சியாலும், வெள்ளத்தாலும், நான்கு ஆண்டுகட்கு மேலாக வாடிய பயிர்களால் பட்ட கடனை அடைக்க முடியாமல், வாடி நின்ற விவசாயிகளைக் கண்டு வாடிய நீங்கள், அவர்கள் வாங்கியிருந்த கூட்டுறவுக் கடன்களை ஒட்டுமொத்தமாக ரூபாய் 7,000 கோடியைத் தள்ளுபடி செய்து, விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்த பெருமை, தலைவர் கலைஞர் அவர்களே, முதல்வர் அவர்களே, தங்களையே சாரும்.

ஆதிச்சபுரம் பிரகாஷ் இறந்தபோது, அன்றைய முதல்வரிடம், முதல்வர் ஜெயலலிதா அவர்களிடம் கேள்வி கேட்டபோது, 'அந்த வீட்டிலிருந்த மற்றவர்கள் பசியால் இறக்கவில்லையே! ஏன்?' என்று கேட்ட அந்த ஆணவப் பேச்சையும், விவசாயப் பெருங்குடி மக்கள் அறிவார்கள். விவசாயிகள் வறுமையில் வாடி, பசிக்கு எலிக் கறி சாப்பிடுகிறார்களே என்று சொன்னபொழுது, 'அவர்கள் பசிக்குச் சாப்பிடவில்லை; ருசிக்குச் சாப்பிடுகிறார்கள்' என்று சொன்ன அன்றைய முதல்வர் ஜெயலலிதாதான் இன்றைக்குச் சட்டமன்றத்திலே நின்று விவசாயிகளுடைய வங்கிக் கடன்களை எல்லாம் ஏன் நீங்கள் ரத்து செய்யவில்லை என்று கேள்வி கேட்கின்றார். அன்றைய முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, இதை ஏன் அப்பொழுது செய்யவில்லை? இப்பொழுதுதான் பொறுப்பேற்றிருக்கின்றார் கலைஞர் அவர்கள். 15 நாட்கள்கூட நிறைவுபெறாத இந்தச் சட்டமன்றத்திலே வந்து, இப்படிப் பேசுவதற்கு அவருக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஏழையெளிய வீடுகளுக்கு, பெண்கள் பொது அறிவு பெறவும், பொழுதுபோக்கிற்காகவும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்ற முதல்வர் அவர்களுடைய தேர்தல் அறிக்கையைக் கண்டு, 'முடியுமா? ஏமாற்றுகிறார்கள்' என்று தங்கள் வெற்றியைச் சீர்குலைக்க எண்ணி ஏகடியம் பேசியவர்களையெல்லாம் திக்குமுக்காடச் செய்து, திகைப்பிலும், வியப்பிலும் ஆழ்த்தி, அண்ணா, தந்தை பெரியார் பிறந்த முப்பெரும் விழாக்களையொட்டி, இவ்வாண்டே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற தங்களது அறிவிப்பால் எதிரிகளை நிலைகுலையச் செய்துவிட்டீர்கள். நல்லவர்கள் பாராட்டுகிறார்கள். இந்தியாவே உங்களை நிமிர்ந்து பார்க்கிறது.

நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் இலவசம் என்றீர்கள். அந்த நிலத்தையெல்லாம், 50 இலட்சம் ஏக்கர் நிலத்தை, பண்ணை முதலாளிகளுக்குத் தாரை வார்க்க இருந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, ஏழையெளிய மக்களுக்கு 2 ஏக்கர் நிலம் நீங்கள் தரப்போகிறீர்கள் என்ற வயிற்றெரிச்சலில் இங்கே வந்து அங்கலாய்த்துக் கொண்டாரே, அவரை இந்த நாட்டின் விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழையெளிய மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். விளம்பரத்திற்காக, இந்தச் சட்டமன்றத்திலே அவர் வீர உரை ஆற்றுவதைப் போல் வேஷமிடுகிறார் என்பதை, இந்த நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இதையும் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதல்வர் அவர்களே, தரிசாகக் கிடக்கின்ற அந்த நிலத்தைத்தான் ஏழைகளுக்குக் கொடுக்க இருக்கின்றீர்கள்.

விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் பெரும்பயன் அளித்திட்ட உழவர் சந்தை திட்டம், விவசாயத்திற்கான இலவச மின்சார திட்டம், காவிரி நதிநீர்ப் பங்கீட்டில் மத்திய அரசின் கடமையை வலியுறுத்தியமையும், முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை அதிகரிக்க உச்ச நீதிமன்ற ஆணைக்கேற்ப நடவடிக்கை எடுக்க உறுதிபூண்டுள்ளமையும், பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் பணியைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க உறுதிபூண்டுள்ளமையும், நீர்வளப் பற்றாக்குறையைப் போக்கிட, தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்திட, மத்திய அரசினை வலியுறுத்திட உறுதிபூண்டுள்ளமையும், உலக வங்கி உதவியுடன் நீர்ப்பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் போன்ற அருமையான திட்டங்கள் மற்றும் மறைந்த மாமேதை மாண்புமிகு வர்த்தகத் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களது வரலாற்றுச் சிறப்புமிக்க

[திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்] [2006 மே 29

Doha மாநாட்டுப் பிரகடனத்தையொட்டி வேளாண் தொழில் பாதிக்கப்படாமல் இருக்க, மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தவிருப்பதும் போன்ற இவையெல்லாம் மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களே, உங்களுடைய பெருமைக்கும் சிறப்புக்கும் உரியனவாகும்.

*பிற்பகல் 12–30*

ஜூன் 12–ல் மேட்டூர் அணையிலிருந்து நீர் விடுவதாக இன்றைக்கு நீங்கள் அறிவித்திருக்கின்ற அறிவிப்பைக் கண்டு விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாக இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயமும், விவசாயிகளும்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்:** இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதை நன்கு உணர்ந்த முதல்வர் அவர்களே, விவசாயத்திற்கு அதிமுக்கியத்துவம் கொடுத்திருப்பது வறுமையை, பசிப் பிணியைப் போக்கும் ஒரு நல்ல அரசின் செயல்பாடாக, வெளிப்பாடாக மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நல்லரசாக மலர்ந்திருப்பதைக் காட்டுகிறது.

முதல்வர் அவர்களே, எனது அச்சரப்பாக்கம் தொகுதி, முழுக்க முழுக்க விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொகுதியாகும். விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் திட்டப்பட்டுள்ள இந்தத் திட்டங்களால் விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள் என்பதை மகிழ்வுடன், நன்றியுடன் தெரிவித்துக்கொள்வதோடு, நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக உங்களைப் பெருமையோடு நன்றியோடு நினைவுகூர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அச்சரப்பாக்கம் தொகுதியில், விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள் இல்லை. இயற்கை உர உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை, அச்சரப்பாக்கம் தொகுதியிலே நிறுவி, இந்தத் தொகுதியின் நிலையை உயர்த்திட தாங்கள் உத்தரவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொகுதியில் அரசுக் கொள்முதல் நிலையமே இல்லை. எல்லா விவசாயிகளும் தங்களது விளைபொருட்களை, விற்பனைக்கு, மதுராந்தகத்திற்கும், அருகே உள்ள செங்கற்பட்டிற்கும், திண்டிவனத்திற்கும்



2006 மே 29] [திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்]

எடுத்துச் செல்லவேண்டிய நிலை உள்ளது. விவசாயிகளின் இக்கஷ்டத்தை நீக்கிட, அரசுக் கொள்முதல் நிலையம் ஒன்றினை உடனடியாக அச்சரப்பாக்கம் தொகுதியிலே அமைத்து உதவிட தாங்கள் உத்தரவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்காக பல திட்டங்களைத் தந்திருக்கின்ற தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களே, நான் அவற்றை விளக்கிடுவதற்கு எனக்கு நேரமில்லை. என்னுடைய அச்சரப்பாக்கம் தொகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற காரணத்தால், அங்கே ஒரு அரசுக் கலைக் கல்லூரியை தாங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கு முந்தைய ஆட்சி வழங்கிய இலவச சைக்கிள் திட்டம் தங்களது ஆட்சியிலும் தொடரும் என அறிவித்திருப்பது காழ்ப்புணர்ச்சியோ, பழிவாங்கும் போக்கோ இல்லாது, மக்களுக்குப் பயன்படும் எந்தத் திட்டமாக இருந்தாலும், எந்த ஆட்சியும் தொடர வேண்டுமென்று முன்னுதாரணம் படைத்துவிட்டீர்கள். நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்பதற்காகவே முந்தைய ஆட்சியால் நிராகரிக்கப்பட்ட உழவர் சந்தை திட்டம், தந்தை பெரியார் சமத்துவபுரம் திட்டம்போலவோ அல்லது சாலைப் பணியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் பழிவாங்கப்பட்டதுபோல் அல்லாமல், பெண்கள் திருமண உதவித் திட்டம் ஒரு பெண் முதலமைச்சராலேயே கைவிடப்பட்டது போல் அல்லாமல், மாணவர்கள் தொடர்ந்து பயனடையும் நலத் திட்டம் என்ற காரணத்தால், இவற்றைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவோம் என்று முடிவு எடுத்த தங்களது தொலைநோக்குப் பார்வையை, மாணவ சமுதாயமும், அவர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களும் இந்த நாட்டு மக்களும் உங்களை வாழ்த்தி வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களே, தாங்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமணத் திட்டத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் என்பதை 15 ஆயிரம் என உயர்த்தியுள்ளது, பெண்களின் திருமணத்திற்கு இந்த அரசு உதவும் என்பது மட்டுமல்ல; பெண்கள் 10 ஆம் வகுப்பு வரையிலாவது படிக்க வேண்டுமென்று பெண் கல்விக்கு நீங்கள் கொடுக்கின்ற முக்கியத்துவத்தின்மூலமாக..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்:** பெண் இனத்தை விழிப்புணர்வுப் பாதைக்கு இட்டுச் செல்லும் அரசாக தங்களது அரசினை அமைத்துக் கொண்டுள்ளீர்கள் என்பதை எண்ணி, அனைத்துப் பெண்களும் இன்றைக்குப் பெருமையோடு, நன்றியோடு பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்ப் பண்பாட்டுச் சின்னமாக விளங்கிய கற்புக்கரசி கண்ணகிச் சிலை சிதைக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டு, அருங்காட்சியகத்திலே வீசப்பட்டு கிடந்த காட்சியைத் தாங்கள் கவலை தோய்ந்த முகத்தோடு பார்த்த காட்சியைத் தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் பார்த்துப் பதைபதைக்காதோர் யார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்:** ஆம்; முதல்வர் அவர்களே, கற்புக்கரசி கண்ணகி சிலைக்கு உங்கள் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் தேதி விடுதலை, தமிழகம் போல்; அன்று கண்ணகி சிலை நீக்கப்பட்ட இடத்தில் நிறுவப்படுவதால்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள், சென்னை மாநகரத் தந்தையாய்ப் பணியாற்றியபோது, கட்டப்பட்ட 10 பாலங்களில் ஒன்றான பெரம்பூர் பாலம், ஆசிய கண்டத்தில் இரண்டாவது மிகப் பெரிய பாலமாக அமைய இருப்பதை, அப்படி அமைந்துவிட்டால் தளபதி அவர்களுக்குப் பெரும் புகழ் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில், அன்று போடப்பட்ட தடைக் கற்கள் அனைத்தும் இன்று நொறுக்கப்பட்டு, பெரம்பூர் மேம்பாலத் திட்டம் விரைவில் நிறைவு செய்யப்படும் என்னும் தங்களது அறிவிப்பால், பெரம்பூர் மட்டுமின்றி அதனைச் சுற்றி வாழும் மக்கள் குறிப்பாக, இரயில்வேயின் லோகோ, கேரேஜ் பணிமனைகள், ஜெனரல் ஸ்டோர்ஸ், ஜாயின்ட் ஆபீஸ், தென்னக இரயில்வே தலைமை மருத்துவமனை, இ.எஸ்.ஐ. மருத்துவமனை, புரசைவாக்கம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் மக்கள், மழைக் காலத்தில் பாலத்தின் அடியில் தேங்கி நின்ற பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் இன்று மகிழ்ச்சியோடு பெருமூச்சு விடுகிறார்கள், பெரும் எதிர்பார்ப்போடு. இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும்போது இப்பகுதிவாழ் மக்கட்கும், அனைத்துப் பயணிகளுக்கும் (மணியடிக்கப்பெற்றது) பெரும் நிம்மதியைத் தரும் என்ற எண்ணத்தில் நன்றியோடு தங்களை வாழ்த்துகிறேன்.



*பிற்பகல் 12–35*

அச்சரப்பாக்கம் தொகுதியில் தேன்பாக்கம், கடப்பாக்கம் வழியாகச் செல்லும் ஈ.சி.ஆர். சாலையில் அடிக்கடி விபத்துகள் நேர்வதால், நடமாடும் மருத்துவமனையும் — Mobile hospital — நிரந்தர மருத்துவமனை ஒன்றையும் நிறுவி உதவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அச்சரப்பாக்கம் தொகுதியில் அமைந்துள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தை ஒட்டுமொத்த சுற்றுலாத் திட்டத்தின்கீழ், உலகத் தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக அமைத்து, அச்சரப்பாக்கம் தொகுதியின் நிலையை உயர்த்திட, உதவிட வேண்டுமென உங்களைப் பணிவோடு வேண்டி, இந்து சமயம் பற்றி ஒன்றை மட்டும் நான் கூறி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்:** இந்து சமய திருக்கோயில்களில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற உங்களது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சேர்த்து தரப்பட்ட ஒரு வரப்பிரசாதமாகும் என்ற நன்றியோடு, எதையும் தாங்கும் இதயம், சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று அறிவித்த தலைவர் கலைஞர் அவர்களே, எத்தனையோவற்றை நான் பாராட்டிப் பேச எனக்கு நேரம் இல்லையென்றாலும், எதையும் தாங்கும் இதயத்தை அண்ணாவிடம் இரவலாகப் பெற்றீர்களே, அது எதற்காக? தாக்கப்படுவதற்கா? அல்லது, இன்றைக்குக்கூட சட்டமன்றத்திலே தாக்க எத்தனிக்கின்றவர்களைத் தாங்குவதற்கா? புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனாலும் நீங்கள் திடமான உடல் நலத்தோடு, நல்ல வலிமையான உடல் நலத்தோடு, இந்த நாட்டின் ஜனநாயகப் பாதுகாவலராய், இந்த நாட்டிற்கு ஒரு மிகப் பெரிய எடுத்துக்காட்டாய், இந்தியத் திருநாட்டின் வழிகாட்டியாய், உலக அரங்கில் ஒப்பற்ற தலைவராக, அரசியல் தலைவராக, அரசியல் விற்பன்னராக, அரசியல் விஞ்ஞானியாக, எந்தக் காலக்கட்டத்திலும் எந்தத் தரப்பு, சமுதாய மக்களும் உயர்ந்து வாழ, ஒப்பற்ற திட்டங்கள் தீட்டுகின்ற, தீட்டித் தந்திருக்கின்ற உங்களை வாழ்த்தி, இந்த ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும்வகையிலே எனக்கு அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி என் உரையை நிறைவுசெய்கிறேன். வணக்கம், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் அவர்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, அனைவருக்கும் எனது பணிவார்ந்த வணக்கம். வரலாற்றுச் சிறப்புவாய்ந்த இந்தச் சட்டப் பேரவையில் ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை எதிரொலிக்கும்வகையிலே விடுதலைச் சிறுத்தைகள் சார்பில், உரையாற்றக்கூடிய வாய்ப்பு எனக்கு வழங்கிய மங்களூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், தோழமைக் கட்சிகளுக்கும், எங்களுடைய இயக்கத்தின் பொதுச் செயலாளர் அண்ணன் திருமாவளவன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைமீது இங்கே பலரும் பாராட்டியும், நிறை குறைகளைச் சுட்டிக்காட்டியும் உரையாற்றி உள்ளனர். விடுதலைச் சிறுத்தைகள் சார்பில், எமது கருத்தை இங்கே பதிவு செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப் பட்டோருக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக, சட்டப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று எமது இயக்கம் முதன்முதலில் வேண்டுகோள் விடுத்தது. அதை ஏற்கிறவகையிலே, அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றப் போவதாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருப்பதை வரவேற்றுப் பாராட்டுவதுடன், எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தப் பேரவையில், ஈழத் தமிழர்கள்மீது திணிக்கப்படும் போரைத் தடுத்து நிறுத்தவும், சிங்கள இனவெறி அரசுக்கு எச்சரிக்கை விடுக்கவும், ஈழத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்வகையிலும் இந்தியப் பேரரசு தலையிடவேண்டும் என்று வற்புறுத்தி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களையும், ஈழத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னணித் தலைவர்கள் சந்தித்துப் பேச அனுமதிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். தமிழ், தமிழர் நலன்களில் அக்கறை கொண்டுள்ள தமிழினத் தலைவர் என்று போற்றப்படுகின்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சி





இங்கே நடைபெறுகிறபோது, ஈழத் தமிழ் மக்கள் கேட்பாரற்றவர்களாய், நாதியற்றவர்களாய், இப்படி அல்லல்படுவதை நாம் இப்படி அமைதியாக நின்று வேடிக்கை பார்க்கப் போகின்றோமா? தமிழினத் தலைவர் என்றால் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, ஈழத்திலும், மலையகத்திலும், இன்னும் உலகெங்கிலும் வாழ்கின்ற புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் ஒட்டு மொத்த தமிழினத்திற்கும் தலைவர் என்ற அடிப்படையில்தானே, முதல்வர் கலைஞர் அவர்களிடம் தமிழ்ச் சமூகம் மிகுந்த எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது? ஆகவே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழினத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றக்கூடியவகையிலே, ஈழத் தமிழர் பாதுகாப்பை முன்னிறுத்தி பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

பிற்பகல் 12–40

அடுத்து, நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்போவதாக இந்த அரசு உறுதி அளித்துள்ளதை வரவேற்று பாராட்டுகிறோம். நிலம், அதிகாரத்தையும், ஆளுமையையும், தீர்மானிக்கக்கூடியதாக உள்ளது. நிலங்கள் தனி நபர்களின் கைகளிலே குவிந்து கிடப்பதால், பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் நிலமற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அதனால்தான், அடிமைத்தனமும் சாதிக் கொடுமையும் இந்த மண்ணிலே காப்பாற்றப்பட்டு வருகின்றன. இந்த இழிவு நிலை அடியோடு புரட்டப்பட வேண்டுமானால், நிலமற்ற மக்களுக்கு நிலங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது இன்றியமையாத ஒரு வரலாற்றுத் தேவையாகும். அந்தவகையிலே, 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தை உண்மையாகவும், உறுதியாகவும் நடைமுறைப்படுத்து வோமானால், இது ஒரு மகத்தான மாற்றத்தை, புரட்சிகரமான மாற்றத்தை இம்மண்ணிலே உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இத்திட்டத்தை எப்படி அரசு நடைமுறைப்படுத்தப் போகிறது? நில உச்சவரம்புச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தி, நிலங்களைக் கையகப்படுத்தி பகிர்ந்தளிக்கப் போகிறதா? அல்லது, தரிசு நிலங்களை மட்டுமே கையகப்படுத்தி பிரித்து வழங்கப் போகிறதா? மாவட்டந்தோறும் தனித்தனியே எவ்வளவு தரிசு நிலங்கள் உள்ளன? ஒரு மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு அந்த மாவட்டத்திலேயே நிலம் வழங்கக்கூடிய அளவுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் தரிசு நிலங்கள் உள்ளனவா? ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே தரிசு நிலங்கள் உள்ளனவா? அம்மாவட்டங்களில் உள்ள நிலமற்ற மக்களுக்கு எந்த மாவட்டங்களில் நிலம் ஒதுக்கப்படும்? குறிப்பாக, இராமநாதபுரம், திருநெல்வேலி

[திரு. கு. செல்வம்] [2006 மே 29

மாவட்டங்களில் ஏராளமான தரிசு நிலங்கள் உள்ளன என்று அறியமுடிகிறது. அப்படியென்றால் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் உள்ள நிலமற்றவர்களுக்கெல்லாம் தென் மாவட்டங்களில் நிலம் வழங்கப்படுமா? இத்தகைய கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கக்கூடியவகையிலே, மாவட்ட வாரியாக தரிசு நிலங்கள் எவ்வளவு உள்ளன என்பதுபற்றியும், நிலமற்ற மக்களின் குடும்ப எண்ணிக்கை தொடர்பாகவும் வெள்ளை அறிக்கை ஒன்றை அரசு வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் நிலம் உள்ளவர்களுக்காக சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இலவச மின்சாரம், கூட்டுறவுக் கடன் ரத்து, உழவர் சந்தை எல்லாமே நிலம் உள்ளவர்களுக்கானவை. நிலமற்ற கூலி விவசாயிகளே எண்ணிக்கையில் அதிகம். அவர்கள் நலனுக்காக, இந்த அரசு ஏதாவது திட்டம் வைத்துள்ளதா? நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுப்பதாகச் சொல்லியிருப்பதிலுள்ள பிரச்சினைகளை, முன்னாள் முதல்வர் சுட்டிக்காட்டினார். அப்படி இந்த அரசு நிலத்தைக் கொடுத்தாலும், அது நிலமற்ற விவசாயக் கூலிகளுக்கே தரவேண்டும். நிலமற்ற விவசாயி என்பதற்குப் பதிலாக நிலமற்ற விவசாயக் கூலி என்று திருத்தம் செய்ய வேண்டும்.

காவிரி நதிநீர்ச் சிக்கலைத் தீர்ப்பது மட்டுமல்லாமல், காவிரி பிரச்சினை தொடர்பான கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென்று நீதிமன்றங்கள் ஆணையிட்ட போதிலும்கூட, கர்நாடக அரசு அதை நிறைவேற்றாமல் உள்ளது. இதுதொடர்பாக கர்நாடக அரசிடம் நாம் வற்புறுத்த வேண்டும்.

பனைத் தொழிலாளர்கள் வாரியம் அமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதனை, தென்னை, பனைத் தொழிலாளர் வாரியம் என விரிவுபடுத்த வேண்டும். தென்னை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள், குறிப்பாக கயிறு திரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழை ஒரு பாடமாகப் பயில்வது குறித்து ஆணை பிறப்பிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆணை பிறப்பிப்பதற்குப் பதிலாக, சட்டம் இயற்ற வேண்டும். வர்த்தக நிறுவனங்களில் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுத வேண்டுமென்ற அரசாணையை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.



2006 மே 29] [திரு. கு. செல்வம்]

மங்களூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அது மிகவும் பின்தங்கிய தொகுதி. வெலிங்டன் என்ற ஏரி திட்டக்குடி பகுதியிலே இருக்கிறது. 24,000 ஏக்கர் நிலங்கள், அந்த ஏரியை நம்பியிருக்கின்றன. குறிப்பாக, விவசாயக் கூலிகள், சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அந்த ஏரியை நம்பித்தான் பிழைப்பு நடத்தி வருகின்றன. கடந்த ஆட்சியில் எவ்வளவு திட்டமிட்டும் அந்த ஏரி அணையைப் பலப்படுத்த முடியவில்லை. ஏறக்குறைய 9 மீட்டர் அளவுக்கு அந்த ஏரியிலே தூர் வாரப்பட வேண்டியிருக்கிறது. ஆக, அந்தப் பகுதிவாழ் 25,000 குடும்பங்களும் விவசாயத்திற்கு இந்த ஏரியின் தண்ணீரையே நம்பியிருக்கின்றன. ஆகவே, அனுபவம் மிகுந்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்த ஏரியிலே கவனம் செலுத்தி, 25,000 குடும்பங்கள் வாழ வழி செய்ய வேண்டும்.

திட்டக்குடி, முருகன்குடி, பெண்ணாடம் போன்ற பகுதிகளிலே கடந்த ஆண்டு வெள்ளம் வந்தபோது அந்தப் பாலங்கள் தரைப் பாலங்களாக இருந்தன. தரைப் பாலங்கள் எல்லாம் அடித்துச் சென்றபோது, அந்தப் பகுதி ஒரு தீவாகக் காட்சியளித்தது. அங்கு படிக்கின்ற மாணவ, மாணவிகள் எல்லாம் ஏறக்குறைய 5 மாதங்கள் பள்ளிக்குச் செல்ல இயலவில்லை. உடனடியாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 12–45

வெள்ளப் பெருக்கிலே தடுப்புச் சுவர் இல்லாத பகுதிகளிலே, குறிப்பாக திட்டக்குடி பகுதியிலே, வாழ்ந்துவரும் கிராம மக்களெல்லாம் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அங்கிருந்த உடைமைகள், அவர்களுடைய வீடுகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. ஆனால், இதுவரை அவர்களுக்கு எந்த நிவாரணமும் அளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இனி வருங்காலங்களிலாவது இப்படி வெள்ளம் ஏற்படும்போது, பாதிப்பு ஏற்படாதவகையில் அங்கே தடுப்புச் சுவர் எழுப்பி மக்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, நெல் கொள்முதல் நிலையம். என்னுடைய தொகுதி, சேலம் மாவட்டத்திலிருந்து தொடங்குகிறது. எஸ். நாரையூர் என்ற பகுதியிலேயிருந்து விருத்தாசலம் பகுதிக்கு வரவேண்டுமென்றால் ஏறக்குறைய 70 கிலோ மீட்டர் இருக்கிறது. அவர்கள் தங்களுடைய தானியங்களை விற்பனை செய்வதற்காக அந்த விற்பனை நிலையத்திற்கு



V2H,31'f0L.
f06.3.1.
தமிழ்நாடு ... காப்பகம்
227073.

வரும்பொழுது அவர்கள் போக்குவரத்திற்கு லாரிக்குப் பணத்தைக் கொடுத்து நட்டம் அடைகின்றார்கள். ஆகையால், தொழுதூரிலோ அல்லது திட்டக்குடி பகுதியிலோ ஒரு கொள்முதல் நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டும்.

ஏற்கெனவே, 20, 30 ஆண்டுகளுக்கு முன்பு, தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு குடிசையிலே, ஒரு தொகுப்பு வீட்டிலே 5 குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதில் தலையிட்டு அந்த மக்களுக்கு மனைப் பட்டா வழங்க வேண்டும்.

மேற்குப் பகுதியிலே, தண்ணீர் என்றால் என்ன என்றே தெரியாத அளவிற்குக் கிராமங்கள் இருக்கின்றன. 10 கிலோ மீட்டர், 12 கிலோ மீட்டர்வரை சென்று தண்ணீர் எடுத்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை அமல் செய்ய வேண்டும்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, அருணா சர்க்கரை ஆலையைத் தவிர, வேறெந்த சர்க்கரை ஆலையும் என்னுடைய தொகுதியிலே இல்லை. அந்தச் சர்க்கரை ஆலையாலும் அங்கே சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, அம்பேத்கர் நகர் என்ற இடத்திலே, நான் பிரச்சாரம் செய்யும்போது, 'நீங்கள் வாக்கு கேட்க உள்ளே வாருங்கள்; ஆனால், நாங்கள் கொடுக்கும் தண்ணீரைக் குடித்துவிட்டு வாருங்கள்' என்று அந்த மக்களெல்லாம் தண்ணீர் குடிக்கச் செய்தார்கள். அந்தத் தண்ணீரைப் பார்த்தால், அதில் பூச்சிகளும், புழுக்களும் இருந்தன. அப்படியொரு கெட்ட நீராக, மக்கள் அதைக் குடித்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக, பல கோரிக்கைகளை நாங்கள் வைத்திருக்கிறோம். இதை முதல்வர் அவர்கள் தலையிட்டு, கலைஞர் அவர்கள் காலத்திலேயே இந்தத் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றோம்.

தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. 83 இலட்சம் கொடுப்பதாக அறிகிறோம். ஆனால், இந்தக் காலக்கட்டத்திலே விலைவாசிகள் எல்லாம் ஏறி, ஒரு பாலத்தைக் கட்ட வேண்டுமென்றாலோ, ஒரு சாலை போட வேண்டுமென்றாலோ, தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. 83 இலட்சம் போதாது. ஆக, முதல்வர் அவர்கள் இரண்டு கோடி ரூபாயாக அதை உயர்த்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்ட வேண்டுமென்று இடத்தைக் கையகப்படுத்தினாலும், சாலைகள் அமைக்க வேண்டுமென்று அந்த இடங்களைக் கையகப்படுத்தினாலும், நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து அதற்குத் தடையாணை வாங்கி வருகிறார்கள். தொடர் வண்டித் துறையிலே இருப்பதைப்போலவும் (மணியடிக்கப்பெற்றது) நெடுஞ்சாலை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடிக்கிறீர்களா? சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** தேசிய நெடுஞ்சாலைத் துறையிலே இருப்பது போன்று, ஒரு நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்றால், நிலத்தை எடுக்க வேண்டுமென்றால் சிறப்பு ஆணையைப் பிறப்பிக்குமாறு நம்முடைய இந்தச் சட்டமன்றப் பேரவையிலேயே நாம் சட்டம் இயற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்த மக்களெல்லாம் ஏழையெளிய மக்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு, வெலிங்டன் ஏரி பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு கண்டு, 25,000 குடும்பங்களுக்கு நீங்கள் நீதி வழங்க வேண்டும்; அவர்கள் பிழைக்க வழி செய்ய வேண்டும்.

குறிப்பாக, மேற்குப் பகுதியிலே தண்ணீர்ப் பிரச்சினை, தினந்தினம் அங்கே நடந்துகொண்டிருக்கிறது. ஆய்வுக் குழுவின் அதிகாரிகளையோ, சட்டமன்ற உறுப்பினர்களையோ அனுப்பி, அந்தத் தொகுதியை மேம்படுத்த ஆணையிடுமாறு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்செல்வன் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள். ஒரு விளக்கத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தத் தரிசு நிலத்தைப் பற்றி, முன்னாள் முதல்வர் சொன்னதையெல்லாம்கூட இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். கலைஞர் அவர்கள், மிகத் தெளிவாக இந்தத் திட்டம் பற்றி, சொல்லியிருக்கிறார். கடந்தகால ஆட்சியிலே, 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை 'நாங்கள் மேம்படுத்தப் போகிறோம்' என்று சொல்லிவிட்டு,

ஜெட்ரோபா போன்றவைகளைப் பயிரிடுவதற்காக N.R.I. போன்றவர்களுக்கெல்லாம், பணக்காரர்களுக்கெல்லாம் 500 ஏக்கர், 1,000 ஏக்கரைப் பிரித்துக் கொடுப்பதற்குத் திட்டம் தீட்டினார்கள். அந்த அடிப்படையிலே சிலருக்கு வழங்கவும் செய்திருக்கிறார்கள்; முன்னேறவில்லை. கலைஞர் அவர்கள் அதைத் திருத்த வேண்டுமென்ற எண்ணத்திலேதான், இந்தத் தேர்தல் அறிக்கையிலே, அந்த 50 இலட்சம் ஏக்கரை அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு, பணக்காரர்களுக்குத் தாரை வார்ப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கு 2 ஏக்கர் வழங்கப்படும் என்று கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் அறிவித்த திட்டம் முதலிலேகூட, 30 ஏக்கர் standard acre-ஐ 15 ஆகக் குறைத்து அந்தப் பகுதி மக்களுக்கு, அங்கே இருந்தவர்களுக்கு வழங்கியதைப்போல, தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது கிடைக்கிற அந்த 50 இலட்சம் ஏக்கர் நிலத்தையும், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்பதாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் மக்களைத் திசை திருப்புவதற்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஏழை விவசாயிகளுக்கும் 2 ஏக்கர் கொடுப்பீர்களா என்று கிளப்பி விடுவதற்காகச் சொல்கிறார்களே தவிர, கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிற திட்டம், தரிசு நிலங்களைப் பண்படுத்தி 50 இலட்சம் ஏக்கர் நிலங்களை ஏழைகளுக்குக் கொடுத்து, நிலமற்ற விவசாயிகளை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லப்பட்டிருக்கிற திட்டம்தான். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டால், இந்தப் பிரச்சினையே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்செல்வன்.

***திரு. பா. செந்தமிழ்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய முதலாவது வணக்கம். சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை, அரவணைத்து ஆளாக்கி வழிகாட்டி, ஆதரவு அளித்து, சட்டமன்ற உறுப்பினராக்கிய எனது தலைவர், தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து, இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த மேல்மலையனூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும்,



என்னுடைய வெற்றிக்காக உழைத்த நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவரும், தமிழகத்தினுடைய முதல்வருமான நம்முடைய மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி நாளான்று, கோடை வெப்பத்தையும் பொருட்படுத்தால், அந்த வெயிலிலேயும், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, என்னுடைய வெற்றிக்கு உறுதுணையாக இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் அண்ணன் பொன்முடி அவர்களுக்கும் மற்றும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியிலே அங்கம் வகித்த அனைத்து கட்சியினுடைய தலைவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, வணக்கத்தை, சமர்ப்பிக்கிறேன். பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் ஆளுநர் உரை மீதான இந்த விவாதத்தில் பங்கேற்க எனக்கு வாய்ப்பளித்த எங்கள் உள்ளமெல்லாம் நிறைந்த எங்களுடைய கட்சியின் தலைவர் அண்ணன் ஜி.கே. மணி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உழவர் சந்தை, தொகுப்பூதியம் பெறும் அரசு ஊழியர்களுக்கான காலமுறை ஊதியம் வழங்குதல், நுழைவுத் தேர்வு இரத்து, மினி பஸ், உழவர்களுக்கான 2 ஏக்கர் இலவச நிலம், அரசு பணிக்கான வயது வரம்பு நீட்டிப்பு, மருத்துவ பொறியியல் சட்டப் படிப்புகளுக்கான உயர்த்தப்பட்ட கட்டணம் இரத்து, சத்துணவில் முட்டை, இளைஞர் சுய உதவிக் குழு, சென்னையில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், மீண்டும் ஏழைப் பெண்களின் திருமண உதவிக்கு ரூபாய் 15 ஆயிரம் நிதி மற்றும் இல்லாத இல்லங்களுக்கு எல்லாம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம்; இதுபோன்ற அற்புதமான பல திட்டங்களை நிறைவேற்ற ஆளுநர் உரையில் உறுதி செய்திருப்பதை என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் வரவேற்று பாராட்டுகிறேன்.

குறிப்பாக, 1968 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் இரு மொழிக் கொள்கையை உருவாக்கி, முதல் பிரிவு தமிழ் என்றும், இரண்டாம் பிரிவு ஆங்கிலம் என்றும் அறிவித்து, தமிழைப் பாட மொழியாக்கினார். ஆனால், காலப்போக்கில் இன்றையதினம் பட்ட மேற்படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கு, தமிழ்மொழி வழக்கத்தில் இல்லாத அளவிற்கு மாறிவிட்டது. இதனைத் தடுத்து நிறுத்திட, அண்டை மாநிலங்களில் உள்ளதுபோல், அந்தந்த மாநில மொழிவழி பாடத்தைக் கட்டாயப் பாடமாக்கியதுபோல், தமிழ்நாட்டிலும் ஆரம்பக் கல்வியிலிருந்தே தமிழைக்

கட்டாயப் பாடமாக்கிட அறிவிப்பு செய்த இந்த அரசைப் பாராட்டியாக வேண்டும்.

இதையேதான் வேறுவிதமாக இயக்கம் நடத்தி, பொதுமக்களிடம் தமிழைக் கட்டாயமாக வழக்கில் கொள்ள வேண்டும் என்று எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் ஐயா அவர்கள் பல போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டார்கள்.

அதேபோன்று, அரசு நடைமுறைக் கோப்புகளில் தமிழைக் கட்டாயமாக்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். தற்போது அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் கோப்புகளில் குறிப்புக் கோப்புகள் ஆங்கிலத்திலும், செயல் முறை ஆணைகள் தமிழிலுமாக அனுப்பப்படுகின்றன. இத்தகைய முறைகளை மாற்றி, அனைத்தும் தமிழிலேயே பராமரிக்கப்பட வேண்டும்.

இட ஒதுக்கீட்டினைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளீர்கள். இதனையே இந்திய அளவில் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக ஒரு பிரிவினர் வேலைநிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 27 சதவிகித இட ஒதுக்கீட்டைச் சட்டமாக்க வேண்டுமென்று, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்கள். இதனையொட்டி எங்கள் இயக்கத்தின் சார்பாக, சென்னையிலும், டெல்லியிலும் பேரணி நடத்தி சட்டமாக்கக் கோரினார் சமூக நீதிக் காவலர் எங்கள் மருத்துவர் ஐயா அவர்கள்.

தென் மேற்குப் பருவமழை முன்னதாக ஏற்பட்டதையொட்டி, மேட்டூர் அணையில் தண்ணீர் நிரம்பியுள்ளதையடுத்து, காவிரி டெல்டா விவசாயிகளுக்கு ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் பயிரிடுவதற்காக விவசாயிகள் மகிழ்ச்சியுறும்வகையில், ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்று அறிவித்தமைக்கு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற மேலவை 20 ஆண்டுகளுக்கு முன் கலைக்கப்பட்டது. தற்போது அறிஞர் பெருமக்களும், மாமேதைகளும் பங்கேற்கும் சட்டமன்ற மேலவை உருவாக்கப்பட்டு, சட்டமன்றத்திற்கு வழிகாட்டிட அதிவிரைவில் ஏற்பாடு செய்ய உள்ள அறிவிப்பினை வரவேற்று, பாராட்டுகிறேன். உழவர் சந்தையில் ஒவ்வொரு சந்தைக்கும் ஒன்றரை இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, எல்லா உழவர் சந்தைகளும் புனரமைப்பு செய்யப்படுவதை மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன்.





பிற்பகல் 12–55

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற அறிஞர் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப, இலவச சைக்கிள் திட்டம் தொடர்ந்து செயல்படும் என்று மாண்புமிகு முதல்வரின் மதிப்புமிகு அறிவிப்பினைப் பாராட்டுகிறேன். இந்த உயர்வான எண்ணத்தைக் கருத்தில்கொண்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இனிதே செயல்பட அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து, நான் சார்ந்திருக்கிற விழுப்புரம் மாவட்டம், மிகவும் பின்தங்கிய மாவட்டம். ஏழையெளிய மக்கள் வாழ்கிற அந்தப் பகுதி கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி இருக்கிற மாவட்டம் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவார்கள். அந்த மாவட்ட மக்களுடைய நீண்டகால கோரிக்கை அங்கே மருத்துவக் கல்லூரி ஒன்றும், அரசு பொறியியல் கல்லூரி ஒன்றும் வேண்டும் என்பதை நன்கு அறிவார்கள். எனவே, நம்முடைய கொள்கை அறிக்கையாக இருக்கிற அந்த மருத்துவக் கல்லூரியை, இந்த ஆண்டிலிருந்தே அதற்கான தொடக்கப் பணிகளை மேற்கொண்டு, வரும் கல்வி ஆண்டில் அது செயல்படுவதற்கான ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மத்திய சுகாதார அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்னய்யா அவர்கள், விழுப்புரத்திலே ஓர் அவசர சிகிச்சைப் பிரிவைத் தொடங்கி வைத்துவிட்டு, அங்கு மருத்துவக் கல்லூரி வருவதற்கான ஆக்கபூர்வமான பணிகளை மக்களிடத்திலே அறிவித்துவிட்டு சென்றிருக்கிறார்கள். எனவே, அவரும் ஆர்வமாக இருக்கிற காரணத்தினாலே, இந்த அரசு அந்த மருத்துவக் கல்லூரியையும், அரசு பொறியியல் கல்லூரியையும் விழுப்புரம் மாவட்டத்திற்குக் கொண்டு வருவதற்கான பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான மேல்மலையனூர் தொகுதி, மிகமிகப் பின்தங்கிய மக்கள் வாழ்கிற ஒரு பகுதி. விவசாயிகள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், விவசாயக் கூலிகள் நிறைந்த பகுதி; கிராமங்கள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலே, எந்தவித முன்னேற்றமும் இல்லை. அங்கு இருக்கிற பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இதுவரையிலும் வேலைவாய்ப்பு இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிற ஒரு நிலை என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. எனவே, கலைஞர்

அவர்கள் அறிவித்திருக்கிற இளைஞர் சுய உதவிக் குழுக்களை விரைவாக அமைத்து, அவர்கள் சொந்தமாகத் தொழிலைத் தொடங்குவதற்கான ஆக்கபூர்வமான பணிகளை விரைந்து நிறைவேற்றவேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய பகுதியிலே விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லை, செஞ்சியிலே இருக்கிற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு எடுத்துச் செல்கிறபொழுது, அங்கே விற்பனை செய்கிற பொருள்களுக்கு, பல ஆண்டுகளாக கோடிக்கணக்கான பணம் பட்டுவாடா செய்யப்படாமல் மாதக் கணக்கிலே விவசாயிகளை அலைக்கழிக்கிற நிலை, இன்றுவரை தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. அதற்காக நாங்கள் பலமுறை, பல ஆண்டுகளாக எங்களுடைய இயக்கத்தின் சார்பில் போராட்டம் நடத்தி, அவ்வப்போது அந்தத் தொகையை விவசாயிகளுக்குப் பெற்றுத் தருகிறோம். எனவே, இப்பொழுதும் கோடிக்கணக்கான ரூபாய் அங்கே நிலுவையில் இருக்கிறது. அதை விரைந்து தினந்தோறும் பணப் பட்டுவாடா செய்ய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, எங்களுடைய தொகுதியிலே பல ஊர்களிலே சாலைகள் சரியில்லாமல் இருக்கின்றன. குடி தண்ணீர்ப் பிரச்சினை அங்கே அதிகமாக இருக்கிறது. அதேபோன்று, முந்தைய தி.மு.க. ஆட்சியிலே குக்கிராமங்களுக்கெல்லாம் சென்றுவந்த பேருந்துகள் எல்லாம், கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, அப்படி நிறுத்தப்பட்ட பேருந்துகளையெல்லாம் விரைந்து இயக்குவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய மேல்மலையனூர் தொகுதியிலே பிரசித்திபெற்ற அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்குத் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்களும், அதேபோன்று பௌர்ணமி மற்றும் அமாவாசை அன்று இலட்சக்கணக்கான மக்களும் வெளி மாநிலங்களிலிருந்தெல்லாம் வந்துசெல்கிற ஒரு நிலை அங்கே இருக்கிறது. அங்கே போதிய வசதிகள் இல்லாமல், பேருந்து வசதிகள் இல்லாமல் இன்றைக்குக் கஷ்டப்படுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. எனவே, ஒரு பேருந்து நிலையமும், ஒரு காவல் நிலையமும் அமைப்பதுடன், இப்போது இருக்கிற மருத்துவமனை சரியாக இயங்கவில்லை; போதிய மருத்துவர்களும் இல்லை; போதிய செவிலியர்களும் இல்லை; அந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து



வைக்க வேண்டுமென்றும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நந்தன் கால்வாய் என்கிற ஒரு திட்டம்; கடந்த தி.மு.க. ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டம், விழுப்புரம் மாவட்டத்திலே ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகளை நிரப்பி, அந்தப் பகுதி விவசாயிகள் பயன்பெறுவதற்காகக் கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டம், இன்றைக்குச் சரிவரச் செயல்படாமல் தூர்ந்த நிலையிலே இருக்கிறது. எனவே, சாத்தனூர் dam-இலே மழைக் காலங்களிலே வருகிற உபரி நீர் எல்லாம் இன்றைக்குக் கடலிலே போய் கலந்துவிடுகிறது. எனவே, அந்தத் திட்டத்தை மீண்டும் புனரமைத்து, அதைத் தூர் வாரி, எங்களுடைய விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் பயன்பெறுகிறவிதத்திலே, அதைச் செப்பனிட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

அடுத்து, எங்களுடைய தொகுதியிலே, பல ஊர்களிலே நான் நன்றி சொல்லச் செல்கின்றபோது இன்னும் இந்த வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காதது பற்றி மக்கள் முறையிடுகிறார்கள். 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் குடியிருக்கிற அந்த குளக்கரைப் புறம்போக்குகள், மந்தைவெளிப் புறம்போக்குகள், ஏரிப் புறம்போக்குகளிலே வாழ்கிற மக்கள், பட்டா கேட்டு மனு கொடுத்துக் கொண்டிருக்கிற நிலை இன்றைக்கிருக்கிறது. அதற்கான ஒரு கொள்கை முடிவையெடுத்து, 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கிற, குடியிருக்கிற அந்த மக்களுக்கெல்லாம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்கு நம்முடைய முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடும்ப அட்டை புதுப்பித்தவர்கள், 20,000–க்கும் மேல், இன்றைக்கு அட்டைகளைப் பெறாமல் என்னுடைய தொகுதியிலே அது குறித்துக் கேட்கிறார்கள். எனவே, அந்தக் குடும்ப அட்டைகளை விரைந்து வழங்குவதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று, வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, எங்களுடைய செஞ்சி வட்டத்திற்கு உட்பட்ட பகுதி, கரும்பு விவசாயிகள் நிறைந்திருக்கிற பகுதி. அந்தப் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலை அவசியம் தேவைப்படுகிற ஒன்றாக இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது.)*

[2006 மே 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. பா. செந்தமிழ்செல்வன்:** எனவே அரசின் சார்பிலே, ஒரு சர்க்கரை ஆலையை என்னுடைய பகுதியிலே கொண்டு வருவதற்கான முயற்சிகளை நம்முடைய முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே பேசுவதற்காக வாய்ப்பளித்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சக உறுப்பினர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, வணக்கத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதின்மூன்றாவது சட்டப் பேரவையிலே பள்ளிப்பட்டு தொகுதியின் சார்பாக இரண்டாவது முறையாக வெற்றிபெறச் செய்த என்னுடைய வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியை நான் இங்கே காணிக்கையாக்குகின்றேன். வாய்ப்பினை அளித்த இந்திய தேசியக் காங்கிரஸினுடைய ஒப்பற்ற தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களுடைய மறுபதிப்பாக விளங்குகிற என் அன்புத் தலைவர் ஜி.கே. வாசன் அவர்களுக்கும் என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், காங்கிரஸ் தோழர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சி நண்பர்களுக்கும், தலித் பெருமக்களுக்கும் பொதுவுடைமை இயக்கத்திற்கும் என்னுடைய வணக்கத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

83–வது வயதிலே ஐந்தாவது முறையாக கலைஞர் பொறுப்பேற்பார் என்ற வாக்குறுதியுடன்தான் நாங்கள் வாக்கு கேட்டோம். அது இன்றைக்கு நிஜமாகியிருக்கின்றது. மனோன்மணீயம் பிள்ளை அவர்களுடைய வார்த்தைகளில் சொல்வதென்றால், அவருடைய சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துகின்றேன். இத்தகைய வயதிலே இவ்வளவு இளமையாக, இவ்வளவு துடிப்பாக எப்படிச் செயல்படுகின்றார் என்று பார்க்கின்றபோது, ஒரு மருத்துவர் என்கின்ற முறையிலே என்னுடைய



2006 மே 29] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

வியப்பை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். அன்றைக்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், அவருடைய அறையிலே சந்தித்தபோதுகூட, அவர் நின்றுகொண்டே எங்களுடைய பொன்னாடைகளை வாங்கிக் கொண்டார்கள். எங்களுடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள் 'உட்கார்ந்துகொள்ளுங்கள்' என்று சொன்னபோதுகூட, 'இல்லை, நான் நின்றுகொண்டே வாங்கிக்கொள்கிறேன்' என்று அந்த மரியாதையைக் காண்பித்த அந்தப் பண்பு, அந்தக் கண்ணியம், அவருக்கே உரித்தானது என்பதை இங்கே நான் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றைய முன்தினம் இந்த அரசை விமர்சித்துப் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர், இந்த அரசு விபத்தின் காரணமாக ஏற்பட்ட அரசு, minority அரசு என்று சொன்னார்கள். உண்மையிலேயே விபத்துகள் எப்போது நடந்தன என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். அவர்கள் ஆண்டபோது நடந்த விபத்துகள் எத்தகைய விபத்துகள் என்பதை இங்கே நாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலே காயமுற்றவர்கள் யார் என்று சொன்னால், அரசு ஊழியர்கள், சாலைப் பணியாளர்கள், போக்குவரத்து ஊழியர்கள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என்று அத்தனை பேருமே காயமுற்று, படுகாயமுற்று இருந்தார்கள். இப்போதுதான் நல்ல டாக்டர் கிடைத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த டாக்டர் கிடைத்த காரணத்தால், நிச்சயமாக எல்லோருமே குணம் பெறுகின்ற நிலைமை வந்திருக்கின்றது. அதற்காக, இந்த நிலைமையைத் தோற்றுவித்த தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நல்ல அவை எது என்று நான் இங்கே கூற விரும்புகின்றேன். மே 26 ஆம் தேதி அன்றைக்கு ரகளையிலே எதிர்க்கட்சியினர், நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஈடுபட்டபோது, தொடங்குகின்றபோதே பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். திருக்குறளைச் சொல்லி ஆரம்பித்தார்கள்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்ற குறளோடுதான் அவர்கள் ஆரம்பித்தார்கள். வகைப்படுத்தியும், சுவையாகவும் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டினால், அந்தப் பணியினை, உலகத்தார் செய்வார்கள்; நிறைவேற்ற

முனைவார்கள் என்ற பொருளோடு அவர்கள் ஆரம்பித்தார்கள். ஆனால் அந்தத் திறனை அவர்கள் பெற்றிராத காரணத்தால், சுவையான, வகையான கருத்துகளைக் கூற முடியாத காரணத்தால், அவர்கள் மல்லுக்கு நின்றார்கள்; சொல்லுக்கு நிற்கவில்லை. அதனால் விரும்பத்தகாத நிகழ்வுகள் இந்தப் பேரவையினுடைய மாண்பினைப் பாதிக்கும்வகையிலே அன்றைக்கு அமைந்தன.

*பிற்பகல் 1–05*

சென்ற பதினோராவது சட்டப் பேரவையினுடைய நிகழ்வினை நான் இங்கே நினைத்துப் பார்க்கின்றேன். ஒரு நல்ல தலைமையாசிரியரைப் போல, கலைஞர் அவர்கள் இந்த அவையை நடத்தினார்கள். அன்றைக்குப் பேரவைத் தலைவராக இருந்த, மறைந்த மாண்புமிகு பிடிஆர். பழனிவேல் ராஜன், அவர்கள் இந்த அவையினுடைய மாண்பினை முழுமையாகக் காத்தார்கள். நான் ஏற்கெனவே ஒரு நூலிலே குறிப்பிட்டிருந்தேன். 9–20–க்கெல்லாம் சட்டப் பேரவைக்கு வருகை தருகிற முதலமைச்சர், அன்றைக்கு எடுக்கின்ற ஆய்வுகளை, அலுவல்களை முறையாக அங்கே இருக்கின்ற உறுப்பினர்களிடம் பேசி, பேரவைத் தலைவரிடம் பேசி, பிறகு 9–27–க்கெல்லாம் இந்த அவைக்கு வருவார்கள். அவை முடிகிறவரை, இந்த அவையிலே இருப்பார்கள் என்று நான் மிகப் பெருமையாகக் குறிப்பிட்டிருந்தேன். அத்தகைய அவையினைக் களங்கப்படுத்துகின்ற விதமாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இந்த அவையில் நடந்துகொண்டது, மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதனையும், இதே அவையில் அவர்கள் வந்தால், முறையாக நடந்து கொண்டால் எப்படிச் சிறப்பாக அவர்கள் நடத்தப்படுவார்கள் என்பதற்கு, அன்றைக்கு முன்னாள் முதலமைச்சர் வந்தபோது, நாம் நடந்துகொண்ட விதம், இந்த அவை நடந்துகொண்ட விதம், சாட்சியம் கூறும் என்பதை நான் மீண்டும் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், ஒரு கண்ணியம் மிக்க, ஜனநாயக மரபுகளைக் கொண்ட இந்த அவையில், எதிர்த்துப் பேசினாலும் அதற்கு வாதத்திற்கு வாதம் பேசக்கூடிய முதலமைச்சர், தன்னுடைய சொல் திறமையிலே நம்பிக்கையுடைய முதலமைச்சர், வல்லமையுடைய முதலமைச்சர், இங்கே இருக்கின்ற காரணத்தால் எந்த வாதத்தையும் எதிர்கொள்ளக்கூடியவராக அவர் இருக்கின்றார். ஆகவே, வருகின்ற தொடரிலே, பட்ஜெட் தொடரிலே வருகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுடைய வாதங்களைத் திறமையாக எடுத்து வைப்பார்கள் என்றால், அதற்குண்டான பதில்களை அவர்கள் ஜனநாயக முறைப்படி பெறுவார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.



பொதுவாக இந்தப் பேரவை, ஒரு பொற்காலத்திலே அமைந்திருக்கிறது. மத்தியிலே நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும், அன்னை சோனியா காந்தி அவர்களும் ஒன்றாக இணைந்து செயல்பட்டதன்விளைவாக இன்றைக்கு ஒரு வல்லமை வாய்ந்த ஒரு மத்திய அரசு அமைந்திருக்கிறது. உலக அரங்கிலே மிகப் பெரிய ஒரு வல்லமை பெற்ற நாடாக, இந்தியா உற்று நோக்கப்படும் அளவுக்கு, ஒரு மிகப் பெரிய வல்லரசாக இந்திய அரசு, இன்றைக்கு மத்திய அரசு அமைந்திருக்கிறது.

நம்முடைய பிரதாப் சிங் ரெட்டி அவர்கள், ஒரு மருத்துமனையினுடைய நிருவாக இயக்குநர், ஒரு கூட்டத்திலே குறிப்பிட்டார்கள். 'நாங்கள் எல்லாம் அமெரிக்கா செல்கின்றபோது, அங்கே வருகின்ற, அங்கே எங்களை வரவேற்கின்ற அமெரிக்க அதிகாரிகள் அல்லது அமெரிக்க அமைச்சர்கள் என்ன கூறுவார்கள் என்று சொன்னால், நீங்கள் எதற்காக இரந்து வந்திருக்கின்றீர்கள்; What have you come for begging?' என்று கேட்பார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்குப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களோடு, அந்தக் குழுவோடு நாங்கள் செல்கின்றபோது,—"What we can work together?—நாம் என்ன சேர்ந்து செய்யலாம்?" என்ற அளவுக்கு அவர்கள் கேட்கின்றார்கள் என்று சொன்னால், இந்த அரசு, இந்தியாவினுடைய வல்லமை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை அவர்கள் அழகாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதைத்தான் நான் இங்கே நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அமைந்திருக்கின்ற நம்முடைய மத்திய அரசு எத்தகைய செயல்களை நிறைவேற்றியிருக்கின்றது என்பதை நாம் நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். உயர்தனிச் செம்மொழியாக நம்முடைய தமிழ்மொழி ஆக்கப்பட வேண்டுமென்ற பல்லாண்டுக் கால கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்றைக்கு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய துணையோடு, அன்னை சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலோடு, பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் அந்த அருமையான காரியத்தை, வரலாற்றுக் காரியத்தைச் செய்திருக்கின்றார்கள்.

சேது சமுத்திரத் திட்டம், ஏறக்குறைய பல்லாண்டுகளாக நம்முடைய தமிழனுடைய கனவாக இருந்த திட்டம், இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்படிப் பல திட்டங்களைச் சொல்லலாம். இன்றைக்குத் திறமைவாய்ந்த அமைச்சர்கள் யார் என்று சொன்னால், தமிழக அமைச்சர்கள் முன்னே நிற்கின்றார்கள். புள்ளிவிவரங்கள்

எடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் இன்றைக்குத் திறமைவாய்ந்த அமைச்சர்களாக இருக்கின்றார்கள். மாண்புமிகு தயாநிதி மாறன் அவர்கள், இன்னும் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், இப்படி இருக்கின்ற அமைச்சர்கள் எல்லாம், இன்றைக்குத் திறமை வாய்ந்த ranking என்று சொல்லப்படுகின்ற அந்த அளவிலே, மிக உயர்ந்த நிலையிலே வைத்துப் போற்றப்படுகின்றார்கள். ஆனால், இதையெல்லாம் மறுத்துப் பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால், கடந்த இரண்டாண்டுகளாக, தமிழகத்திற்கு வர வேண்டிய நன்மைகளை இழந்ததுதான் நம்முடைய தமிழகத்திற்குக் கிடைத்த நன்மை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இயைந்து போகாத, அதாவது இயல்பாக மத்திய அரசோடு ஒத்துப்போகாத ஒரு மாநில அரசு, எத்தகைய நஷ்டங்களைத் தாங்கும் என்பதற்கு, முன்பு ஆண்ட நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சிறந்த எடுத்துக்காட்டு என்பதை இங்கே நான் கூற விரும்புகிறேன். எதை எடுத்துக் கொண்டாலும் மறுப்பு. ஏட்டிக்குப் போட்டியாகப் பேசி, இப்படி வருகின்ற நன்மைகளையெல்லாம் மறுத்து, நம்முடைய தமிழக மக்களுக்கு நஷ்டத்தை உண்டாக்கிய அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

பொதுவாகவே விடுதலை என்று வருகின்றபோது, அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, சமூக விடுதலை என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். அதிலே சமூக விடுதலை என்பது என்ன என்பதனை நம்முடைய முதல்வர் அவர்கள் மிக அருமையாக இங்கே நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். யாரும் எந்த ஜாதியினரும் இந்துக் கோயில்களிலே, அர்ச்சகர் ஆகலாம் என்ற அந்தத் திட்டம் இருக்கிறதே, அன்றைக்கு 'ஆரிய மாயை' என்று அண்ணா அவர்கள் எழுதிய காலந்தொட்டு, இன்றைக்கு வருகின்ற அந்த வரலாற்றினுடைய முத்தாய்ப்பாக, அந்த நிகழ்ச்சியை அவர்கள் அந்தச் செயல்களிலே செய்திருக்கின்றார்கள் என்று நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், எல்லோரும் ஓர் நிலை, எல்லோரும் சமம் என்பதனை அவர்கள் செயலிலே, சட்ட வடிவிலே இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள் என்று சொன்னால் அதைப் பாராட்டாமல் யாரும் இருக்க முடியாது.

*பிற்பகல் 1–10*

அத்தகைய அற்புதமான ஒரு காரியத்தினைக் கலைஞர் அவர்கள் செய்திருக்கின்றார்கள். தேர்தல் வாக்குறுதிகளை நிர்ணயம் செய்து



வெளியிட்டு இருக்கின்றார்கள். நான் விரைவில் செய்கிறேன் என்றால், நாளைக்குச் செய்கிறேன் என்று சொன்னால், ஒரு கால நிர்ணயம் கிடையாது. ஒரு தேதியைக் குறிப்பிட்டு, இந்த வாக்குறுதி இந்தத் தேதியில் நிறைவேற்றப்படும் என்று சொல்வது என்பது, மிகப் பெரிய புரட்சியான ஒரு காரியம். ஜூன் 3 ஆம் தேதி அவருடைய பிறந்த நாள்; அதை உங்களைப் போலவே, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைப் போலவே, தமிழக மக்கள் எதிர்பார்ப்பதைப் போலவே, நல்லுலகம் எதிர்பார்ப்பதைப் போலவே, எல்லோரும் எதிர்பார்த்து இருக்கிறார்கள். ஏழை மக்கள் எல்லோரும் எதிர்பார்ப்பதும், இன்றைக்கு கிலோ 2 ரூபாய்க்கு அரிசி வழங்கப்படும் என்ற நன்னாளினை, அவர்களுடைய பிறந்த நாளினை, எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய மிகச் சிறந்த காரியத்தினைக் கலைஞர் அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றி இருக்கின்றார்கள்.

அதேபோல, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த நாளான ஜூலை 15 ஆம் தேதி, கல்வி வளர்ச்சி தினமாக அறிவிக்கப்பட்டு, அன்றையதினத்திலிருந்து சத்துணவிலே வாரத்திற்கு இரு நாள் முட்டை வழங்கப்படும் என்று அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

அதேபோல, பெரியார் பிறந்த தினம், அண்ணா பிறந்த தினம் போன்ற அந்த இரண்டு தினங்களையும் ஒட்டி, முப்பெரும் விழாவினையொட்டி, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று அறிவித்து இருக்கின்றார்கள். இப்படி தேதி நிர்ணயித்து வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற அரசு, இந்த அரசாகத்தான் இருக்கும் என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

அதே நேரத்திலே, நம்முடைய முந்தைய அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட காலத்திலே, பாதிக்கப்பட்ட மாணவர்களைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். 15 சதவீதம் கிராமப்புற மாணவர்கள் தொழிற் கல்வியிலே முன்னுரிமை பெறுவார்கள் என்று கலைஞர் அவர்கள், தன்னுடைய பதினோராவது சட்டப் பேரவை காலத்தின்போது போட்ட ஆணையை அவர்கள் குளறுபடி செய்து, செல்லுபடியாகாமல் தடுத்து விட்டார்கள். அந்த ஆணையினைத் திரும்பவும் மிகப் பெரிய அளவிலே திட்டமிட்டு, immunity என்று சொல்லப்படுகின்ற எந்த ஒரு சட்டமும், எந்த ஒரு கோர்ட்டும் தலையிட முடியாத அளவிற்கு, ஒரு மிகப் பெரிய செயல் திட்டத்தை வகுத்து, திரும்பவும் அந்த 15 சதவீதம் கிராமப்புறங்களுக்கு வழங்கப்படுகின்ற

வாய்ப்பினை நீங்கள் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்று சொன்னால், 'சாம்பார் நன்றாக இருக்கிறது என்று சொல்லி, மாமியார் அதிக உப்பை போட்டுக் கெடுத்த' காரியத்தை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்திருக்கிறது. ஆகவே, அந்த அருமையான ஒரு திட்டத்தினை நீங்கள் திரும்பவும் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்கு, மத்திய அரசின் நிறுவனங்களான, IIT, IIM போன்ற நிறுவனங்களில், *27* சதவீத ஒதுக்கீடு, OBC என்று சொல்லப்படுகின்ற பிற்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற திட்டத்தினை மத்திய அரசு பிரேரணை செய்திருக்கிறது. அவர்கள் திட்டமிட்டிருக்கின்ற அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக, நம்முடைய பேரவை மிக விரைவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை நிறைவேற்றுகின்றமுகத்தான் இதைச் செய்ய வேண்டும். ஏன் என்று சொன்னால், ஒரு தேர்தல் அறிக்கையிலே இவ்வாறு வந்திருக்கின்றபோது, IIT போன்ற நிறுவனங்களிலே செயல்படுகின்ற உயர்சாதிக் குழுவினர் எத்தனை பேர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர் என்ற கணக்கைப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே அந்த அளவிற்குப் பெரிய சமூக மாற்றம் நிகழாமல் இருந்திருக்கின்றது என்பதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும். அத்தகைய சமூக மாற்றத்தினை நிகழ்விக்கின்ற, அந்த *27* சதவீத ஒதுக்கீட்டினை வலியுறுத்தும் தீர்மானத்தினை இந்தப் பேரவை, மிக விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பாலாற்றின் குறுக்கே பாலம் என்று சொல்லப்படுகின்ற, அந்தப் பாலத்தினைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆந்திரத்தில் ஆளுகின்ற அரசு காங்கிரஸ் அரசு. பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டப்படுகிறது. மன்னிக்கவும்; Check Dam—அணை கட்டப்படுகிறது. அங்கே ஆளுகின்ற அரசு நம்முடைய தேசிய காங்கிரஸ் ஆளுகின்ற அரசு; நம்முடைய டாக்டர் ராஜசேகர ரெட்டி அவர்கள் முதல்வராக இருக்கின்ற அரசு. இதிலே பாதிக்கப்பட்ட ஒரு நிலைமை, எங்களுடைய பள்ளிப்பட்டு தொகுதியிலே இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். குசஸ்தலை ஆற்றின் அருகே அவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்பாக, அண்ணாவின் தலைமையிலிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு முந்தைய காலத்திலேயே, அவர்கள் எங்களுடைய மேற்குப் பகுதியிலே கட்டிய அணைக்கட்டின் விளைவாக, எங்களுடைய பகுதியிலே நீர்வரத்து குறைந்து குடிநீர் வரத்துகூட எங்களுக்குக் கிடையாது. அதாவது, பாலாற்றின் basin நடுவிலே எப்படி





நீங்கள் குடிநீர் எடுக்கிறீர்களோ, அதேபோல, குசஸ்தலை ஆற்றின் நடுவே அல்லது basin நடுவே, அதனுடைய ஆற்றின் கரையின் நடுவேதான், நாங்கள் குடிநீரை எடுக்கின்றோம். அந்த நிலைமைகூட எங்களுக்குக் கிடையாது என்பதை நான் இங்கு பதிவு செய்கின்றேன். அத்தகைய நிலைமை பாலாற்றுப் பக்கத்திலே வசிக்கின்ற கிராமங்களுக்கு, ஊர்களுக்கு ஏற்படக் கூடாது என்பதற்காக மிகச் சாமர்த்தியமாகக் கையாண்டு, எந்த மோதல் போக்கையும் கையாளாமல், நல்ல அணுகுமுறையோடு, இசைவோடு கலந்து கொண்டு அதை மிகத் திறமையாக கையாள வேண்டும் என்று நான் இங்கே முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. அவர்களுடைய அனுபவம், அவர்களுடைய அனுபவச் செறிவு, இந்தியாவில் இருக்கின்ற எந்தத் தலைவருக்கும் கிடையாது என்பது எனக்குத் தெரியும். ஆகவே, மிக அற்புதமாக இந்தப் பிரச்சனையை அவர்கள் கையாளுவார்கள் என்று நான் நம்புகின்றேன். ஏன் என்று சொன்னால், பாலாறு என்பது, நம்முடைய வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல; எங்களைச் சுற்றி இருக்கின்ற கிராமங்களிலேகூட இருக்கிறது. பாலாற்றின் நடுவே நாங்கள் இருக்கின்றோம். ஆகவே, இந்த அணையினைத் தடுத்து நிறுத்தி அல்லது பங்கு கேட்டு, எப்படியோ அதை வகைப்படுத்தி செய்யக்கூடிய திறமை படைத்தவர் நம்முடைய கலைஞர் அவர்கள். ஆகவே, அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–15*

பொதுவாக, நுழைவுத் தேர்விலே, Common Entrance Exam என்று சொல்லப்படுகின்ற அந்த நுழைவுத் தேர்விலே, சென்ற அரசு செய்த கோளாறு மாதிரி யாரும் செய்ய முடியாது. 'குரங்கு கையிலே பூமாலை' என்று அவர்கள் ஏதோ சொன்னார்களே, அது அவர்களுக்குத்தான் பொருந்தும்; நமக்குப் பொருந்தாது. அப்படி மிகப் பெரிய கொடுமையை அவர்கள் மாணவர்களுக்குச் செய்தார்கள். உண்டு என்றார்கள், இல்லை என்றார்கள், சுப்ரீம் கோர்ட் என்றார்கள், எத்தனையே கோளாறுகள், எவ்வளவு கோளாறு செய்ய வேண்டுமோ அவ்வளவு கோளாறுகளை, பிரச்சினைகளை உண்டாக்கி, நம்முடைய மாணவர்களுக்கு, மாணவர்களைப் பெற்ற பெற்றோர்களுக்கு, மிகப் பெரிய தலைவலியை அவர்கள் கொடுத்தார்கள். இப்போது Common Entrance Exam எனப்படுகின்ற பொது நுழைவுத் தேர்வு கூடாது என்பதிலே எங்களுடைய

இயக்கத்திற்கும், உங்களுக்கும் எந்தவொரு ஐயப்பாடும், சந்தேகமும் கிடையாது. ஆனால், அதைச் செய்கின்றபோது, எந்தவொரு நீதிமன்றக் குறுக்கீடும் வராதபடி, மிகச் சிறப்பான ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டி, சட்ட நிபுணர்களோடு கலந்து பேசி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, மோனோ இரயில் என்று சொல்லப்படுகின்ற அந்தத் திட்டத்தை அவர்கள் மிகப் பெரிதாகப் பேசினார்கள். இன்றைக்கு மெட்ரோ இரயில் திட்டம் பற்றி நம்முடைய அறிவிப்பு வந்திருக்கிறது. மெட்ரோ இரயில் திட்டம் என்பது மிகப் பெரிய அளவில், வெற்றிகரமாக புதுடெல்லியிலும், கொல்கத்தாவிலும் மிகவும் அற்புதமாகச் செயல்படுத்தப் பட்டிருக்கிறது. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற—அன்றைய மேயர்—நம்முடைய வணக்கத்திற்குரிய ஸ்டாலின் அவர்கள், இந்த நகரிலே மேம்பாலங்கள் கட்டுகிறபோது, பல சந்தேகங்களைப் பலர் எழுப்பினார்கள். ஆனால், அந்த மேம்பாலங்கள் இன்றைக்கு எவ்வளவு பயன்படுகின்றன என்று சொல்லப்போனால், congestion என்ற சொல்லப்படுகின்ற அந்த traffic, அந்தப் போக்குவரத்து நெரிசலை மிகப் பெரிய அளவிலே குறைத்திருக்கிறது. அந்த மிகப் பெரிய ஒரு திட்டத்தை அவர்கள் நிறைவேற்றினார்கள். அதேபோன்று, இந்த மெட்ரோ இரயில் திட்டத்தை அமல்படுத்துகின்றபோது, மிகச் செம்மையாக, நெரிசல் உள்ள பகுதிகளை ஆய்ந்து, இருக்கின்ற மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவண்ணம் நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குப் புதுடெல்லியிலும், கொல்கத்தாவிலும் மிகப் பெரிய வெற்றியை அந்த மெட்ரோ இரயில் திட்டம் ஈட்டியிருக்கிறது. அந்த அருமையான திட்டத்தை நீங்கள் செயல்படுத்த வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், வணக்கத்திற்குரிய திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், நேற்றையதினம் ஒரு விழாவிலே சொல்கின்றபோது, 6 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்றும், 40 ஆயிரம் இணைப்புகள் விவசாயத்திற்கு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மகிழ்ச்சியான ஓர் அம்சம். அதை நான் வரவேற்கின்றேன். அதேநேரத்திலே, ஆளுநர் உரையிலே நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் என்று குறிப்பிட்டிருப்பது, அங்கே தவறு இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெசவாளர்கள்மேல் மிகவும் கருணை உள்ளவர்கள். தம்முடைய



தோள்களிலே சுமையாகத் தூக்கி, அன்றைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே விற்று, நெசவாளர்களுக்குத் துணை செய்த இயக்கத்தினர் திராவிடக் கழக இயக்கத்தினர் என்பதை நான் இங்கே மறக்கவில்லை. அத்தகையவர்கள், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத்தை, குறிப்பாக விசைத்தறி, கைத்தறி போன்ற நெசவாளர்களுக்கு, குறிப்பிட்ட அளவிற்கு ஓர் அளவுகோல் வைத்து, நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையிலே, தேர்தல் வாக்குறுதியிலே, விடுபட்ட ஒரு முக்கியமான அம்சம் இந்த இலவச மின்சாரம் என்பதனை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இதிலே பொருளாதாரச் சுமை இருக்கலாம். இருந்தாலும்கூட, எதையும் சமாளிக்கக்கூடிய திறமை படைத்த முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய சாமர்த்தியத்தை, தன்னுடைய திறமையை இந்த விஷயத்திலே புலப்படுத்தி, எங்களுக்கு, நெசவாளப் பெருமக்களுக்கு உதவ வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மணல் விஷயத்தைப் பற்றி நான் குறிப்பிடவேண்டியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, இந்த மணற் கொள்ளை என்பது, மிகப் பெரிய அளவில், எப்படி ஒரு காலத்திலே சாராயத்தில் சம்பாதித்தார்களோ, அதுபோல மணலிலே சம்பாதிப்பவர்கள்தான் இன்றைக்கு அதிகம். திடீர் பணக்காரர்கள் என்பவர்கள் அவர்கள்தான். ஆனால், இதை எப்படித் தடுக்கலாம் என்பதைத் தீர ஆலோசித்து, ஒரு நிரந்தரத் தீர்வினை இந்த அரசு காண வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். Salt Corporation —உப்பு நிறுவனத்தை நம்முடைய அரசு ஏற்கெனவே வைத்திருக்கிறது; கையாண்டு கொண்டிருக்கிறது. அதுபோல, Sand Corporation— மணல் வாரியம் என்பதை அறிவித்து, ஒரு I.A.S. அதிகாரியை அல்லது திறமைவாய்ந்த பொதுப் பணித் துறை அல்லது Mines and Minerals Department–ஐச் சார்ந்த அதிகாரிகளைக்கொண்டு, மிகப் பெரிய ஒரு திட்டத்தை, நிரந்தரமான தீர்வினை நீங்கள் அவையில் அறிவிக்கவேண்டும். ஏனென்று சொன்னால், ஒரு தாசில்தாரரையே அல்லது R.D.O–வையே கொலை செய்கின்ற அளவிற்கு நிகழ்வு, இந்த மணல் விஷயத்திலே நடந்திருக்கிறது. இதெல்லாம் வரலாறு. ஆகவே, இந்த மணல் விஷயத்தைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

கட்டுமானப் பணிகள் என்பதுதான் இன்றைக்கு வளர்ச்சிக்கு அடையாளம். கட்டுமானப் பணிகள் இல்லாமல் எந்தவொரு கிராமமும் கிடையாது; நகர்ப்புறமும் கிடையாது. மணல் இல்லாமல் இருக்கமுடியாது. குறிப்பாக, என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியைச் சொல்லப்போனால்கூட, எங்களுடைய பள்ளிப்பட்டு தொகுதியிலே —authorised— அங்கீகரிக்கப்பட்ட மணல் குவாரிகள் கிடையாது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். எப்படி வருகிறது என்று சொன்னால், நீங்கள்தான் யூகிக்கவேண்டும். அதாவது, வண்டி மணல் வந்து அதைச் சாதிக்கிறதா அல்லது வேறு மணல் வந்து சாதிக்கிறதா என்பதை உங்களுடைய யூகத்திற்கே விட்டுவிடுகிறேன். ஆகவே, இந்த மணல் விஷயத்தைப் பொறுத்தவரையிலே, ஒரு சீரிய சிந்தனையை இந்த அரசு செலுத்தி, அதை மிகச் சிறந்த அளவிலே கையாண்டு, நிரந்தரத் தீர்வு காண வேண்டுமாய் நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வாய்ப்பாட்டை ஒப்புவிப்பதைப் போல, பொதுப் பணித் துறையைச் சார்ந்த அத்தனை திட்டங்களையும் ஒப்புவிப்பார். அந்த அளவிற்கு மிகத் திறமை வாய்ந்த, அதாவது, அனுபவத் திறமை வாய்ந்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், தமிழக முதலமைச்சர் அவர்களும் இதைக் கலந்தாலோசித்து, ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–20*

திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று பலமுறை நாம் இந்த அவையில் வலியுறுத்தி இருக்கின்றோம். அதை அறிவிப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு ஆவன செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அதேபோல, திருமுருக கிருபானந்த வாரியாரைப் பொறுத்த வரையிலே, நம்முடைய உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள்; அவருக்கு மணிமண்டபம் கட்டுவதற்காக, நம்முடைய வாரியார் அவர்களுடைய பெயராலே அமைந்திருக்கின்ற ஓர் அமைப்புக் குழு, 10 ஏக்கர் நிலத்தைக் கேட்டிருக்கின்றது. அவர்கள் சொந்தச் செலவிலேயே மணிமண்டபம் அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அவர்களுக்கு 10 ஏக்கர் நிலத்தை, தகுந்த இடத்தில் நீங்கள் வழங்க உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





வாரியாருக்கும், கலைஞர் அவர்களுக்கும் பல காலங்களிலே கருத்திலே மோதல் ஏற்பட்டதுண்டு. ஆனால், அவருடைய நினைவாக அஞ்சல் தலை வெளியிட்ட பெருமைக்குக் கலைஞர் அவர்களும், தயாநிதி மாறன் அவர்களும்தான் காரணம் என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், யாருக்கும் யாரும் எதிரி அல்ல என்ற வகையிலே நிரூபித்துக் காட்டியிருக்கின்றவர் டாக்டர் கலைஞர் அவர்கள். சான்றோராய், ஆன்றோராய், அறநெறிச் சான்றோராய் வாழ்ந்தவர்களை வெறுப்பதற்கு ஒரு தடையும் கிடையாது என்பதனை, தமிழறிஞர்களைப் போற்றுவதிலும், சமய அறிஞர்களைப் போற்றுவதிலும் அவர்கள் பின்தங்கியவர் கிடையாது என்பதனைப் பதிவுசெய்யுமுகத்தான், திருமுருக கிருபானந்த வாரியாருடைய அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று முதலில் வற்புறுத்தி, முதலில் வெளியிட்டவரும் அவர்தான் என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன். அத்தகைய வாரியாருக்கு ஒரு சிறந்த மணிமண்டபத்தைத் தமிழகத்தினுடைய தலைநகரத்திலே ஏற்படுத்துவதற்கு, இந்த அரசாங்கம் 10 ஏக்கர் நிலத்தை உரிய குழுவிடம், அங்கீகாரம் பெற்ற குழுவிடம், அளிக்குமாறு கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய நீண்டகால கோ[illegible]கையான, சிட்டா நூலுக்கான 2 percent வரி அப்படிம்ய இருக்கிறது. விற்பனை வரி ஆந்திர மாநிலத்திலே இப்போது இல்லை. ஆனால், தமிழகத்திலே சிட்டா நூலுக்கான வரி இரண்டு சதவிகிதம் தொடர்ந்து விதிக்கப்படுகிறது. சென்ற நம்முடைய அரசும்கூட, பதினோராவது சட்டப் பேரவையிலே பதவியேற்ற நம்முடைய கலைஞர் அரசும்கூட செய்யவில்லை. ஆகவே, இந்தச் சிட்டா நூலுக்கான வரியினை நீக்குவதன்மூலமாக, கைத்தறி நெசவாளர்கள் நிரந்தர சிறப்பைப் பெறுவார்கள், வாழ்வைப் பெறுவார்கள்; ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு, நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், ரூபாய் 2 கோடியாகக் கேட்டபோது, கலைஞர் அவர்கள் இரண்டு காட்டி இப்படிச் சொல்வார்கள் என்று கேட்டார்கள். இப்படி இரண்டைக் காட்டினால் இப்பொழுதெல்லாம் இரட்டை இலையைச் சொல்வதில்லை. எல்லோருமே இரண்டு ரூபாய் கிலோ அரிசி என்றுதான் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு ரூபாய் கிலோ அரிசி வாங்குகின்றபோதுகூட தவறாக சிலபேர் இப்படிக் காட்டுகிறபோது, இது

வேறு எதையாவது குறிக்கிறதா என்று சொன்னால், இல்லை, இல்லை, இரண்டு ரூபாய்க்கு கிலோ அரிசி என்று கலைஞர் அறிவித்திருக்கிறார்; அதைத்தான் குறிப்பிட்டு அவர்கள் சொன்னார்கள். அந்த அளவிற்கு ஒரு கதாநாயகனாக, ஒரு தேர்தல் அறிக்கையினைத் தயார் செய்து, மிகப்பெரிய வெற்றியினைத் தந்த, நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினை வெற்றிபெறச் செய்த நம்முடைய கலைஞர் அவர்களுக்கும், அவருக்குத் துணை நின்ற அத்துணை கூட்டணித் தலைவர்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பள்ளிப்பட்டு தொகுதியைப் பொறுத்தவரையிலே, எங்களுக்கென்று நெடுஞ்சாலைத் துறையிலே ஒரு Sub-division கிடையாது. அதேபோல P.W.D. துறையிலே ஒரு Sub-division கிடையாது. பலமுறை தெரிவித்தும்கூட, நிதி நெருக்கடி என்று சொல்லி, அன்றைக்குப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு பொன்முடி அவர்களும், மாண்புமிகு துரைமுருகன் அண்ணன் அவர்களும் இதைச் செய்யவில்லை; இப்போது செய்வார்கள் என்று நான் நம்புகின்றேன். இது நீண்ட நாள் கோரிக்கை. ஏனென்றால், 1984–லே தாலுகாவாக, வட்டமாக அறிவிக்கப்பட்ட பள்ளிப்பட்டு இன்றைக்கு ஓர் அந்தஸ்தைப் பெற வேண்டும். வடக்கு எல்லையிலே, கடைகோடியிலே இருக்கின்ற எங்களை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் ஏற்கெனவே, சமத்துவபுரத்தைத் திறந்து வைக்க வந்திருந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம், இந்தத் தொகுதிக்கு வருகின்ற முதல் முதலமைச்சர் நீங்கள்தான் என்று குறிப்பிட்டுச் சொன்னேன். அவர் அதைப் பெருமையாகச் சொன்னார்கள். அந்தப் பெருமையைப் பெற்றிருப்பதில், நான் பெருமையடைகிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அளவிற்குத் தமிழகத்தினுடைய வடக்கு எல்லையில் இருக்கின்ற, ஆந்திர எல்லையோரம் இருக்கின்ற, எங்கள் பள்ளிப்பட்டு தொகுதிக்குத் தேவையான அந்தஸ்தினை, தேவையான அடிப்படை தகுதிகளை, நீங்கள் உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே உரிமையியல் நீதிமன்றம் கொடுத்த கலைஞர் அவர்களுக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த உரிமையியல் நீதிமன்றம் Civil Court; அதோடு நிற்கிறது. Magistrate Court—குற்றவியல் நீதிமன்றத்தை வழங்குவதற்கு சென்ற அரசு—even they have not considered—ஆலோசிக்கக்கூட இல்லை. ஆனால், நம்முடைய அரசு சென்ற முறை இருந்திருந்தால், நிச்சயமாக நிறைவேறி இருக்கும்.





இந்தமுறை அது நிறைவேறும் என்று நான் நம்புகின்றேன். அந்தக் குற்றவியல் நீதிமன்றத்தினைப் பள்ளிப்பட்டுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்த பேரவைத் தலைவருக்கும், பேரவைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை, மீண்டும் நாளை *(30–5–2006)* காலை *9–30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1–24* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*3. 2004–2005* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டுக் கணக்கு அறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [*2003* ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் *36/2003*) *104 (4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

— ஏதுமில்லை —

D
V24, 3, P06.
P06. 3. 1
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227073

அரசு மைய அச்சகம், சென்னை—600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.